பால பாரதி

3

மார்கழி

JL
811, N24BB
N24.1-3
160200

The "BALA BHARATI," Sheramadevi, S. I. R.

தபால் எண்—ம. கக௲அ/௦ வருஷச் சந்தா { உள் நாடு ரூ. ரு—௦ / வெளிநாடு ரூ. ௬—அ }

புத்தகம் க. பகுதி ௩.	மார்கழி, கலியப்தம் ரு௦உ௬.	தனிப்பிரதி அணா ௪௦.

ஆசிரியன்: வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

"பாலபாரதி"—மார்கழி

விஷய அட்டவணை

——(*)——

	பக்கம்
முகப்புப் படம்—அகலிகை சாப விமோசனம்	
அகலிகை சரண் புகல் (ஸ்ரீ சுத்தானந்த பாரதி)	கூரு
ஸம்ராட் அசோகன் (ஸ்ரீ மஹேச குமார சர்மா)	கூகூ
வைத்யுதம் (ஸ்ரீமான் ரா. அனந்தகிருஷ்ணன்)	எகூ
யோக ஸாதனம் (உத்தரயோகி ஸ்ரீ அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)	அச
மக்கள் அறம் (ஸ்ரீ சுத்தானந்த பாரதி)	அ,எ
பகவான் புத்தனும் மகாத்மா காந்தியும் (ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி பாடியது)	கூங
ராஜகோபாலன் கடிதங்கள்	கூச
தேசியக் கொடி (ஸ்ரீ திரு. வி. வாஸுதேவன் எழுதுவது) ...	க0க
வைரங்கள்	க0ச
கம்ப ராமாயணம் (வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்)	க0கூ
வர்கிலியன் (ஸ்ரீமான் சு. வையாபுரிப் பிள்ளை)	ககரு
ஆலோகன அவலோகனம்	ககஅ
புஸ்தக விமரிசனம்	கஉஅ

விளம்பர விகிதம்

ஒரு பக்கம்	ரூ. கஉ	அரைப் பத்தி	ரூ. கூ-கஉ
அரைப்பக்கம் அல்லது ஒருபத்தி	ரூ. எ-அ	காற்பத்தி	ரூ. உ—0

தொடர்ந்து விளம்பரஞ் செய்து முன் பணம் அனுப்பினால்:—

பக்கத்துக்கு... ...	ரூ. க0	அரைப்பக்கத்திற்கு	ரூ. ரு-அ
கால்பக்கத்திற்கு... ...	ரூ. கூ	அரைக்கால் பக்கத்திற்கு ...	ரூ. க-கஉ

விளம்பரம் செய்பவர் முந்துங்கள்!

பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

SILK PITAMBAR & Co.,
BENARES CITY

விக்ஞாபனம்

——(*)——

அன்பார்ந்த ஐயா

தங்களுக்கு அனுப்பப்பட்ட "பாலபாரதி" தங்களுக்குத் திருப்தி தந்திருக்கும் என நம்புகிறேன். வருகிற தைமீ முதல் இன்னும் அருமையான விஷயங்கள் வர இருக்கின்றன. சாவர்க்கார் சிறையிலிருந்து எழுதிய தேசபக்தி நிரம்பிய கடிதங்களை அவருடைய உத்தரவு பெற்று மொழி பெயர்த்து வர இருக்கிறோம். தவிர கஅ0 வருஷங்களுக்கு முன் ஐரோப்பியர் நம் நாட்டை ஆக்கிரமிக்கத் துவக்கின காலத்தில் புதுச்சேரியில் பிரெஞ்சு கவர்னராக இருந்த துய்ப்ளேக்ஸின் துபாஷி ஆனந்தரங்கப்பிள்ளை எழுதிவைத்த தினசரியானது அவர்கள் செய்த அநியாயங்களையும் கொடுமைகளையும் நம் முன்னோரின் அறியாமையையும் பிற சிறுமைகளையும் விளக்கி நம் நாடு அழிந்த வரலாற்றைக் காட்டுவதால் அதை வெளிப்படுத்தினால் படிப்போருக்கு நம் நாட்டுச் சரித்திரத்தின் பிரதானமான ஓர் பகுதி பசுமரத்து ஆணிபோல் அவர்கள் நெஞ்சில் பதியும் என மதித்து அத் தினசரி புத்தகத்தை பாலபாரதியில் பகுதி பகுதியாய் வெளிப்படுத்த இருக்கிறோம். தாங்கள் உடனே சந்தாத் தொகையை மணியாடர் செய்து இத்தகைய அரிய விஷயங்களை வெளிப்படுத்தும் ஆற்றலை எமக்குத் தருமாறு வேண்டுகிறோம். சந்தா அனுப்பாதவருக்குத் தை மாத முதல் பத்திரிகை நிறுத்தப்பட்டுவிடும்.

சேரமாதேவி }
தென் இந்திய இருப்புப்பாதை }

காரியஸ்தன்,
"பாலபாரதி"

600 008

சிறந்த தமிழ் நூல்கள்!

மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச்சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ் சலியாது சாத்வீக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ 0—அ—0

பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்பு மற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலை யின்றியும் கூக்குர விடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை பெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச் செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலைவிருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நாலின் நோக்கமாகும்.

விலை ரூ க—0—0.

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாசரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மன மயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் உண்டாகும்.

விலை ரூ 0—அ—0

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகனாகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழாரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் கைதொழு தேத்துவ ரென்பதையும் முன்னர் செய்த இரு வினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம் மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந் நூற்றுச் சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர். ந. பலராமய்யர் அவர்கள் எழுதியது.

விலை ரூ க—0—0

கிடைக்குமிடம்:-

வ. கணேசன் கம்பெனி
39, தம்பு செட்டித் தெரு, சென்னை.



அகலிகை சாப விமோசனம்

ஓம்

பாலபாரதி

புத்தகம் க. | மார்கழி, கலியப்தம் ருOஉச. | பகுதி ரு

அகலியை சரண் புகல்

——(*)——

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது.)

விண்ணொளி செய்த, பிழையை முனிந்து, விழையை வெறுத்த, முனிநாதன்,
கண்ணுயிரங்க ஞறவே கனன்ற, கணமெழன்னை யிங்கு சிலையாக்க,
மண்ணோடுழன்ற மறுவுற்றவென்னை, மலர்கொண்ட பாத மகரந்தம்,
பெண்ணுக்கு மென்னிற், புவிகேழ்வ வுன்றன் பெருமைப் பெருக்கை யென் சொல்கேன்.!

கார்கொண்ட மேனிக் கவினுற்ற சோதிக் கருணை மணக்கு கமலங்கள்
நேர்கொண்ட கண்ண! நிறைகொண்ட நேமி யிலகுங் காத்த! நின் மார்பில்
சீர்கொண் டிலங்கத் திரு வேட்கை யாகத் தெளிந்தோர் மனத்து மலர் சேர்ந்த
தார்கொண்டெனக்கு முயிரீந்த தாள்கள் தமியேன் விருப்பு! சரணென்றாள்.

மண்ணினுந் தாழ்ந்து நின்று, மமதையை விலக்கி, நெஞ்சில்
எண்ணிநின் பதங்க டம்மை, யிருந்தனன் பொறுமையாகப்
பண்ணிய நோன்பின் செய்ய பலனெனக் குதித்த தின்றே
நண்ணுதற்காக நல்லோர் நற்றவம் புரிந்த தாளா!

தொட்டது மென்றனை யுணர்ந்து, தூய்மையுற்
றிட்டன னுன்னடி யீந்த வென்றனை;
பட்டன வின்றொடு பழைய வெவ்வினை,
நட்டவர் வாழ்விற்கு நறவ மூட்டுவோய்!

சொல்லில் நெஞ்சிற் செயலினிற் றூய்மையாய்த்
தொல்லுலகிற்குத் தூண்டிய என்வினை,
ஒல்லையின் முடித் துன்னடி யுற்றிட,
நல்குவாய் வர மென்ன நவின்றனள்.

(பாரத சக்தி)

JL
211, N24B8
N24·1·3
160200

ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா எழுதுவது)

—————(*)—————

மூன்றாம் அத்தியாயம்

பிரமீலையின் கைவரிசை

அடுத்தநாள் பொழுது புலர்ந்தது. தினமணியின் கோமளச் செங்கிரணங்கள் மிருகேந்திரனது அரமனையின் மேல் பொன்முலாம் தீட்டலாயின. இந்திரபுரத்துப் படைவீரர் பௌத்த சேனையின் குழப்பத்தைக் காண வேண்டி உலாவித்திரியலாயினர். ஆனால் அவர்களுக்கு அசோகனது பொற்கிரீடம் ஒளியிடுவது ஓரிடத்தும் காணக்கூடவில்லை. பௌத்த சைனியத்தின் வாட்கள் இன்னமும் உறைகளிலேயே குறட்டைவிட்டுக்கொண்டிருந்தன. மகததேசத்து வெண்புகழ்ப்பதாகை இந்திரபுரத்துப் போர்க்களத்தில் பறந்துகொண்டிருப்பதாகத்தென்படவில்லை. இன்னமும் அது வேந்தன் அசோகனது பாசறையின் வெளிப்புறத்தேதான் பறந்து கொண்டிருந்தது. அசோகனது விருப்பம் இன்னதென்று மிருகேந்திரனால் அநுமானிக்க முடியவில்லை. அவன் பலமுறையும் மதிற் சுவரின்மேல் போய்ப் பார்த்து வருமாறு ஒற்றரை அனுப்பினான். ஆனால் அவர்கள், ‘எப்புறமும் அமைதியாகவே இருக்கிறது,’ என்பதைத் தவிர்த்து வேறு செய்தியொன்றும் கொண்டு வரவில்லை. அதன்மேல் மிருகேந்திர மன்னன் முடிவான செய்தி யாதெனத் தானேசென்று புலம் அறிந்து கொள்ளத் தீர்மானித்து, இந்திரபுரத்துக் கோட்டைச் சுவரின் மிக உயர்ந்த இடத்திற் சென்று, அசோகனது பாசறையின் பக்கம் கூடியமட்டில் கூரியப் பார்வையோடு ஏகாக்கிர சித்தத்துடன் நோக்கிய பொழுது, அவனுக்கு நாற்புறத்தும் அமைதியைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. மெல்ல மெல்ல நாலு நாழிகைப் பொழுதாயிற்று. அப்போதைக்கும் அசோகனது பாசறையில் எங்கணும் அமைதியாகவே இருந்தது. மிருகேந்திர மன்னன் இன்னமும் மதிற்சுவரின்மேல் உலாவிக்கொண்டிருந்தான். அவனுக்கு மகதநாட்டுச் சேனை திடீரென்று ஏன் மௌனவிரதம் பூண்டது, யுத்தம் ஏன் நின்றுவிட்டது, என்பது ஒன்றும் விளங்கவில்லை. வேந்தன் அசோகன் யுத்தத்தை நிறுத்திவிட்டு, தன் இராஜதானிக்குத் திரும்பிச்செல்ல உத்தேசித்திருப்பனென்று முதலில் அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. ஆனால் அசோகன் வெற்றி அல்லது மரணம் இவ்விரண்டைத் தவிர்த்து மூன்றாவது வஸ்து எதனையும் தன்னதாக அங்கீகரிக்கமாட்டானே என்று அவனது இருதயம் கூறிற்று. பிடிவாதங்கொண்ட பௌத்தர்கள் ஒருகாலும் போரில் முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டார்களென்று அவனுக்குத் திடமான நம்பிக்கை உண்டாயிருந்தது. இந்த அமைதிக்குக் காரணம் யாதாயிருக்கக்கூடுமென்று மிருகேந்திரனுக்குத் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. அதை அறிந்து கொள்ளவேண்டுமென்று அவனுக்குண்டாயிருந்த ஆவலின் மேலீட்டில் மந்திரி விசாகாநந்தனை ஆளனுப்பி வரவழைக்குமட்டுங்கூட அவனுக்குப் பொறுத்திருக்கக் கூடவில்லை. இச் செய்தியின் முடிவு எப்பொழுது தெளிவாய்த் தெரியும் என்பதிலேயே அவன் மனம் முழுதும் சென்றிருந்தது. ஆகவே அவன் தான் ஏறியிருந்த குதிரையை அந்த க்ஷணமே முடுக்கினான். அது மின்னல்வேகத்துடன் ஓடித் தன்தலைவனை இமைப்பொழுதில் விசாகாநந்தனது விசாலமாகிய மாளிகையின் முன் கொண்டுவந்து விட்டது.

மிருகேந்திரமன்னன் திடீரென்று வந்ததைக் கண்டு விசாகாநந்தனது சேவகர் திடுக்கிடவுமில்லை, தடுமாறவுமில்லை—விருத்தனாகிய மந்திரிக்குத் தன்னிடம் அடிக்கடி வரும்படி கஷ்டங்கொடுக்கக் கூடாதென்றெண்ணி மிருகேந்திரன் எத்தனையோமுறை தானே விசாகாநந்தன் இருக்குமிடத்துக்கு வந்து போவதுண்டு—இராஜதானி முற்றுகை யிடப்பட்டது முதற்கொண்டு மந்திரியின் இருக்கைக்கு அவன் அடிக்கடி வரவேண்டியதாயிற்று. இக்காரணத்தினால் விசாகாநந்தனுடைய சேவகர்களுக்கு மிருகேந்திரன் இவ்வாறு அகஸ்மாத்தாய் வந்ததனால் சிறிதேனும் ஆச்சரியமுண்டாகவில்லை. அதிக தடுமாற்றங்கொண்டவர்கள் சரீரத்தைப் பாதி வளைத்து - முழந்தாள்வரைத் தாழக் குனிந்து-அல்லது பிரஜ்ஞையற்ற நிலையில் அந்திய காலத்திற் போல் நெடுங்கடையாய்ச் சாய்ந்து அரசனை வணங்குவது வழக்கம். அவ்வாறு இச் சேவகர்கள் செய்யாமல் சிறிது தலை குனிந்து வணங்கினார்கள். இத்தகைய சமயங்களிலே உண்டாகிற மனத்தடுமாற்றத்தினால், பலகாலும் வியப்படைந்த வேலைக்காரரின் பார்வையில் அரசனுக்கும் குதிரைக்கும் பேதம் தெரிகிறதில்லை. அதனால் அவர்கள் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொள்வதற்கு மாறாக அரசனது உத்தரீயத்தைப் பிடித்துக்கொள்வதுண்டு. அப்படிப்பட்ட தடபுடலொன்றும் இப்பொழுது உண்டாகவில்லை. அவர்களுள் ஒருவன் முன்னே வந்து தாழ்மையுடன் குதிரையின்கடிவாளத்தையே தன் கையில் பிடித்துக்கொண்டான். இன்னொரு சேவகன் அரசனை விசாகாநந்தனிடம் அழைத்துச் சென்றான். அப்பொழுது அவனுக்கு மூச்சுத் திணரவுமில்லை; அப்படித்திணராத காரணத்தால் அவன் அரசனது பிருதாவளியை அடுக்கடுக்காய் உளறிக்கொட்டவுமில்லை; அவன் செயலற்று மெய்மறந்திருக்கவுமில்லை; ‘மௌனம் ஸர்வார்த்தஸாதகம்’ எனும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருக்கவு மில்லை.

விசாகாநந்தன் உட்கார்ந்துகொண்டு ஒற்றர்கள் சொல்லும் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். மிருகேந்திரன் வருவதைக் கண்டதும் சற்றே எழுந்து நின்று புன்னகையோடு அவனை எதிர்கொண்டேற்று உபசரித்தான்.

மிருகேந்திர மன்னன் பரபரப்புடன் பேசலுற்றான்:- “மந்திரியாரே! இன்று பௌத்தர்கள் முற்றிலும் அமைதியாகப் பாசறையில் உட்கார்ந்திருக்கிறார்களே, இந்த அமைதியின் கருத்து யாதாயிருக்கக்கூடும்?”

மந்திரி :—“மஹாராஜா, இந்த அமைதியானது நல்ல காலத்துக்கு லக்ஷணமாகத் தோற்றவில்லை. ஆனால் அசோக பூபதி சந்திசெய்துகொள்ளச் சித்தமாயிருப்பதாகவும், அதற்காகவே யுத்தத்தை நிறுத்தியிருப்பதாகவும், ஒற்றர் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்.”

“என்ன அசோக ராஜன் சந்தி செய்து கொள்ளச் சம்மதித்திருக்கிறானா? இந்த சந்தோஷச் செய்தியை யார் கொண்டுவந்தது?”

“பொறுங்கள், அதற்குள் வெகுமதி கொடுக்க ஆதுரப்படாதேயுங்கள். இந்தச் செய்தியை ஒரு ஒற்றனல்ல, பற்பல மாறுவேஷங்களோடு செல்லும்படி. என்னால் தனித்தனியே அனுப்பப்பட்ட எட்டுபத்து ஒற்றர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள்.”

“அப்படியானால், அவர்களெல்லோருக்கும் வெகுமதி அளிக்க வேண்டும்.”

“ஆனால் இந்தச் செய்தி பொய்யா யிருக்கவேண்டும். நம் கண்ணில் மண்ணைப் போடுவதற்கு இது அசோகன் செய்த சூழ்ச்சியே யன்றி வேறல்ல. இதில் எனக்கு எள்ளளவும் நம்பிக்கை உண்டாகவில்லை.”

“ஒருவனல்ல, இருவரல்ல, நம்பிக்கைக்குரிய எட்டு பத்துப்பேர் ஒற்றர்சொல்லும் செய்தியிலுமா தங்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை! மிதமிஞ்சிப் போய்விட்டதே தங்கள் சந்தேகப் பிரகிருதி!”

“எல்லா ஒற்றரும் ஒரே செய்திதான் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலிருந்தே அது உண்மையாயிருக்குமோ என்ற விஷயத்தில் எனக்கு சந்தேகம் உண்டாய் விட்டது; அன்றியும், சீக்கிரத்திலேயே நமக்கு ஏதோ ஒரு பயங்கரமான ஆபத்தை விளைக்க பௌத்தர்கள் கருதியிருக்கிறார்களென்றும் இப்பொழுது எனக்குத் தோற்றுகிறது. எதிரியின் ஆதிக்கத்துக்குட்பட்டு சந்தி செய்து கொள்வதென்பது எவ்விதத்திலும் திருப்திகரமானதன்று. வேறு விதியில்லாமற் போனால்தான் இப்பேர்ப்பட்ட காரியம் செய்யவேண்டியதாகும். இனி அந்த சந்திதானும் எப்பொழுது, எங்கே, நிச்சயிக்கப்படுமென்பதும் தெரியவில்லை. ஆனால் பௌத்தர்கள் மாத்திரம், “நாங்கள் சந்தி செய்துகொள்ள விரும்புகிறோம்,” என்று முகமலர்ச்சியோடு ஆனந்தமாய்ச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இதனாலேயே சந்திப் பேச்சு முழுவதும் பொய் என்று நான் சொல்லுகிறேன்.”

"இதுவரையிலும் பௌத்த சேனைக்கு அதிக அழிவு உண்டாயிருக்கிறது—நோயின் கோளாற்றினுல் ஆயிரக்கணக்கானவர் தினமும் மரணத்தின்வாய்ப் படுகிறுர்கள். இந்த சமயத்தில் இத்தனை உயிர்களையும் பறிகொடுப்பதைப் பார்க்கிலும் சந்தி செய்துகொண்டு திரும்பிப் போவதே உத்தமமென்று அசோகனது அபீஷ்டமா யிருக்கவேண்டும். ஆகையால் சந்திசமாசாரம் முற்றிலும் நடைபெறக்கூடாத செய்தியாயிருக்கக் கூடுமென்று எனக்குத் தோற்றவில்லை."

"இன்றுவரை அசோகன் எப்பொழுதாகிலும் பின்னே அடியெடுத்து வைத்ததுண்டோ? வெற்றிப் பெறுமல் மௌர்ய ஸம்ராட் எப்பொழுதாவது பகைவருக்குப் புறங்காட்டியதுண்டோ? மகதபூபதி எப்பொழுதாகிலும் சந்தியின் சொப்பனமாவது கண்டதுண்டோ?"

மிருகேந்திரமன்னன் இறுமாப்புடன் கூறலாயினுன்:- "கலிங்கர் கோமான் தன்மையும் இத்தகையதே என்பதில் சந்தேகமுண்டோ? அசோகன் இந்த யுத்தத்தில் பின்னிடவேண்டியவனே; வெற்றிப் பெறுமல் அவன் நமக்குப் புறங்காட்டி, பாடலிபுத்திரத்தை நோக்கி ஓடவேண்டியேவரும்; ஆகையால் இந்த மானச் செல்வனுகிய மிருகேந்திரனுடன் அவன் சந்தி செய்துகொள்வதைக்குறித்து விவகாரம் வைத்துக்கொள்ளாதிருக்க முடியாது. மந்திரியாரே, தாங்கள் இராஜநீதியறிந்தவராயினும், மஹா சந்தேக சுபாவமுள்ளவராயிருக்கிறீர்கள். என்னென்ன வீண்யோசனைகளெல்லாமோ செய்து நிஷ்காரணமாய் பீதியடைவது, ஜனங்களின் சுகத்தில் மண்ணைப்போடுவது, மீண்டும் தம்மையே மகாராஜநீதி விற்பன்னரென்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்வது—இதுதானே தங்களைப் போன்றவர்களின் ஸ்வபாவம்?"

மந்திரி சிறிது அருவருப்போடு சொன்னுன் :— "மகாராஜா, இந்த யுத்த விஷயமாகவே முன் ஒருதரம் தாங்கள் என் ஆலோசனையைக் கேலிசெய்து தட்டிவிட்டது ஞாபகமிருக்குமே."

"ஆம், ஞாபகம் இருக்கிறது. ஆகையினுலேயே இன்று சேனுவீரர் அனைவருக்கும் ஆநந்தோத்ஸவம் கொண்டாடும்படி அனுமதி யளிப்பதாக இருந்தவன் அதைநிறுத்திவிட்டேன். யுத்தத்தின் முடிவான நிலைமை இன்னதென்று நிச்சயமாய் ஏற்படுகிறவரையில் தங்கள் யோசனைப்படியே எல்லாக்காரியங்களையும் நடத்துவதென்று நிறுத்திவிட்டேன்."

"தாங்கள் சொல்வது உண்மைதானு?"

"இராஜா மிருகேந்திரன் ஒரே சங்கதியை இரண்டு தரம் சொல்லும் வழக்கமில்லையே."

"அப்படியானுல், மகாராணி இந்துமதியையும் அரசிளங்குமரி பிரணயினியையும் மாறுவேஷம் புனைந்து இராஜதானியிலிருந்து ஹரித்துவாரத்திலுள்ள சிதாநந்தஸ்வாமிகளின் ஆச்சிரமத்துக்குச் செல்லும்படி கட்டளை யிடுங்கள்."

"ஏன் அப்படிச் செய்யவேண்டும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் மிருகேந்திரன்.

"என் யோசனைப்படியே தாங்கள் எல்லாக் காரியங்களையும் செய்ய ஒப்புக்கொண்ட காரணத்தினுலேயே."

"இப்படி தங்களுக்கு உட்பட்டுத் தாங்கள் ஆட்டுகிறபடியெல்லாம் ஆடுவதற்கு நான் ஸித்தமாயில்லை—தேவியையும் பிரணயினியையும் நாடு கடத்தக் கட்டளையிடுவதற்கு வேறுபலமான காரணம் ஏதாவதுண்டா?"

"நான் நாடு கடத்தும் வார்த்தை சொல்லவில்லை. நான் சொல்வதெல்லாம்கூடி அவர்களது பாதுகாப்பின் பொருட்டு அவர்களை வேஷம் மாற்றுவித்து, நன்றுய்க் காவல் செய்யப்பட்டுள்ள இடத்துக்கு அனுப்புவிக்க வேண்டுமென்பதே."

"நன்றுய்க் காவல்செய்யப்பட்ட இடத்துக்குத் தானும் அவர்களை ஏன் அனுப்பவேண்டும்? அதற்கும் காரணம் எனக்குத் தெரியவேண்டுமே."

"காரணம் அசோகமகாராஜன் தங்களோடு சந்தி செய்து கொள்ளப் போவதாக வதந்தி உண்டாயிருப்பதுதான்."

சிறிது பெருமூச்செறிந்து மிருகேந்திரன் ஆச்சரியத்தோடு— "மந்திரியாரே, இன்று வரையில் பலமாய்க்

கோரயுத்தம் நடந்து வந்தது. எவர்க்கும் உயிர் தக்கும் என்ற நம்பிக்கை எள்ளளவும் இல்லாதிருந்தது. அப்போது மகாராணியையும் அரசிளங்குமரியையும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டுமென்னும் எண்ணம் தங்களுக்கு இவ்வளவு உண்டானதில்லை. இன்றைக்கோ எங்கும் அமைதி பரவியிருக்கிறது. சந்தியைப்பற்றி பலமான வதந்தி உலாவுகிறது. இப்பேர்ப்பட்ட சமயத்தில் அவர்களது பாதுகாப்பின் பொருட்டுத் தாங்கள் இவ்வளவு கவலை ஏன் கொள்ள வேண்டும்? பிரத்தியக்ஷ யுத்தத்தைவிட இந்த சந்தி செய்யப் போவதைப்பற்றிய சமாசாரம் தங்களுக்கு ஏன் இவ்வளவு பயங்கரமாயிருக்கிறது?"

மந்திரி விசாகாநந்தன் விளம்பலுற்றுன்:—"அசோக பூபதி நம்மோடு சந்திசெய்துகொள்வதாக இருக்கிறுனென்னும் இவ் வதந்தி பிரத்தியக்ஷயுத்தத்தைப் பார்க்கிலும் எவ்வளவோ மடங்கு பயங்கரமாகவேயிருக்கிறது. இதுவரையில் இருபக்ஷத்திலும் நேரான வழியைப் பின்பற்றிக் காரியம் நடந்துவந்தபடியால் பயப்படுவதற்கு யாதொரு காரணமும் இல்லாதிருந்தது. இப்பொழுதோ, இனி தமக்கு வெற்றி உண்டாகமாட்டாதென்று கண்டு, பௌத்தர்கள் நேரான வழியைவிட்டு சூழ்ச்சியும் வஞ்சனையுங்கொண்ட குடில மார்க்கத்தில் செல்லப் பார்க்கிறுர்கள். அவர்கள் நேர்வழியை நழுவவிட்டுக் கபடோபாயங்களைப் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். வஞ்சனைச் சூழ்ச்சிகளுக்கு ஆதி குருவும் குடிலராஜநீதிப்ரவர்த்தகனுமாகிய ஆரிய சாணக்கியனது உபதேசம் பாடலிபுத்திரத்து மௌரியர்களின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கிறது. இது முதல் அதை அநுசரித்தே காரியம் நடக்கப் போகிறது. மௌரியர்கள் யுத்தம் செய்யாமல் கேவலம் குடிலராஜநீதியின் பலத்தைக்கொண்டே அகில நந்த வம்சத்தையும் அழித்துவிட்டமை தங்களுக்குத் தெரியாததன்று. இப்பொழுது அதே மௌரியர்களின் ஈவு இரக்கமற்ற நெஞ்சத்தில் அஹிம்ஸைக் கொடியை உயர்த்துவோர்களெனப்படும் பௌத்த பிக்ஷுக்களின் அதர்மோபதேசம் புகுந்துவிட்டது. தர்மயுத்தத்தின் தத்துவங்களை அவர்கள் இனி காலால் மிதித்துத் தேய்த்து நசுக்கிவிடுவார்கள். யுத்தத்துக்குரிய நியமங்களை மனம்போனபடி கொலை செய்து விடுவார்கள். நீதி யென்பதை அநுதினமும் நிர்மூலம் செய்வார்கள். மகாராஜ, இது உண்மையான அமைதியன்று. பயங்கரமான புயற்காற்று அடிப்பதற்குமுன் மேகமண்டலத்தில் காணப்படும் அமைதியே இது."

விருத்தனுகிய விசாகாநந்தன் இவ்வாறு அடிவயிற்றிலிருந்தெழும் வியாகுலத்தோடுபேசிக்கொண்டிருந்தான். ஆனுல் இப்படிப் பயப்படுத்துவதே விசாகாநந்தனது ஸ்வபாவமென்று மிருகேந்திரன் எண்ணினுன். அவனது சரீரத்தில் உத்தம வீரனது தேஜஸ் ஒளி வீசிக்கொண்டிருந்தது. இராஜநீதி அறிஞனுடைய தூரதிருஷ்டியும் விவேக பரம்பரையும் பயங்கொள்ளித் தனமென்று அவன் புத்தியிற் பட்டது. தனது அவிவேகத்தின் துன்ப விளைவுகளை அவன் இது வரையில் எத்தனையோமுறை அநுபவிக்கவேண்டி வந்ததாயினும், அவனது ஆற்றலும் அதிகாரமும் அபாரமாய் இருந்ததுமன்றி, அவனை அவிவேகச் செய்கைகள் செய்யவொட்டாது அவனது மந்திரிமண்டலம் அனவரதமும் விழிப்போடு வர்த்தித்து வந்தமையால், தன் முன்யோசனையற்ற வார்த்தைகளுக்காக அவன் பச்சாதாபப் படவேண்டிய சமயமே அவனுக்கு நேரவில்லை. பிரதான மந்திரி எவ்வளவு சாவதானமாயிருப்பது அநாவசியமானதென்றும் பிரகிருத சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாததென்றுமே அவனது அபிப்பிராயம். ஆகவே மிருகேந்திரன் நாம் இப்பொழுது மனம்விட்டு மந்திரியுடன் ஒன்றும் சொல்லிவிடக்கூடாது; யோசனை பண்ணி பதில் சொல்லுகிறேனென்று அவனிடம் கூறுவோம்; பிறகு அந்தப்புரம் சென்று தேவியுடன் கலந்து யோசிப்போம்; அப்புறம் கடைசியாக இவனுடைய இந்த யோசனையை ஒழித்துவிடுவோம் என்று தனக்குள்ளேயே நிச்சயம் பண்ணிக்கொண்டு, மந்திரியை நோக்கி:—

"மந்திரியாரே, தங்கள் யோசனையைப்பற்றி தீர்க்காலோசனை செய்யவேண்டியிருக்கிறது," என்றுன்.

"இப்பொழுது எதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்? ஆலோசனை செய்யத்தக்க சமயமன்றிது. மகாராணியும் இராஜகுமாரியும் எவ்வளவு சீக்கிரமாய் இந்திரபுரத்தை விட்டுவிலகுகிறுர்களோ, அவ்வளவு உத்தமம். அவர்கள் இங்கே யிருக்கும் ஒவ்வொரு க்ஷணமும் மேன்மேலும் அவர்களை ஆபத்து சூழும்."

"மந்திரியாரே, தாங்களாகவே கற்பித்துக்கொண்ட இந்த ஸங்கடத்துக்கு உண்மையில் எவ்வளவு ஆதாரமிருக்கிறது, தங்கள் மனத்தில் அலையலையாய் எழும் இந்த விசாரங்களை அங்கீகரித்து எவ்வளவு மட்டிலும் அச்சங்கொள்வதற்கு நியாயமிருக்கிறது, என்பவற்றைப்பற்றி நான் ஆலோசித்தே ஆகவேண்டும்."

இவ்வாறு சொல்லிவிட்டு, இனி விசாகானந்தன் அதன் மேல் ஒன்றும் பேசுவதற்கு அவகாசம் கொடாமலே, மிருகேந்திரன் அவ்விடத்திலிருந்து சரேலென்று எழுந்துபோய்விட்டான். அரசன் அம்மாளிகையினின்றும் வெளியே வந்ததுதான் தாமஸம், அதற்குள் பதினறு வயதினளாகிய பாலகுமாரி ஒருத்தி அவனது கையில் ஒரு மடித்துமூடிய கடிதத்தைக் கொடுத்தாள். கடிதத்தைத்திறந்துகொண்டே அரசன் புருவத்தை நெறித்து, "யார் அனுப்பியது?" என்று கேட்பதுபோல் அந்த யுவதியை நோக்கினன். அவள், "பிரமீலா தேவி இக்கடிதத்தைத் தங்களிடம் சேர்ப்பிக்கும்படி எனக்குக் கட்டளை யிட்டார்கள்" என்று இனிய குரலில் கூறினள். கடிதத்தைப் படித்ததும் மிருகேந்திரனுக்கு நிரம்ப ஆச்சரியமுண்டாயிற்று. அவன் அதை மீண்டும் இரண்டு மூன்று தரம் திருப்பித் திருப்பிப் படித்தும், அவன் புத்திக்கு முன்னிலும் அதிகமாய் ஒன்றும்விளங்கவில்லை.

ஆழ்ந்த யோசனையோடு கூடிய முகத்தோற்றத்தோடு அவன் தனக்குள்ளேயே, "ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது! இராத்திரி இவ்வளவு நேரம் சென்றபிறகு, பிரமீலைக்கு என்னிடம் என்ன காரியம்?" என்று சொல்லிக்கொண்டு, பிறகு வெளிப்படையாய், "குமுதம், பிரமீலை வாய்மொழியாகவும் ஏதாவது சொன்னளோ?" என்று கேட்டான்.

"இல்லை மகாராஜா, இந்தக் கடிதம் கொடுத்ததைத் தவிர அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை."

மீண்டும் இமைப் பொழுதில், மிருகேந்திரமன்னன் ஏதோ யோசனை செய்துகொண்டு பரபரப்புடன் மொழியலுற்றான்—"நல்லது, நீபோய்ப்பிரமீலையுடன் சொல்லு, 'எந்த சமயத்திலும் நீ என்னை தாராளமாய் வந்து பார்க்கலாம். என்றாலும் இந்த அர்த்த ராத்திரி வேளையில் என்னை நீ ஏன் அழைக்கவேணும்? இதைப்பற்றி எனக்கு அதிக ஆச்சரியமாயிருக்கிறது. எவனாவது பயங்கொள்ளிப் பெயர்வழியாயிருந்தால், உன்னுடைய இந்த நடவடிக்கையிலே ஏதோ கபடச்சூழ்ச்சி இருக்கிறதென்று சமுசயிப்பான்.' ஆனால் என்னுடைய பிரமீலை, என் மகள் பிரணயினியின் தோழியாகிய பிரமீலை, ஏதோ சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்தாலொழிய இப்படி கடிதம் எழுதமாட்டாள். ஆகவே நான் அவளுடைய இஷ்டப்படியே, நிர்ணயிக்கப்பட்ட ஸ்தானத்துக்கு இன்று நடுநிசிக்கு வருவேன்," என வேலைக்காரியினிடம் சொல்லிவிட்டு, மிருகேந்திரமன்னன் அரமனையைநோக்கிக் குதிரையை முடுக்கிச் சிறிது நேரத்துக்கெல்லாம் கண்ணிலிருந்து மறைந்துபோனன். மிருகேந்திரனது செய்தியைக்கொண்டுசெல்ல, குமுதினிக்குத் தன் பெருமாட்டியினிடம் போகவேண்டியிருக்கவில்லை. பிரமீலை, பக்கத்திலேயே திரைமறைவில் ஒளிந்திருந்து, எல்லாப் பேச்சுக்களையும் கேட்டுக்கொண்டிருந்தாள்.

நேற்றிரவு இருந்ததுபோல் இன்று பிரமீலையின் வதனமதி மேகங்களால் மறைக்கப்பட்டிருக்க வில்லை. இன்று எவ்வகையான திரைச்சீலையும் அவளது சௌந்தரியத்தைத் தடைசெய்யவில்லை. அவளது சௌந்தரிய ஜோதி இன்று தன்னுரிமையுடன் திகழ்ந்தது. மகாராஜா இராத்திரி வருவதாக ஒப்புக்கொண்டதைக் கேட்டவுடனே, அவள் பரபரப்பாய்த் திரைமறைவினின்று வெளியே வந்தாள். தன் அழகை மிகைப்படுத்திக் காட்டுவதற்காக — பிரகடனம் பண்ணுவதற்காக—அவள் இன்று மிக்க பிரயத்தனம் செய்தாள். இந்தச் செய்தி அவள் அணிந்திருந்த ஆபரணங்களிலிருந்தும் செய்துகொண்டிருந்த சிங்காரத்திலிருந்தும் ஸ்பஷ்டமாய் விளங்கிற்று. அவளது சிவப்புக் குங்கும திலகம், அவளது ரோஜா நிறக் கபோலங்கள், அவளது இரத்த நிறத் திதழ்கள், அவளது அடிகளில் தீற்றிய மருதோன்றிப்பூச்சு—ஆகிய இவற்றின் சோபையானது அவளது வில்லென வளைந்த புருவக்கொடிகளாலும் அவிழ்த்துவிட்ட அளகபந்தியினாலும் இன்னும் அதிகமாய் மிளிர்ந்தது. கட்டழகியாகிய பிரமீலையின் அங்கங்கள் சித்திரத்தில் தீட்டியவைபோல் திகழ்ந்தன. அவளைச் சித்திரத்தில் கண்டால், காவியங்களில் காணலுறும் கற்பனைகளைக் கொண்டு வருணிக்க வேண்டுமென்று தோன்றும். 'அணங்குகொல் ஆய் மயில்

கொல்லோ' என்னும் பொதுமறையின் பொய்யாமொழி தானகவே நாவில் முன் வந்துறும். அவளைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துவிட்டால், சித்திரத்தில் கண்ட வடிவம் இவளுடையதாய் இருத்தலும் கூடுமோ என ஐயுறவு உண்டாகும். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் சூர்ப்பணகையை,

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடியளாகி,
அஞ்சொல் இளமஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

என்று வருணித்துக் கூறியது அவ் வரக்கிக்குப் பொருந்துவதைவிட இப் பிரமராட்சசிக்கே பன்மடங்கு நியாயமாய்ப் பொருந்துமெனத்தோற்றும். பிரமீலை இதுவரையில் பாலிகையாயிருந்தாள். இப்பொழுது தான் அவள் யௌவனமாகிய ஸரோவரத்தில் விளையாடத் தொடங்கியிருக்கிறாள். அவளது தந்தை மிருகேந்திரமன்னனுடையதர்ப்பாரில் ஓர் பெருமைபெற்ற ஸதஸ்யனாய் இருந்தான். அசோகனுடன் நடந்து கொண்டிருந்த இந்த யுத்தத்தின் முதற் பூசலிலேயே அவன் பிரமீலையைத் தனியாய் விட்டுவிட்டுத் துறக்க நாடடைந்தான். அதுமுதல் பிரமீலை கோமகள் பிரணயினியின் மஹலிலேயே மிருகேந்திரமன்னனது ஆதரவில் வளர்ந்து வந்தாள். இவ்விரண்டு தோழிகளின் இயற்கையிலும் பெரும்பேதம் காணப்பட்டது. அதைக் கண்டு மிருகேந்திரமன்னனுக்கு அதிக ஆச்சரியம் உண்டாகும். கோமகள் பிரணியினியிடம் விநயசீலமும் அன்பும் குடிகொண்டிருக்க, தாய்தந்தையரை யிழந்த பிரமீலைக்கோ கர்வமும் கடுகடுப்பும் தலைக்கேறியிருந்தன. பிரணயினி இராஜ போகத்தோடு செல்வத்தின்மடியில் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்டு வந்தும், அவளது சுபாவம் நிஷ்கபடமாயும் நேர்மையாயும் இருந்தது; மற்று வறுமையில் பிறந்து வளர்ந்த பிரமீலை அகந்தையே வடிவெடுத்தது போல் விளங்கினள். அரசிளங்குமரியாகிய பிரணயினியின் சௌந்தரியம் நிலவின் ஒளியை யொப்ப உள்ளத்துக்கு இன்பம் அளிப்பதாயிருந்தது; ஆனால் பிரமீலையின் அழகு நண்பகலின் வெய்யோனொளியை நிகர்த்து வாட்டுவதாயிருந்தது. பிரணயினியின் பிறழ்கின்ற விழிகளில் அவளது உள்ளத்தின் தூய்மையே ஒளி வீசாநிற்ப, பிரமீலையின் சுழலும் விழிவீச்சில் அவளது கூடமான அந்தரங்கமே பிரதிபலித்துத் தோற்றியது. பிரணயினியின் மத்தகஜம் அசைவது போன்ற மென்னடை திண்மையை உணர்த்தியது; பிரமீலையின் கஜகமனமோ பூமியையதிரச்செய்தது. இவ்விருவர் சுபாவங்களிலும் காணப்பட்ட இவ்வேற்றுமையானது பலநாளும் மிருகேந்திர மன்னன் சித்தவிநோதத்துக்குக் காரணமாயிருந்தது. பிதா தேகவியோகமடைந்த பிறகும், முன் அநுபவித்த ராஜதர்பாரின் கௌரவ மரியாதைகளை விட்டுவிடப் பிரமீலைக்கு மனம் வரவில்லை. அதுவேயுமன்றி, இன்னும் உயர் பதவியையும் அவளது உள்ளம் நாடியது. இராஜ குமாரனாகிய ஜிதேந்திரனை மணந்தால்தான் தன் வானுயர் மனோரதம் நிறைவேறுமென்று எண்ணி எண்ணி அவள் நெஞ்சம் துடித்தது. அதற்குரிய சூழ்ச்சிகளையும் செய்யலானாள். ஜிதேந்திரனை நேரில் கண்டு அவனுள்ளத்தைக் கொள்ளை கொள்ள நிச்சயித்தாள். ஆனால் ஜிதேந்திரனை எப்படி நேரில் காணக்கூடும்? இதுவே அவளுக்கு ஓர் அபாரமான பிரசினையாய்விட்டது. கோமகன் ஜிதேந்திரன் ஹரித்துவாரத்தில் சிதானந்த ஸ்வாமிகளிடம் கல்வி கற்றுவந்தான். அவனது கல்விப்பயிற்சி பூர்த்தியாகிற வரையில்—இன்னும் இரண்டொரு வருஷம் வரையில்—அவனை இராஜதானியாகிய இந்திரபுரத்துக்கு வரவழைக்கக் கூடாதென்று மிருகேந்திரன் எண்ணியிருந்தான். இதிலிருந்து இராஜதர்ப்பாரில் ஜிதேந்திரனது தரிசனம் கிடைப்பது சாத்தியமில்லை யென்று பிரமீலைக்குத் தோற்றியது. அரசன் ஜிதேந்திரனை இராஜதானியில் வரவிடாதிருந்தால், தானே ஹரித்துவாரத்துக்குப் புறப்பட்டுப் போகவும் பிரமீலை சாகசம் செய்யக் கூடியவளே. ஆனால் சிதாநந்த ஸ்வாமிகளின் ஆஜ்ஞை மிகக் கொடுமையானதென்றும், ஹரித்துவாரத்துப் பிரஹ்மசாரி ஆச்சிரமத்தில் மாதர்களின் நிழல் கூடப் பட வழியில்லை யென்றும் அவள் அறிவள். அவளது பேராசைக்கு எல்லையே இல்லையெனத் தோற்றியது. இரண்டு வருஷம் வரையில் காத்திருப்பது மிக அதிகமென்று நினைத்தாள். எவ்வகை நிச்சயம் செய்வதானலும் சீக்கிரத்தில் செய்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் தன் தோழியின் வாயிலாகத் தான் ஜிதேந்திரனை மணக்க எண்ணியிருப்பதை மிருகேந்

திரன் காதுக்கு எட்டச் செய்தாள். மிருகேந்திரன் இந்த ஆதரங்கொண்ட பெண்ணின் தூதுமொழியைக் கேட்டு மந்தஹாஸம் செய்தான். அதோடு அவளுடைய அவசரத்தைப்பற்றி அவளுடைய தோழியின் எதிரிலேயே அவளைப் பரிஹாசமுஞ் செய்தான். இதையறிந்து ரோஷக்காரியான பிரமீலை தனக்குப் பெருத்த அவமானம் இழைக்கப்பட்டதாக எண்ணி வெருண்டு ஆவேசத்தோடு அந்த க்ஷணமே அரசன் முன் வந்து, தன்னை ஆதரித்து வளர்த்துவரும் மிருகேந்திர மன்னன் முகத்தில் இடித்துறைப்பது போல், "நான் இந்தக் கலிங்க தேயத்துக் கோப்பெருந் தேவியாக, இவ் இந்திரபுரத்தின் இறைவியாக,இவ் வரண்மனையின் அரசியாக ஆகாமல் விடுவதில்லை," என்று சபதஞ்செய்தாள். அவளுடைய இவ் வெறிப்பிதற்றலைப்பற்றி மிருகேந்திரமன்னனுக்குப் பின்னும் சிரிப்பு வரவும், அவன் எழுந்துபோய்விட்டான். இது நிகழ்ந்த சுமார் ஒரு மாசத்துக்குள் மந்திரி விசாகாநந்தனது ஆறும் பத்தினி பாகதியடைந்தாள். அந் தம்பதிகளுக்கு ஒரே புத்திரன் இருந்தான். அவனும் அரசிளங்குமரன் ஜிதேந்திரனும் ஒத்த வயதினர். ஆனால் தரும சாஸ்திரத்தின்படி பிரதான மந்திரி மீண்டும் விவாகம் செய்துகொள்ளவேண்டுவது அவசியமாயிருந்தது. அக்கணமே பிரமீலை தன்னுடைய மனோரதம் நிறைவேறுவதற்கு இவ் வரனை மணப்பதே தக்க உபாயமெனத் தேறி, பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி, தானே சுதந்திரமாய்ப் பிரவர்த்தித்து, விசாகாநந்தன் கழுத்தில் மணமாலையிட்டாள். அப்படி செய்வது உசிதமன்றென மிருகேந்திர மன்னனும் அவளது பிரிய சகியாகிய பிரணயினியும் எவ்வளவோ தடுத்துரைத்தனர், நயந்து கூறினர், உபதேசம் பண்ணினர். அவளது ஏவலாளரும் பாங்கிமாருங்கூட அவளோடு மன்றாடிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். ஆயினும் அதையெல்லாம் அவள் நிர்தாக்ஷிண்யமாய் உபேக்ஷை செய்துவிட்டு, தன்னிலும் நான்மடங்கு பிராயங்கொண்டவனும், இந்த சம்பந்தத்தை ஆக்ஷேபிப்பது போலும் நடுக்கமுற்ற கழுத்தினனுமாகிய விருத்தன் விசாகாநந்தனையே தன் பிராண வல்லபனாக வரித்துக்கொண்டாள்! அந்தப் பிரமீலைதான் இவள், —அவகுண்டனத்தினால் தன் முகத்தை மூடிக்கொண்டு, ஸம்புஷ்டாசாரியனோடு தான் செய்துவரும் சூழ்ச்சி மர்மமாகவே இருக்கிறது, ஒருவருக்கும் அதன் குறிப்பு தெரியாது, என்று எண்ணிக்கொண்டு இந்திரபவன குஹையில் நிகழ்ந்த மந்திராலோசனை மன்றத்தில் உட்கார்ந்திருந்த அந்த யுவதியே இந்தப் பிரமீலை.

திரைமறைவிலிருந்து வெளியே வந்ததுதான் தாமசம், பிரமீலை சரேலென்று விசாகாநந்தன் உட்கார்ந்திருக்கும் இடத்தின் பக்கம் திரும்பினாள். விருத்த விசாகாநந்தன் இதுவரையில் கோப்பெருந்தேவி இந்துமதியையும் கோமகள் பிரணயினியையும் பாதுகாக்க வேண்டிய விஷயமாய் யோசித்துக் கொண்டிருந்தான். ஒற்றர் தன்னிடத்தில் புதிய செய்திகளைச் சொல்வதற்காக ஆதுரத்தோடு காத்திருக்கிறார்களென்று எண்ணிக்கொண்டு அவன் நிமிர்ந்து பார்க்கவும், அவன் வாயிலிருந்து புறப்பட்டன, " சரி, பிற்பாடு என்ன?" என்னும் வார்த்தைகள். அதே க்ஷணத்தில் அவனெதிரில் தோன்றினாள் அவன் புதுமணஞ் செய்த ஸஹதர்மசாரிணி இரதியைப் போல் சிங்காரித்துக்கொண்டு. உடனே அவனது யோசனைகளெல்லாம் கலைந்து போயின. சிறிது மூடியிருந்த அவன் விழிகள் பொருக்கென மலர்ந்தன. மலர்ந்து, புவன மோஹினியாய் விளங்கும் தன் பத்தினியின் அடியிணைகளில் பதிந்து இன்பம் துய்த்தன.

"என் ஆருயிரே!"

இவ்வினிய மொழிகள் அவன் செவிகளில் விழுந்து எத்தனையோ வருஷங்களாயின. அவனது முதற் பத்தினியே இவ்வார்த்தைகளை ஒருநால் உச்சரித்திருப்பாளோ இல்லையோவென்பது சந்தேகம். அதற்குப் பிந்திய விவாகங்களில் அவனுக்கு ரஸிகைகளான காந்தாமணிகள் வாய்க்கவில்லை; வெறும் மனைவிமாரே கிடைத்தனர். ஆகையால் எத்தனையோ நாளாக இத்தகைய மதுர மொழிகளால் அழைக்கப்பெறும் இன்பத்தை அவன் இழந்திருந்தான். ஆகவே இப்பொழுது தன் பற்களற்ற வாயைத்திறந்து ஆநந்தத்தோடு அழைத்தான் அர்த்தாங்கியை, "கண்மணீ," என்று.

இள மடமங்கைக்கும் கிழமணவாளனுக்கும் இடையில் நிகழ்ந்த இந்த சரச சல்லாப பீடிகை செவிமடுத்தின்புறு

வதற்கு உரியதாயிருந்தது. அழற்பிழம்பென ஜ்வலிக்கும் பிரமீலை, அழகின் கனியாகிய பிரமீலை, இறுமாப்புத் தாண்டவமாடும் முகத்துடன் விசாகாநந்தன் பக்கல் தன் வாள் விழியை வீசினாள். வீரியமிழந்த விசாகாநந்தன், விருத்தனாகிய விசாகாநந்தன், சுருங்கிய வலை போன்ற விசாகாநந்தன் தீனத்தன்மையுடன் தன் ஸஹதர்மசாரிணியின் பக்கல் பார்வையைச் செலுத்தி, அவள் திருவாய் மலர்ந்தருளப்போகும் உரையமுதத்தைப்பருக ஆவலாய்க் காத்திருந்தான்.

அவ்வணங்கு ஆனனமலர்ந்து அருளிச்செய்தாள்— "எனக்கு எவ்விதமான அவமதிப்பு உண்டாயிருக்கிறதென்று எள்ளளவாவது தங்களுக்குத்தெரியுமா?"

"என் இன்னுயிர்க்காதலியை அவமதிக்கும் சாகசம் எந்தக் கசடனுக்கு உண்டாயிற்று?"

"என் அன்பே, அவன் பெயரைக்கேட்டுத் தாங்கள் என்ன செய்யக்கூடும்?" நடப்பதெல்லாம் அழகாய்த்தான் நடக்கிறது. உங்களைப்போன்ற கிழட்டு மந்திரிக்குப்பெண்டாட்டியாய் இருப்பதைவிட, ஒரு பட்டாளத்துச் சிப்பாய்க்காவது வாழ்க்கைப்பட்டிருந்தால் அவன் கூடத் தன் உயிரைக் கொடுத்தாவது என் மானத்தை —என் கற்பை—காப்பாற்றுவான்."

"நீ என்ன சொல்லுகிறாய்? நீ சொல்வது என்ன? இந்த விசாகாநந்தன் ஒரு அற்ப சிப்பாய்க்கும் குறைந்துவிட்டானா? உன் கற்பில் கண் வைத்தவன் எவன்? சொல்லு, இந்த க்ஷணமே அவனை அனுப்பிவிடுகிறேன் எமலோகத்தை எட்டிப்பார்க்க."

"பிராணேசா, உங்களிடத்தில் அவன் பெயரைச் சொல்வதனால் எவ்வித பிரயோஜனமும் இல்லை. உங்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை. வீணாக உங்களுக்கு மனோவிசாரம் உண்டாவதுதான் மிஞ்சும்."

"என் செல்வமே, இவ் யுத்தத்துக்குத் தலைமை வகித்து இந்த விசாகாநந்தன் எவ்விதமாக வியகாரங்களை நடத்தி வருகிறானென்று உனக்குத் தெரியாதா? நான் செய்து வரும் காரியங்களைச் செய்ய அந்த மிருகேந்திரமன்னனாலும் ஆகாதே.என்னுடைய சாமர்த்தியத்தின் விஷயத்தில் உனக்கேன் சந்தேகம் உண்டாகிறது? உன்னைத் துன்பப்படுத்தினவனுடைய பெயரை மட்டும் சொல்லிவிடு — சீக்கிரம்."

"இப்போதுதான் எனக்குத் தெரிகிறது, இப்படி அவமானத்தைச் சகித்துக் கொண்டிருப்பதைவிட, தற்கொலை செய்துகொள்வதே நல்லதென்று."

"என்னோடு ஒரு வார்த்தை சொல்லேன், எவன் உன்னைக் கண்ணெடுத்துப் பார்த்தது? எப்போது உன்னைத் துன்பப்படுத்தினான்?"

"பிராணநாதா, இந்தக் கஷ்டத்தைப் பொறுக்கமாட்டாமல், எற்கனவே தூக்குப் போட்டுக்கொண்டு என் உயிரை விட்டிருப்பேன்; ஆனால் தங்களுடைய அன்பு என்னை அப்படிச் செய்யவொட்டாமல் குறுக்கிடுகிறது," என்று சொல்லி, விசாகாநந்தன் கழுத்தை இரு கரங்களாலும் கட்டிக்கொண்டு முகத்தோடு முகஞ் சேர்த்து மாய அன்பு காட்டி, பிரமீலை மீண்டும் கூறலாயினாள்— "நான் தனியே இருக்கும்போது, பல தடவையும், தற்கொலை செய்துகொண்டு பிராணனை விடவேண்டுமென்று எண்ணம் உண்டாகிறது; ஆனால் தங்கள் திருவடிதரிசனம் உண்டான மாத்திரத்தில் என் எண்ணமெல்லாம் காற்றாய்ப் பறந்து விடுகிறதே, என் அன்பே."

பிரதான மந்திரி தன் கையின் காடுமுரடான எலும்புக் கூட்டினால் பிரமீலையின் முகத்தைத் தடவிக் கொடுத்து—"இப்படிக் கோவித்துக்கொள்ளாதேடி, என் தங்கம்! ஒரு வார்த்தை சொல்லமாட்டையா, எவன் உனக்கு இவ்வளவு துக்கத்தை உண்டாக்கினது? பிறகு பார்த்துக்கொள், விசாகாநந்தனுக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருக்கிறதோ—"

"என் ஆருயிரே,வீண்ஆக்கிரகம் கொள்ளவேண்டாம். அந்தப் பாதகனுடைய பெயரைக் கேட்கக் கனவிலும் விரும்ப வேண்டாம். அவனைத் தண்டிப்பது உங்கள் அதிகாரத்துக்குப் புறம்பான விஷயம்."

"நான் தண்டிக்கமுடியாத அப்படிப்பட்டவன் இந்தக் கலிங்க நாட்டில் எவனுமில்லை. ஒரு கலிங்க நாட்டில் மாத்திரமேயன்று, இந்த அகில பரத கண்டத்திலும் எனக்கு இருக்கும் ஒப்பற்ற பெருமையினாலும் செல்வாக்கினாலும், உன்னைக் கெட்ட பார்வையுடன் நோக்குகிற நராதமன் பாரதவர்ஷத்தின் எந்த மூலையில் இருந்தாலும், அவனை ஆக்கினை செய்ய என்னாலாகும்."

"ஆகவே ஆகாது, என் நாதா! அவனைத் தண்டிப்பது உங்கள் அதிகாரத்தின் எல்லைக்கு மிஞ்சினது".

"இப்படி அரைகுறையாகவும் ஈரொட்டாகவும் பேசாதே. இந்த விசாகாநந்தனிடம் அந்த நரபசுவின் பெயரைச் சொல்லு, பிறகு பார். அவன் ஸப்த பாதாள லோகங்களில் எதில் ஒளித்துக் கொண்டிருந்தாலும், என்னுடைய துப்பறியும் ஏவலாளிகள் அவனைத் தேடி இழுத்துக் கொண்டு வருகிறார்களா இல்லையா வென்பதும், அரசன் கட்டளைக்கும் காத்திராமல் சேனை வீரர் என் உத்தரவைக் கொண்டே அவனது சிரத்தைச் சரீரத்திலிருந்து துண்டிக்கிறார்களா இல்லையா வென்பதும் தெரியவரும்".

"உங்கள் சேனை வீரரின் அதிகாரம் அவனிடத்தில் செல்லாது. உங்களுடைய உளவறியும் சேவகர்களோ அவனுடைய அடியிணைக்குத் தலை சாய்த்து வணங்குகிறார்கள்".

அவ்வளவில் விசாகாநந்தன் அச்சங்கொண்டு கேட்டான்—"அப்படிப் பட்டவன் எவன்?"

இனி அதிக மாத்திரை பிரயோகிப்பது உசிதமன்றெனப் பிரமீலைக்கு நம்பிக்கை உண்டாய்விடவே, "அப்படியானால், அவனைத் தக்கபடி தண்டிப்பதாக நீங்கள் வாக்களிப்பீர்களா?" என்றாள்.

"நிஸ்ஸந்தேகமாய்."

"தண்டனை விதிப்பது தங்கள் சக்திக்கு மிஞ்சின விஷயமாய் இருந்தாலோ?"

"நீ என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"யாரிடத்திலிருந்தாவது எந்த விதத்திலாவது நான் சொல்லுகிறபடி உதவி பெற்று அவன் மேல் பழிக்குப்பழி வாங்குவீர்களா?"

"அவசியம் செய்கிறேன்: அப்படியே. ஆக்ஷேபமென்ன?"

"பாருங்கள், பின்னால் மாறக்கூடாது."

"ஒருக்காலுமில்லை, தன் பத்தினியின் கற்பை அழித்துவிட ஒரு நராதமன் முனைந்திருக்கும் போது, தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பவனல்ல விசாகாநந்தன். பரஸ்திரீயின் மேல் இச்சை வைக்கிறவனுக்குப் பிராண தண்டனை விதிக்கப்படுமென்பது கலிங்க தேசத்துச் சட்டமாகும்."

"பழிவாங்கும் விஷயத்தில் சட்டம் உங்களுக்கு உதவி செய்யாது. சட்டத்தைப் புறக்கணித்தே நீங்கள் பழி வாங்கவேண்டும்."

"சரி, இனி பெயரைச் சொல்லு."

"முதலில் உங்கள் தெய்வத்தின் மேல் ஆணையிடுங்கள். பழி வாங்குவதாகப் பிரதிக்ஞை செய்யுங்கள். பழிவாங்குவதில் என்னை வழிகாட்டியாகக்கொண்டு நடப்பதாகச் சபதஞ் செய்யுங்கள்."

"ஆனால் எனக்கு நிச்சயமுண்டாகும்படி நீ நிரூபிக்க வேண்டும்."

"நான் சொல்லுகிறேனே, இதிலிருந்தே நிச்சயம் செய்துகொள்ளுங்கள்."

"அது மட்டும் போதாது."

"சரி, பிரமாணம் பண்ணுங்கள்—உங்களுக்கு நிச்சயமாகும்படி மெய்ப்பிக்கிறேன்."

பிரமீலை விசாகாநந்தனைத் தன் மாயவலையில் நன்றாய்ச் சிக்க வைத்துக்கொண்டாள்! அவனும் தன் யுவதியாகிய ஸஹதர்மசாரிணியின் சொற்படி பிரமாணம் பண்ணினான். பிறகு ஆதுரத்துடன் பிரமீலையைக் கேட்டான்—"அந்த நராதமனுடைய பெயரைச் சொல்லையா இப்போது!"

"மிருகேந்திரன்."

"யார்? மிருகேந்திரனா!"

"ஆமாம், மிருகேந்திரனே!"

"எந்த மிருகேந்திரன்!" என்று ஆச்சரியத்தோடும் அச்சத்தோடும் உசாவினான் விசாகாநந்தன்.

"வேறு யாராய் இருக்கக்கூடும்? மிருகேந்திர மன்னனே!"

"மிருகேந்திர மன்னனா? மகாராஜா மிருகேந்திரனா! சுத்த பொய்! முழுக் கற்பிதம்! கிஞ்சித்தும் நம்பத்தகாதது!" என்றான் விசாகாநந்தன் பொங்கியெழும் ஆச்சரியத்தோடு, பயந்த குரலில்; "நீ தான் இப்படி நினைப்பீர்களென்றறிந்தே, நான் பெயரைச் சொல்வதற்கு முன் பின் பார்த்தேன். கடைசியில் பிரமாணமெல்லாம் பொய்யாய்விட்டதல்லவா! பிரதிஞ்ஞை பண்ணின அளவிலேயே நின்றுவிட்டதல்லவா! விலகிப் போங்கள். எதுவயினும் ஆழமான கிணற்றைத் தவிர எனக்கு அடைக்கலம் அளிப்பது வேறொன்றுமில்லை. வேறொருவருமில்லை;" என்று சொல்லிக் கொண்டே விசாகாநந்தன் கையை உதறித் தள்ளிவிட்டுப் பிரமீலை வெளியே போவதுபோல் நடித்தாள்.

விருத்த விசாகாநந்தன் அவள் பின்னே ஓடிச் சென்று சொன்னான்—"போகாதே, பிரமீலா, நில்லு! நில்லு! இப்படி பைத்தியக்காரியாய்விடாதே! இம்மாதிரி விவேகமில்லாமல் நடவாதே! இன்னின்னது நடந்ததென்று என்னிடம் சாந்தமாய்ச் சொல்லு. நான் மிருகேந்திர மன்னனைக்கூட மதிக்கமாட்டேன்."

முகத்தைத் திருப்பிக்கொண்டு பிரமீலை கூறினாள்—"நீங்கள் இப்பொழுது சொல்லுவது சத்தியந்தானே?"

விசாகாநந்தன் பிரமீலையின் திரண்டு நீண்ட மணிக்கட்டைப் பற்றிக்கொண்டு, அவளைக் கச்சேரிக்கூடத்தின் பக்கம் இழுத்தவண்ணமாய்—"ஆம் முற்றிலும் சத்தியமே. வா, திரும்பிப் போவோம்," என்றான்.

அப்பொழுது பிரமீலை யோசித்து, இனி அதிகமாய்ப் பிகு பண்ணுவது சரியல்லவென்றுத் தேர்ந்து, அந்த இராஜபக்தனாகிய விசாகாநந்தன் செவியில் விஷத்தை ஊற்றத் தொடங்கினாள்.

"என் பிதாவின் மரணத்துக்குப் பிறகு அடைக்கலம் அளிப்பதாகப் போக்குக்காட்டி மிருகேந்திரன் என்னைத் தன் மகளின் மஹலில் கொண்டுபோய் வைத்தான். அங்கே இருந்துகொண்டிருக்கையில், அரசன் என்னைப் பாபதிருஷ்டியுடன் நோக்குவதாகச் சிறிது காலத்துக்குள்ளாகவே எனக்குத் தெரிந்துவிட்டது. ஆகையால் கூடியவரையில் நான் அவன் கண்ணிற் படாமல் தப்பித்துக்கொண்டு வந்தேன். ஆனால் அவன் அடிக்கடி என்னைத் தாராளமாய்ச் சந்திக்கவும் துராக்கிருதமாய் வலிய வந்து என் எதிரில் நின்று சல்லாபம் செய்யவும் ஆரம்பித்தான். இது எனக்குப் பிடிக்கவில்லை. அதன் மேல் இந்தச் சங்கடத்தினின்றும் தப்புவதற்காகத் தங்களுக்கு வாழ்க்கைப்பட்டேன். அப்படி வாழ்க்கைப் பட்ட இங்கும் அவன் தினந்தோறும் வந்து வந்து முன்போனபடிக்கெல்லாம் என்னை அல்லற்படுத்துகிறான்."

உண்மையைக் கொல்லும் பிரமீலைகூட பயங்கரமான பொய்யைப் பேசும் சமயத்தில் தட்டுத் தடுமாறித் தியங்கினாள். ஆனால் தன்னைத் தன் பிதா நேசித்ததைவிட மிருகேந்திரன் அதிகமாய் நேசித்துவருகிறானென்பதையும் அவனுக்குத் தன்னிடம் மெய்யான அன்பு உண்டென்பதையும் அவள் மறந்துவிட முடியவில்லை. ஆகையால் அவனுக்குக்கூட இந்தக் கொடும் பொய்யைச் சொல்லும்போது மிக கஷ்டப்பட வேண்டியதாயிற்று.

பிரமீலை புகட்டிய விஷஜ்வாலை விருத்தனாகிய மந்திரியின் மேல் தன் பிரபாவத்தைச் செலுத்தத் தொடங்கியது. அவன்—"அப்படியானால் மிருகேந்திர மன்னன் என்னிடம் அடிக்கடி வந்து கொண்டிருப்பது இதற்காகத்தானோ?" என்றான்.

"ஆமாம், உங்களைக் கண்டு பேசுவதென்னும் வியம் காட்டி எவ்விதத்திலாவது என்னைச் சந்திக்கவேண்டுமென்பதற்காகவே அவன் வருகிறான். இல்லாவிட்டால், அவன் தங்களையே ராஜமஹலுக்கு என் வரவழைத்துக்கொள்ளக்கூடாது? இங்கேயே ஏன் அடிக்கடி ஓடிவருகிறான்?"

"இப்பொழுது எனக்கு விளங்கிவிட்டது. சரி, அப்புறம்."

"இன்று அவன் இங்கே வந்துபோன பிறகு குமுதத்தினிடம் எனக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பினான்."

"என்ன செய்தி?"

" 'இன்று அர்த்தராத்திரிக்கு நான் உன்னைச் சந்திப்பேன். மஹலின் தென்னண்டைக் கதவைத் திறந்து வைக்க வேண்டும்!' என்று சொல்லி யனுப்பினான். எனக்கு எப்படிப்பட்ட சங்கடம் சம்பவித்திருக்கிறதென்று இப்பொழுது தெரியவில்லையா? இன்று சாயங்காலத்துக்கு முன்னமே எந்தக் கிணற்றிலேயோ குளத்திலேயோ விழுந்து இந்த இரவின் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று தோற்றுகிறது."

விசாகாநந்தன் இதுவரையில் சிந்தையில் மூழ்கியிருந்தான். கடைசியில் அவன் கூறினான்—"அப்படியா சங்கதி? அதனால்தானுக்கும் குமுதத்தை வெளியில் பார்த்துவிட்டதுமே என்னோடு பேசிக்கொண்டிருந்தவன் பொருக்கென எழுந்து போய்விட்டான்."

"என் பிரியதமா, இப்பொழுது நான் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். இனி அதற்கு எந்த விதத்தில் பழி வாங்கப் போகிறீர்கள்?"

"இதை முதலில் நீ எனக்கு மெய்ப்பிக்க வேண்டும்."

"இன்னும் மெய்ப்பிக்க வேண்டியது பாக்கி யிருக்கிறதோ? அப்படியானால், கேளுங்கள்: இன்றிராத்திரி அவன் எந்தெந்த விதத்தில் என்னைப் பாடுபடுத்துகிறானென்று கண்ணைத் திறந்துகொண்டு நன்றாய்ப் பாருங்கள். அப்பொழுதாவது உங்களுக்கு நம்பிக்கை உண்டாகாதா? பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்? ஆச்சரியத்தால் திகைத்துப் போய்ச் சும்மா உட்கார்ந்திருக்கப் போகிறீர்களோ, அல்லது வேறேதாவது செய்யப் போகிறீர்களோ?"

வயோதிகனாகிய விசாகாநந்தனது கண்களிற்கூடச் சந்தேகத்தினால் எழுந்த சினம் செந்தழல் வீசலாயிற்று. அவன் சொன்னான்—"நம்பிக்கை உண்டான பிறகும் இப்படிப்பட்ட விபத்தான சந்தர்ப்பத்தில் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பவனல்ல நான். எனக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை உண்டாகும்படி மட்டும் செய்துவிடு. பிறகு மிருகேந்திரனை ஒருநொடியில் தொலைத்துவிடுகிறேன், பார். இப்பொழுது இந்த யுத்தத்தின் உளவெல்லாம் என் கையில் இருக்கிறது. மிருகேந்திரனைத் தொலைக்க எனக்குச் சற்றும் நேரஞ் செல்லாது."

மந்திரி இவ்வாறு வீறு கூறிக்கொண்டிருக்கையில் பிரமீலையின் நாட்டம் அவன் பக்கல் பொருந்தியில்லை. அக்கூடத்துக்கு வெளியே யாரோ நின்று கொண்டிருப்பதைக்கண்டு, அந்த ஆளோடு அவள் ஏதோ ஸைகை பண்ணிக்கொண்டிருந்தாள். விருத்த மந்திரிக்கு அது தென்படவில்லை.

விசாகாநந்தன் மீண்டும் பேசலாயினன்—"பிரமீலாய் மிருகேந்திரன் விரும்பியபடியே தென் புறக் கதவைத் திறந்து வைத்திரு—உன்னிடம் வந்து அவன் எப்படி நடந்து கொள்ளுகிறானென்று நான் பார்க்கவேண்டும்—நீ அவனை இந்தக் கூடத்திலேயே சந்தித்து நிறுத்திக் கொண்டால், படிக்கட்டு நிலையின் பலகணி வழியாய் இங்கே நடப்பதையெல்லாம் பார்க்க எனக்குச் சௌகரியமாயிருக்கும்."

தான் விரித்த வலையில் வேட்டைவிலங்கு நன்றாய்ச் சிக்கிக்கொண்டதைக் கண்டு, அவ் வஞ்ச மகளாகிய பிரமீலை அவ் வலையின் ஒவ்வொரு நூலையும் கெட்டியாக வெகு ஜாக்கிரதையாய்ச் சுருக்கத் தொடங்கினாள். "வேண்டாம், என் ஆருயிரே, இப்படிப்பட்ட காரியங்களைக் காணச் சாகசிக்க வேண்டாம். அவனைப் பார்த்துவிட்டால், நீங்கள் சும்மா உட்கார்ந்திருக்கமாட்டீர்கள். ஒரே பாய்ச்சலாய் அவன் மேல் பாய்வீர்கள். அப்புறம் காரியமெல்லாம் கெட்டுப்போம். மிருகேந்திரன் யௌவன புருஷன், வலிமை மிகுந்தவன்—உங்களையே அவன் கட்டிப் பிடித்து உங்கள் உயிருக்கு உலை வைப்பான்."

"அதற்காக நீ பயப்படவேண்டாம். மிருகேந்திரனுடைய சுபாவம் எனக்கு நன்றாய்த் தெரியும். பதறி ஒன்றும் செய்யமாட்டேன். அரசனைக்கொண்டு ஆக வேண்டிய காரியங்களை முடித்துக்கொள்ள வேண்டுமென்பது என் ஞாபகத்தில் இருக்கிறது. அவனிடம் பகை தீர்த்துக்கொள்ளவும், அவனை அடக்கி வைக்கவும்

தக்கதான ஒரு சிறந்த உபாயத்தையே கைக்கொள்வேன்."

"உங்கள் காவற்காரரையாவது படைச் சேவகரையாவது நம்பி அவர்களைக்கொண்டு காரியத்தை முடித்துக்கொள்ளலாமென்று நினைத்துவிட வேண்டாம். கலிங்க தேச முழுவதும் மிருகேந்திரனிடத்தில் எல்லா ஜனங்களுக்கும் அத்தியந்தமாகிய பிரீதி உண்டாயிருப்பதால், அவன் மேல் கையை ஓங்க ஒருவனும் ஒப்பமாட்டான்."

"மிருகேந்திரனுடைய லோகாஞ்சனத்தை நான் நன்றாய் அறிவேன். அதை ஒழிப்பதற்கு அதே போன்ற பலமான சாதனத்தைத் தான் பிரயோகிப்பேன்."

"பிரயோகித்து, அவனைத் தப்பவொட்டாமல் தீர்த்துவிடவேண்டும். பாம்பை அடித்து உயிரோடு விட்டுவிடுவது மகா அபாயகரமானதாகும். அதை நசுக்கிக் கொல்லவே வேண்டும்." விசாகாநந்தன் முற்றிலும் தன் வசமாய்விட்டானென்பதை யறிந்த பிரமீலை இவ்வாறு தன் எண்ணங்களைக் கூச்சமின்றி அவனெதிரில் கொட்டினாள்.

விசாகாநந்தன் தன் ஸஹதர்மசாரிணியின் பேச்சை அங்கீகரித்து, "அதற்கென்ன சந்தேகம்!" என்றான்.

இப்பொழுது பிரமீலை தன் சூழ்வினையின் பிற்பகுதியைத்தொடங்கினாள்—"அப்படியானால், மிருகேந்திரனிடம் பழிதீர்த்துக்கொள்ள உங்களுடைய இந்த அறிவுக் களஞ்சியமாகிய மூளையில் என்ன உபாயம் தோன்றுகிறது?"

"முதலில் எனக்கு முழு நம்பிக்கை உண்டாகும்படி செய்."

"செய்யத்தான் போகிறேன். அதன் மேல் நீங்கள் என்ன செய்ய யோசித்திருக்கிறீர்கள்?"

விசாகாநந்தன் பாடு விழிப்பாட்டமாய்விட்டது. தலையைச் சொறிந்துகொண்டே சொல்லலுற்றான்—"செய்வதென்ன? பழிதீர்த்துக் கொள்வதுதான் வேறென்ன!"

"அதுதான் எனக்குத் தெரியுமே; அந்தப் பழிதீர்த்துக்கொள்வது எந்த விதத்தில் என்பதே கேள்வி."

"அதைப் பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்."

பிரமீலை அதைரியப்பட்ட பாவனையில் பேசலுற்றாள்—"யோசித்துச் செய்யலாமென்று விட்டுவைக்கிற காரியங்கள் ஒருகாலும் முடியப் போகிறதில்லை. ஆறின கஞ்சி பழங்கஞ்சியே. என்னை இப்போது என் வழியிலேயே போக விட்டுவிடுங்கள். அகலமும் நீளமுமான யோசனைகள் பண்ணுவதைத் தவிர உங்களால் வேறொன்றும் ஆகப் போவதில்லை."

இவ்வாறு கூறிவிட்டு அவள் வெளியே எட்டிப் பார்த்து, அங்கு நின்றிருந்த ஆளை உள்ளே வருமாறு கண் சமிக்கை செய்தாள். விசாகாநந்தன் தன் இரண்டு கைகளின் எலும்புக்கூடுகளினாலும் தன் நரைத்த தலையைச் சொறிந்துகொண்டு மூளையில் சூடு உறைப்பிக்க முயன்றுகொண்டிருந்தான். அவன் பிரமீலைக்கு மறுமொழி சொல்லத் தலை நிமிரவும், அப்பொழுதே அவனெதிரில் பிரமீலையின் வேலைக்காரியாகிய மாதவி கையில் ஒரு நிருபத்தை வைத்துக்கொண்டு நின்றாள். மந்திரியின் பார்வை அவள் பக்கம் சென்றது. அதைக் கண்டு மாதவி அந் நிருபத்தை அவளிடம் கொடுத்துக் கூறலானாள்—

"நான் புத்த தேவனுடைய ஸ்ரீபாத தீர்த்தம் கொண்டுவருவதற்காக இந்திரபவன குகைக்குப் போயிருந்தேன். தீர்த்தம் எடுத்துக்கொண்டு திரும்பிவரும்போது, ஆயுதம் தரித்த சேனையொன்று வந்து என்னை வளைத்து ஒரு வயது முதிர்ந்த அம்மையாரிடம் கொண்டுபோய்விட்டது. அவ் வம்மை என்னிடம் இந்த சீட்டைக் கொடுத்து, 'கூடிய மட்டிலும் விரைவாக இதை மந்திரி விசாகாநந்தனிடம் சேர்ப்பிக்க,' என்று சொன்னார். அதைக்கேட்டு நான் ஓடி ஓடி இந்த

சீட்டைக்கொண்டு இவ்விடம் வந்தேன்."

மந்திரி நிருபத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் மகத நாட்டு முத்திரையும் முகரும் இட்டு, அடியில் இராஜமாதா புத்திமதி தேவியின் கையெழுத்தும் காணப்பட்டது. விசாகாநந்தன் தன் கண்களை அதி னின்றும் திருப்பிக்கொண்டான்; பிரமீலையும் மாதவியி னிடத்திலிருந்து பார்வையைத் திருப்பிக்கொண்டே கண் சமிக்ஞையால், 'நீ சரியான சமயத்திலேயே நிரு பத்தைக் கொண்டுவந்தாய்,' என்று குறிப்பிட்டாள். பிரதான மந்திரியின் குழித்த முகத்திலும் ஆசையும் குரோதமும் ஆகிய மநோ விகாரங்கள் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி மாறிக் காணப்பட்டன. தன்னுடைய சூழ்ச்சி பலித்திடுமென்று பிரமீலையின் அந்தக்கரணம் அவளுக்கு நம்பிக்கை யூட்டலாயிற்று. அவள் தனக் குள்ளேயே—"என் சூழ்ச்சியாகிய சூரியனுடைய அரு ணோதயம் ஆய்விட்டது" என்று சொல்லிக் கொண்டாள்.

பிரதான மந்திரி விசாகாநந்தன் தங்க நாணயங்கள் நிறைந்த பை ஒன்றை நீட்டி—"மாதவீ, இதைப் பெற்றுக்கொள்; நீ எனக்குப் பெரிய உபகாரம் செய்தி ருக்கிறாய். இந்த நிருபம் கொண்டுவந்த சங்கதியை மெத்த ரகசியமாய் உன் மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்ளவேணும். நல்லது, போய்வா," என்றான்.

மாதவி பிரமீலையின் கண் சமிக்ஞையினால் தன் வேலை முடிந்துவிட்டதென்று தெரிந்து, பையை எடுத் துக்கொண்டு தன் வழியே சென்றாள்.

பிரமீலை அந்த நிருபத்தின் செய்தி ஒன்றும் தனக் குத் தெரியாதுபோலப் பசாங்கு பண்ணிக்கொண்டு மிகுந்த பரிவுடன், "இந்த நிருபத்தில் அப்படிப்பட்ட விசேஷம் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள்.

விசாகாநந்தன் ஒருகையை அவளது தோளின் மேல் வைத்துக்கொண்டும் மற்றக் கையினால் அந்த நிருபத்தைச் சட்டைப் பையில் இட்டுக் கொண்டும்,— "மிருகேந்திரனிடம் எவ்விதம் பழிவாங்கவேண்டும் என்பதைப் பற்றி இதில் எழுதியிருக்கிறது," என்றான்.

அத்தியந்த ஆச்சரியத்தை நடித்துக்கொண்டு பிரமீலை—"என்ன! இந்த நிருபத்துக்கும் மிருகேந் திரனிடம் பழி வாங்குவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டாள்.

மந்திரி கொலைபாதகனைப் போல் விழித்து விளம்பி னான்—"சம்பந்தமில்லாவிட்டால், நான் சம்பந்தம் கற் பிக்கிறேன்."

தன் சூழ்ச்சித்தீ நன்றாய்ப் பற்றிக் கொண்டதென்று கண்டு பிரமீலை பரமாநந்தமடைந்தாள்.

பிரதான மந்திரி ஆசையை அடக்க முடியாமல்,— "மிருகேந்திரமன்னனிடம் பழிவாங்குவதனால் நமக்கு அதிக லாபம் உண்டாவதாயிருக்கிறது," என்றான்.

நிருபத்தில் காட்டியிருக்கும் ஆசை மந்திரியின் மனத்தை முற்றிலும் அடிமைப் படுத்திவிட்டதைக் கண்டு,—"நமக்குக் கொள்ளை லாபம் கிடைக்குமா?" என்று பரபரப்புடன் கேட்டாள் பிரமீலை.

"ஆம், நமக்கு அளவற்ற லாபம் உண்டாகப் போகிறது. இன்றிரவு என் சந்தேகத்தை நீக்கிவிடு, பிறகுபார், மிருகேந்திரன் அடையப் போகிற கதியை."

"இன்னும் உங்களுக்குச் சந்தேகம் தீரவில்லையா?"

"இல்லை. இன்றிரவு மிருகேந்திரன் உன்னிடத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறானென்று பார்த்து எனக்குச் சந்தேகம் நீங்கவேண்டும். ஓர் அபாயகரமான காரியத்தில் தலையிடுவதற்கு முன் நம் மனதை முற்றிலும் சமாதானப் படுத்திகொண்டே அதில் இறங்கவேண்டும்."

"இன்னும் சில கபட சூத்திரங்கள் நான் புனைய வேண்டியே இருக்கிறது. புனையாவிட்டால் வேறுகதி இல்லை," என்று பிரமீலை தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, பிறகு வெளிப்படையாய்—"உங்களுக்கு நம்பிக்கை உண்டாய் விட்டாலோ?" என்றாள்.

"மிருகேந்திரன் அடியோடு அழிந்து போவது திண்ணமென்று தேர்."

"அதனால் நமக்கென்ன லாபம்?"

இந்த சமயம் விசாகாநந்தன் தன் மனவெழுச்சியின் வேகத்தை அடக்கிக்கொள்ள முடியாமல்—"என்னுடைய பிரமீலை இக் கலிங்கநாட்டின் அரசியாவாள்." என்றான்.

"கலிங்க நாட்டரசியா!"

பிரமீலையின் ஆநந்தம் இப்பொழுது கரை கடந்து விட்டது.

இனி தன் சதியாலோசனை அவசியம் பலிக்குமென்று அவளுக்கு நம்பிக்கை உண்டாய் விட்டது. அவள் களி பெருவகையுடன்—"கலிங்க நாட்டரசி! கலிங்க நாட்ட ரசி!" என்றுகத்திக் கத்திக் கூத்தாடலாயினாள்.— இனி அதிக நேரம் அங்கே தங்குவது அபாயகரமாகு மென்று அவளுக்குத் தோற்றியது. தனது அளவுகடந்த ஆநந் தக் களிப்பினால் எங்கே இரகசியம் வெளியாய் விடுமோ வென்று அவள் அஞ்சலாயினாள். அவள் "கலிங்க நாட் டரசி! கலிங்க நாட்ரசி!" என்ற மந்திரத்தை ஜபித்துக் கொண்டே விசாகாநந்தனை அங்கேயே விட்டு விட்டுத் தன் மனையை நோக்கி விரைந்து சென்றாள்.

வைத்யுதம்¶

நமது வாழ்க்கையைச் சுற்றி, இயற்கையிலும் செய்கையிலுமாக வைத்யுத சக்தி ததும்பிக் கொண்டு இருக்கிறது. வைத்யுதத்தின் துணை பெறாது நமது தினசரி வாழ்க்கையை ஒரு நாளேனும் நடத்திச்செல்ல முடியா ரீதியில் ஆது னிக நாகரீகம் நம்மைக்கொண்டுவந்து விட்டது. தந்தி, சப்தவகனி, ஸ்வயசலன ரதம் போன்ற வை இல்லாமல் நமது வாழ்வு எவ்வாறு இருக் கும் என்று யோசித்துப் பார்ப்போம். நாம் தின சரி வாழ்க்கையில் உபயோகிக்கும் சாமான்களில் எத்தனையோ வைத்யுதத்தால் ஓட்டப்பெறும் ஆலைகளில்செய்யப்பட்டனவாயிருக்கும். தேசாபி மானமற்றோர்கள் கட்டும் பரதேசித் துணிகளில் பெரும்பாலன வைத்யுதத்தால் ஓட்டப்பெற்ற ஆலைகளில் செய்யப்பட்டிருக்கும். இரண்டாந்தர சுதேசியான பம்பாய் வேஷ்டிகள்கூட தாநா வகையரா வினால் வழங்கப்படும்வைத்யுத சக்தி யினால் ஓட்டப்படும் ஆலைகளில் செய்யப்பட்டன வென்பதை நாமனைவரும் நன்கறிவோமன்றோ? இப்படி நமது வாழ்க்கையின் இன்றியமை யாத் துணையாக நின்று பெரிதும் பயன் பட்டு வரும் பரம உபகாரியாகிற இந்த வைத்யுதத்தின் விருத்தாந்தத்தைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் கண்ணை இறுகப் பொத்திக் கொண்டு வாழ்ந் து வருவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமன்றோ? எனினும் இதற்கும் ஓர் காரணம் இல்லாமற் போகவில்லை. இதன் சங்கதியைப்பற்றித் தெரிந்து கொள்வதற்குக் கன பொருளையும் நேரத்தையும் செலவிட்டுக் கலாசாலைகளுக்குச் சென்று,புத்தகு கூன்விழ, கண்களில் கண்ணாடி யேறச், சிர மப்பட்டுப் படித்தல் வேண்டும் என்ற ஒரு நம் பிக்கையினால் தான் ஜனகாரங்கள் இதைப்பற்றி உசாவி அறியப் பிரியங்காட்ட வில்லை. கலா சாலைக்குச் செல்லாமல் வெளியில் இருந்தபடியே,

¶மின்சார சக்தி என்று பெரும்பாலரால் சொல்லப்படும் சக்திக்கு வைத்யுத சக்தி என்று பெயரிடுகிறோம்.

இவ்விஷயத்தின் அறிவை நம் நாட்டினருக்குப் புகட்ட இதுகாறும் தகுந்த முயற்சி செய்யப்படவில்லை யென்பதையும் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

உண்மையில் வைத்யுதத்தின் இயல்பைப் பற்றித் தெரிந்து கொள்வது கடினம்தான். பெரிய பெரிய விக்ஞானிகள்கூட இவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வராமல் இன்னும் தர்க்கங்கள் நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இவ் வைத்யுதம் நமது வாழ்க்கைக்குப் பயன்பட்டு வரும் ஆறுகளைத் தெரிந்து கொள்வது கடினமில்லை; சுலபமான காரியம்தான்.

உதாரணமாக, ஒரு கடியாரத்தில் * தொங்கடத்தை ஆட்டிவிட்டு அதில் உள்ள சக்கரங்கள் எவ்வாறு சுழல்கின்றன என்பதை விளக்குவது வருத்தமான காரியமில்லை. ஆனால், அந்தத்தொங்கடத்தை ஆட்டிவிட்டால், அதனை ஆடிக் கொண்டே இருக்குமாறு செய்கிற பூமியின் ஆகருஷணசக்தியின் தன்மையை விளக்குவது அத்துணை சுலபமன்று. இந்தச் சக்தியின் தன்மை இன்னும் நமது அறிவுக்கே எட்டாத விஷயமாக இருந்து கொண்டிருக்கிறது. பார்க்கப் போனால், இவ் ஆகருஷணசக்தியின் தன்மையைப் பற்றித் தெரிந்துகொண்டிருப்பதற்கு எவ்வளவோ அதிகமாகத்தான் வைத்யுதத்தைப்பற்றி மனிதர் இன்று தெரிந்து கொண்டிருக்கின்றனர். இருந்தாலும் இதை அறிவதில் கூட நமது கவனத்தை இப்பொழுது செலுத்த வேண்டியதில்லை. வைத்யுதத்தினால் நமது வாழ்க்கைக்குக் கிடைத்திருக்கக்கூடிய சாதனங்களையும் உதவிகளையும் பற்றிய சாமான்யமான அறிவு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டுவது அவசியமாகும். இவற்றை அறிகின்றவர் அவ்வாறு அறிந்து கொள்ளுகிற அறிவினாலேயே வைத்யுதத்தின் உண்மையான தன்மையைப்பற்றிப் பெரிதும் தெரிந்து கொள்வார்கள்.

ஒரு சப்தவகனியின் மூலமாக, தூரத்திலுள்ள நண்பருடன் நாம் நேருக்கு நேரே பேசி இருப்போம். இல்லாவிடினுங்கூட, வெகு தொலையிலுள்ள பந்து மித்திரருக்கோ, காரியஸ்தருக்கோ, வியாபாரிகளுக்கோ அவசியம் தந்தியில் செய்திகள் அனுப்பியிருப்போம். இந்தச் சப்தவகனியோ, தந்திக் கட்டையோ சாமானியமான கருவிகளாக நமது நாட்டுப் புறங்களில் உள்ள ஜனங்களுக்குத் தோன்றா! மற்று, இவற்றில் ஒரு பெரிய அதிசயம் பொதிந்திருக்கிறது, ஒரு பெரிய தேவரகஸ்யம் அடங்கி இருக்கிறது என்று கருதிக் கண் கொட்டாது வியப்புடன் நோக்கிக் கொண்டிருப்பர். ஆனால் சற்று ஆழ்ந்து யோசித்துப் பார்க்கிறவர்களுக்கு அத்தகைய பரம ரகஸ்யம் ஒன்றும் இவற்றில் இல்லை; இவையும் நாம் நாடோறும் கையாளுவதான மரம், இரும்பு, பித்தளை முதலிய இவற்றால் ஆக்கப்பட்டவைதாம் எனக்கண்டு கொள்வர். பெரிய நகரங்களில் வேலை செய்யும் ‡ சுதர்சனங்களும் கூட பித்தளைத் தகடுகள் இரும்புத் துண்டுகள், கம்பிகட்டுகள் எனும் சாமான்யப் பொருள்களின்றி வேறில்லை என நாம் திட்டமாக நம்பலாம்.

இச் செயற்கைப் பொருள்களைப் பற்றி நினைவதற்கு முன்னர், நமது சிறு குழந்தைப் பருவத்தில் கூட வைத்யுதத்தின் தொடர்பு நமக்கு இருந்திருக்கிறது. இயற்கையில் நம் கண்களைப் பறித்துக்கொண்டு பேரழகு பொலிய ஒளிரும் பெரிய மின்னல்களைப் பற்றியே இங்கு குறிப்பிடுகிறோம். இவை இன்று நேற்று வந்தனவல்ல மனிதன் இவ்வுலகில் பிறந்த நாள் தொட்டு இவற்றைக் கண்டு வந்திருக்கிறான். ஏன், அவனுக்கு முன் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்ட காலந்தொட்டே இவை இருந்துகொண்டு தான் வருகின்றன. ஆதலால் வைத்யுதம் இன்று புதிதாகக் கண்டுபிடித்துவிடப்பட்ட ஓர் சக்தி

* Pendulum

‡ Dynamo

என்று சொல்வதற்கில்லை. இருப்பினும், அதற்கு 'லகான்' மாட்டி, அதை மனிதனுக்கு அடிமையாக்கி அவனுக்குப் பயன் படுவதான வழிகளில் உழைக்குமாறு செய்த பேர் தற்காலத்தவருக்கே உரித்தாம். என்றாலும், இன்று பிரத்தியக்ஷத்தில் காணப்படுகிற இச்சக்தி முழுவதும், ஒரு உருவத்தில் இல்லாவிடின் இன்னுமோர் உருவிலாவது ஆதிமுதற்கொண்டே இருந்து கொண்டுதான் வந்திருக்கிறது.

இதன் விருத்தியின் தன்மையை நோக்கினால் நெசவுகாரன் கையில் ஒரு ஓடம் செய்யும் வேலையை இதுவும் பார்த்து வருகிறதெனக் காண்போம். சாதாரணமாக ஒரு பெரிய நகரத்தில் வைத்யுதம் பிறப்பிக்கப்படும் ஓர் ஆலைக்குச் சென்று பார்ப்போம். என் லோனாவலாவில் தாதா வகையாரவினால் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் பிரம்மாண்டமான வைத்யுத சாலையைப் பற்றிக் கேள்விப்பட்டிராத இந்தியன் ஒருவனும் இரான். இப்பொழுது அச்சாலைக்கு நாம் சென்றிருப்பதாகக் கருதுவோம். அங்கு நமக்கு என்ன புலப்படுகிறது? முதலில் குன்றின் உச்சியிலிருந்து நீரானது குழாய்களின் வழியாக அடிவாரத்திலுள்ள ஆலையில் விழுந்து பெரிய தாய்ச் சக்கரங்களைச் சுற்றுகிறது. இவற்றோடு தொகுக்கப்பட்ட பல சக்கரங்கள், பெரியவையும் சிறியவையுமாகக் கரகரவென்று அதிக வேகமாய்ச் சுழல்கின்றன. இப்படிச் சுற்றி வந்து இவை சுதர்சனங்களை ஓட்டுகின்றன. இம்மட்டிற்கு நாம் அபரிமிதமான சலன சக்தியைக் கண்டோம். அப்பால் நம் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இங்குதான் நமது நண்பரின் வேலை துவங்குகிறது. இவ்வாலையிலே காணப்பட்ட இத்துணைச் சக்தியையும் 'ஓஜஸை'யும் கிரகித்துக்கொண்டு மறைந்துவிட்டார். நமக்கு இனி லோனாவலா ஆலையில் வேலையில்லை, எனவே ஆவிரதமேறிப் பம்பாய் நகரம் செல்லுவோம்.

என்ன ஆச்சரியம்! இதோ இங்கு ஒரு ரதம் ரு0 முதல் க00 பேர் வரை ஏற்றிக் கொண்டு ஓடுகிறது. இழுப்பதற்குக் குதிரைகள் பூட்டப்படவில்லை. 'ரயிலோ,' வென்றால் புகை கக்கிக் கொண்டு போகும் நீராவி யந்திரத்தையும் காணவில்லை. பின் இவ் வண்டியை இழுப்பது யார்? யோசித்துப் பாருங்கள். லோனாவலாவில் உதயமான அத்துணை ஓஜஸையும் தாங்கிழுகிக் கொண்ட நமது தோழருடைய வேலையாகும் இது. அவர் அங்கு மறைந்து, இந்த ரதங்களின் அடியில் வைக்கப் பட்டிருக்கும் * யானத்தில் வந்து வெளிப்பட்டு, தான் கொண்டுவந்த சக்தியில் ஒரு பகுதியை அவிழ்த்து விட்டிருக்கிறார். அதுதான் இந்த ரதங்களை இழுத்துச் செல்கிறது. சரி, நாமும் நமது வைத்யுதத் தோழன் கூடவே இந்த ரதம் ஒன்றில் ஏறிச் செல்வோம். பரேல் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம். இங்கு தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாகத் தென்படுகிறார்கள். இதில் யாராவது நமக்குத் தெரிந்தவர்கள் இருக்கமாட்டார்களா? இறங்கிப் பார்ப்போம். ஒருவரும் அறிமுகமில்லை. அதோ பக்கத்தில் தென்படுகிற ஆலையையாவது சுற்றிப் பார்த்து வருவோம். இங்கு நமக்குத் தெரிந்த பம்பாய் வேஷ்டியார் இருக்கிறார். இவ் ஆலைகளில் உள்ள இத்தனை தறிகளையும் ஓட்டுவது எது? இதோ ஒரு சிறிய சுதர்சனம் இருக்கிறது. இதனோடு தொடுக்கப்பட்டதால்தான் தறிகளைச் சுற்றும் சக்கரங்கள் சுழலுகின்றன. இதற்கும் காரணம் நமது நண்பரேதான். மூலஸ்தானத்தில் தான் வாங்கிக்கொண்ட சக்தியில் ஒரு பாகத்தை இங்கு வெளியில் அவிழ்த்துவிட்டு, இவ் ஆலை ஓடுவதற்குக் காரணமாகி நிற்கிறார். இப்படியாக எத்தனையோ ஆலைகள், எத்தனையோ ரதங்கள் இந்த வைத்யுதத்தால் ஓட்டுவிக்கப்படுகின்றன.

* Motor

வைத்யுதம் ஒரு ஓடத்தின் தொழிலையே செய்துவருகிறது என்று நாம் முன்னர்க் கூறியது இப்பொழுது நன்கு விளங்கியிருக்கும் என நம்புகிறோம்.

இனி வைத்யுதத்தால் நாம் அடையும் சௌகரியங்களிலும் நன்மைகளிலும் சிற்சிலவற்றை ஒரு ஓட்டத்தில் கவனித்துக்கொண்டு செல்வோம். இது ஒரு இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் சலன ஓஜஸைக் கொண்டு போகிறதெனக் கண்டோம். நாம் இருப்புப் பாதை வண்டிகளில் பிரயாணஞ் செய்யும் பொழுதெல்லாம், இந் நாட்களில் எண்ணெய்விடவும் திரியில் நெருப்புப் பற்ற வைக்கவும், அடிக்கடி தூண்டவும், ஒன்றும் வேண்டியிராமல், ஆனால், அதிக பிரகாசமாகவும் குளிர்ச்சியாகவும் எரியும் விளக்குகளைப் பார்த்திருக்கிறோம். கண்ணாடிகள் கரி கொஞ்சங்கூட அடைவதில்லை. என்ன ஆச்சரியமான விளக்கு இது? பெரிய நகரங்களில் உள்ள சலன படக்காட்சி ஸ்தலங்களுக்குச் சென்றிருப்போமாயின் இவ் விளக்குகள் சிறியவையும் பெரியவையுமாய் என்னென்ன விதமான அழகு பொலிந்து விளங்குகின்றன எனக் கண்டு ஆச்சரியமடைவோம். இவை யெல்லாம் வைத்யுத தீபங்கள்; வைத்யுத சக்தியின் உதவியினாலேயே இத் தீபங்கள் ஒளி வீசுகின்றன.

கன்னியாகுமரியில் வயதுசென்ற தகப்பனார்; ஹிமோத்கிரியில் ஸிம்லா நகரிலே புத்திரன்; தகப்பனார் நோயுற்றுவிடுகிறார். புத்திரனைக் காணவேண்டும் என்று பரபரக்கிறார். புத்திரனுக்கோ இந்தச் செய்தி தெரியாது. தெரிந்தால் ஆவி ரதம் ஏறி ஐந்தாம் நாள் ஆறும் நாள் வந்து குதித்துவிடுவான். அவனுக்கு அறிவிப்பதெப்படி? காகத்தின் காலில் ஓலையைக் கட்டிவிடுவமா? அவ்வளவு தூரம் பறந்து செல்லவே சக்தியிராது. பறக்க முடிந்தாலும், இமயமலைக் குளிருக்குப் பிழைத்திருக்கவேண்டும். இடையிலே ஆகாரம் வேண்டும். இவ்வாவெல்லாம் இருந்தாலும், ஓலையை உடனே கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமே! எப்படியும் பறந்து செல்லக் குறைந்தது நாலைந்து நாளாவது வேண்டுமே! அப்பால் ரயிலில் ஐந்தாறு நாள்; அதுவரையில் வயோதிகர் உயிருடன் இருக்க வேண்டுமே. ஏது, அசாத்தியம். பின் செய்வதென்? யோசிப்பானேன். சமயசஞ்சீவியான நமது நண்பர்தான் இருக்கிறாரே. பக்கத்திலேயுள்ள தபால் தலத்துக்குச் செல்கிறது. அவசரமாக ஒரு தந்தி யடித்துவிடச் சொன்னால் பிள்ளைக்கு உடனே தகவல் கிடைத்துவிடுகிறது. உடனே புறப்பட்டு வந்து தன் தகப்பனார் முகத்தில் விழித்துக்கொள்கிறான். இது நமக்கு இப்பொழுது சர்வ சகஜமாய்ப்போய் விட்டதால் இதில் ஆச்சரியம் நமக்கு ஜனிக்காது. ஆனால், திக்கு திசை தெரியாது கடல் நடுவே கலங்கிக்கொண்டிருக்கும் ஒரு கப்பலுடன், கரையிலிருந்த படியே பேசி அதற்குத் தேறுதல் சொல்லவும் முடியும் என்றால், இச்செய்தியை நம்பி ஏற்றுக்கொள்ளச் சற்றுத் திகைக்கவே செய்வோம். அதிலும், அந்தக் கப்பல் இருக்கும் இடம் நமக்குத் தெரிய வேண்டுவதும் அவசியமில்லை யென்றால் திகைப்பு இன்னும் அதிகமாகும். என்றாலும், தந்தியில்லா லிகிதவகனி * மூலமாக இது இன்றுச் சாத்தியமாகிறது.

சென்னையிலிருந்தபடியே, நீலகிரி ஒற்றைக்கல் மன்றில் † உள்ள ஒருவருடன், முகத்துக்குமுகம் நின்று பேசுவதுபோல் பேசச் சௌகரியமாயிருக்குமாறு சப்தவகனி வசதி ஏற்படுத்த நம்மவர் கொடுக்கும் வரிப்பணம் உதவுகின்றமையால் சப்தவகனிக்கும் நமக்கும் ஒரு அந்தரங்க சம்பந்தம் ஏற்பட்டுவிட்டதென்றே சொல்லலாம். ஆனால்இதிலும் ஓர் விசேஷமுண்டு. அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில் ஓர் பிரபு வீட்டில் கல்யாணம். விருந்துக்கு எண்ணிறந்த நண்பர்கள் குழுமி யிருக்கின்றனர். இந்த ஸமயத்திலே ஸங்கீதக் கச்சேரி வைத்தால் தேவையில்லை என்று பிரபுவுக்குத் தோன்றுகிறது. தேர்ந்த ஓர் பாடகன் எங்கு இருக்கிறான் என்று சில நண்பர்களிடம் கேட்கிறார். ஒருவர் மகாபிரசித்தி பெற்ற ஒரு பாடகனைத் தனக்குத் தெரியும் என்றும், ஆனால் அவன் தற்பொழுது ஜெர்மனியில் யிருப்பதால் அதைப்பற்றிப் பேசுவதில் பிரயோஜனமில்லை என்றும் சொல்லுகிறார். ஆனால் நமது ஸம்பிரதிப் பிரபு சந்தோஷமுகத்துடன் சென்று தன் காரியஸ்தரைக் கூப்பிட்டுச் சில உத்தரவுகள் கொடுக்கிறார். அவ்வளவுதான்; பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம், ஒரு உயர்ந்த சங்கீதக் கச்சேரியை அனுபவித்தற்குத் தயாராகும்படி விருந்தினர்களைக் கேட்டுக்கொள்கிறார். சபை இங்கே நியூயார்க் நகரத்திலே; பாடகன் ஜெர்மெனியிலே. இப்படியாக ஒருசங்கீதக் கச்சேரி நடக்கிறது. பாடகன் ஒரு சப்தவகனிக் கருவியில் வாயை வைத்துக்கொண்டு பாடுகிறான். நியூயார்க்கில் கூடிய சபையினர் ஸ்தம்பாகாரமாய் நின்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு பிரதேசங்களையும் தொடுத்து வைக்க ஒரு கம்பி கூடக் கிடையாது. சரி சரி, போதும், உன் 'புளுகு'க் கடையைக் கட்டு என்று யாரோ சொல்கிறது போலிருக்கிறது. நான் 'புளுக'வில்லை, உண்மைதான் பேசுகிறேன். வைத்யுதத்தினால் விளைந்த ஆச்சரியங்களில் எல்லாம் இன்றைக்கு இதுவே பேராச்சரியமானதாக இருக்கிறது.

வியாபாரத்துக்கும் கைத் தொழிலுக்கும் வைத்யுதம் செய்துவரும் துணையை விரிவாகச் சொல்ல இங்கு இடமில்லை. ரசாயனத் துறையில் இது செய்யும் வேலை அபாரமானது. கைத் தொழில் சார்பை விடுத்தாலும் ஒவ்வொரு அணுவிற்கும் இடையே நடப்பதான ரசாயனசேஷ்டைகள் அனைத்தும் வைத்யுதத்தினாலேயே நடைபெறுகின்றன என்று அறிஞர் கூறுகின்றனர். வைத்யுத மூலாம் பூசிய நகைகளை அணிந்து, கான மயிலாடக் கண்ட வான்கோழிகளாக நமது எளிய சகோதர சகோதரிகள் தங்க நகைகள் குலுங்கவிளங்குவதை நாம் கண்டிருக்கிறோம்.

வைத்தியத் துறையிலும் உற்ற துணையாய் நம் அன்பர் விளங்கிவருகிறார். ராஞ்ஜன் ரச்மி * களைப்பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். அவற்றின் மூலமாகக் கணக்கற்ற பேர்கள் தீராத வினைகள் தீர்ந்து ஆறாத ரணங்கள் ஆறிச் சுகம் பெற்று வருகின்றனர்.

இப்படியெல்லாம் வைத்யுதம் நமக்கு உதவி வருவதை நினைத்துப் பார்த்த பின்னர், இதன் விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்ள நமது ஆசை இன்னும் கூர்மையடைகிறது. அதோடு இவ்வளவு மகிமைகள் பொருந்திய இதைக்கண்டு பயன்படுத்தத் தெரியாமல் நாளது வரையில் எத்தனையோ ஆயிரம் தலைமுறைகள் வீணே வாழ்ந்து மடிந்து போயிருக்கின்றனவே என்று எண்ணி இரங்குவோம். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாகவே வைத்யுதம் என்று ஒரு பொருள் உண்டு என்று மனிதன் அறிந்து வந்திருக்கிறான் என்றாலும், மேலே சொல்லிய அற்புதமான கருவிகள் எல்லாம் நமது நினைவுக்குட்பட்ட காலத்திலேயே கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. சென்ற இருபத்தைந்து வருஷங்களுக்குள், இதன் அறிவு எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்தோங்கி யிருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்தால், இன்னும் ஓர் இருபத்தைந்து வருஷத்தில் இது எவ்வளவு தூரம் மேற் போகிவிடும் என்று எண்ணி அதிசயிக்க வேண்டியிருக்கும்.

ரா. அனந்தகிருஷ்ணன்.

* Telegraph † உதகமண்டலம் என்று தவறாக எழுதப்படுகிற ஊர்.

* Rontgen Rays.

யோக ஸாதனம்

———(*)———

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)

தபஸ்-சக்தி முதலில் இயங்கத்தொடங்கும்பொழுது ஸ்வபாவம் அதற்குப் பல இடையூறுகளை விளைவிக்கும். ஆனதுபற்றி ஸ்வபாவத்தை நடத்தி ஆள உனக்குத் திறன் உண்டாகும்வரை, தபஸ்-சக்தியை நீ வாழ்க்கையின்மீது பிரயோகஞ் செய்தல் கூடாது. சக்தி மார்க்க ஸாதனையைச் செய்யும்பொழுது நீ ஸாதகனாக மட்டிலும் இரு; உனக்குத் தபஸ்-சக்தியில் ஸித்தி உண்டானதும், அந்த ஸித்தியினால் ஆதாரத்திற்குப் பூரணத்துவத்தை ஏற்பாடு செய்; அதன் பிறகு ஸித்தி அடைந்த ஆதாரத்தை வாழ்க்கையின் செயல்களில் பிரயோகஞ் செய்யலாம்.

தபஸ்-சக்தியைப் பூரணஸித்தியுடன் இயங்க விடாது ஸ்வபாவம் தடுத்து வருவதற்குக் காரணம், ஜன சமூகத்தின் இயற்கை இன்னமும் முழு வளர்ச்சியை அடையாததேயாம்; ஜன சமூக இயற்கையின் பரிணாமம் அரைகுறையானது; அது தன் வளர்ச்சியில் இன்னமும் முழுமைப் பேற்றை அடையவில்லை. அது தன் தருமங்களனைத்திலும் பூர்ண வளர்ச்சியை அடையாததுபற்றி அதனுடைய பழைய வழக்கங்களின் தாமஸிக சக்தியானது—தாமஸீத்ஹ்ருதி—அதை ஸித்தியை அடையவிடாது தடுக்கிறது. வளர்ந்த வண்ணமாயிருக்கிற ஜன சமூக இயற்கையின் பரிணாமத்தை வேகத்தோடும் வெற்றியோடும் முன் நடத்திச் செல்வதற்காக ஏற்பட்டுள்ள உபாயமே யோகமெனப்படுவது. அவித்த ஸ்வபாவம் "எனக்கு ஸித்தீஹி வேண்டாம்; நான் அவித்தியில்தான் பழகியிருக்கிறேன்; அவித்த நிலைதான் எனக்குச் சகஜமாகவும் சௌகரியமாகவும் இருக்கிறது," என்று சொல்லும். ஸ்வபாவத்தில் தன்னுடைய பூரண பரிணாமத்திற்கும் இயக்கத்திற்கும் விரோதமாக உள்ள இடுக்கண்களைத் தபஸ்-சக்தி முதலில் நீக்குகின்றது.

"அது முடியாது, இது முடியாது," என்கிற பழைய ஸம்ஸ்காரங்களையும், நான் பகவானல்ல நான் மனிதன், நான் ஸர்வசக்திமானல்ல நான் திக்கற்றவன், நான் ஸர்வவியாபியல்ல நான் எல்லைக்குள் சிக்கியவன், என்ற முதலிய அக்ஞான ஸம்ஸ்காரங்களையும் தபஸ்-சக்தி முதலில் நீக்கித் தருகின்றது. நான் ஸர்வ சக்திமான், பகவான் ஆக்ஞாபிப்பதை என்னால் நிறைவேற்ற முடியும் என்று தபஸ்-சக்தி உறுதி கொள்ளவேண்டும். சக்தி இயங்கும்பொழுது உறுதியாக மாறுகிறது; மேலும் காளியைத் தவிர வேறு சக்தி கிடையாது. சக்தியே காளியாவாள். காளி பகவானுடைய திருவன்மை.

தபஸ்-சக்தி ஆதாரத்தைச் சுத்தஞ் செய்து தருகிறது; இதைச் செய்யும்பொழுது அது தன்னுள்ளும் தூய்மையைப் பெறுகிறது. கருவிகளுக்குள் குழப்பமும் ஒழுங்கின்மையும் காணப்பட்டால் தபஸ்-சக்தியானது சர்வ சக்தியுடன் இயங்காதென்று ஏற்கெனவே சொல்லியுள்ளேன் ஆகையினால் நீ முதலில் ஞானத்வத வளர்க்க வேண்டும். பிறகு ஞானத்தினால் ஆதாரத்தைப் புனிதமாக்க வேண்டும். ஆதாரம் தூய்மையை அடைந்தவுடன் தபஸ்-சக்தி ஸம்ஸ்காரங்களினின்றும், பிழைச் செயல்களினின்றும் விடுபடுகிறது. இவ்வாறு விடுதலையைப் பெற்ற உறுதிச் சக்தியையே நான் தூய கருவி என்று சொல்லுகிறேன். இது தவறிழையாது, சரியானபடி இயங்கும். பிழையற்ற இயக்கத்தினால் ஆதாரம் ஸித்தியைப் பெறும்—அதாவது ஸர்வ தோஷங்களினின்றும், குறைகளினின்றும், துர்பலங்களினின்றும் ஆதாரம் விடுபட்டு ஒழுங்கிற்கும் நேர்மைக்கும் வழிப்பட்டு வரும். புருஷன் பிரகிருதி அல்லது சக்தி என்று சொல்லப்படுகிற இருவர்களுடைய "இன்பக் கேளியை" நடத்தத் தகுந்த புருஷோத்தமனுடைய ஸித்தி பெற்ற கருவியாக ஆதாரம் மாறிவிடும்.

ஆகவே, நாம் அடுத்தபடியாக ஞானத்தைப் பற்றிக் கவனிக்கவேண்டும். அதைப்பற்றிச் சொல்வதற்கு முன்னதாக ஸ்வபாவத்திலுள்ள இடையூறுகளை உனக்குக் காட்டிக் கொடுப்பதாக இருக்கிறேன். நியாயக்கேடான ஸம்ஸ்காரங்களையும் அசுத்த ஆதாரத்தையும் நீங்கலாகப் பொது இயற்கையில் இருவகை இயல்கள் இருக்கின்றன:—ஒன்று யோக வளர்ச்சிக்கு விக்கினமாக உள்ள இயல். மற்றொன்று யோக வளர்ச்சிக்கு அநுகூலமாக உள்ள இயல். முதற்கூறியதானது, விடாதுபிடிவாதமாய்த் தொடரும் இயல், விரட்ட விரட்ட எதிர்த்துத் தடுக்கும் இயல், ஓட்டிவிட்ட பிறகும் திரும்பத் திரும்ப வந்து இடர் விளைக்கும் இயல் என மூவகைப் படும். பின் சொல்லியதும், கிரம ஒழுங்கில் படிப்படியாக வளரும் இயல், ஒரு முனைப்பட்டுத் தீவிரமாய் முன்னேறும் இயல், உள்ளடங்கி நெருங்கித் துரிதமாய் வளரும் இயல் என மூவகைப்படும்.

ஏதாவதொரு நியமம், ஒழுக்கம், பழக்கம் அல்லது வழக்கம் நம்மிடம் நிலைபெற்றுவிட்டதானால் பிறகு அது நம்மை விட்டகலாதிருக்கும் உரிமையை பெறுகின்றது; மேலும் நாம் அதை நீக்க அல்லது மாற்ற எத்தனிக்கும்பொழுது அது நம்மிடம் தன்னுடைய சுபாவமான அதிருப்தியைத் தெரிவிக்கின்றது. இதற்கே விடாத்தொடர்இயல் என்று பெயர். நம் பழக்க வழக்கங்கள் நம்முள் ஊறஊற அவைகளை வேரறச் செய்வதற்கு அதிக நாளும் சிரமமும் பிடிக்கும். ஒருவன் பலபிறவிகளாக ஷட்ரிபுக்களை" தனக்குக் கீழ்ப்படுத்த அல்லது அவைகளின் ஆதிக்கியத்தினின்று தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள ஒருவகையிலும் முயலாது அவைகளின் ஆட்சிக்கு இணங்கி ஈடுபட்டிருந்திருக்கும் பட்சத்தில், கேவலம் எண்ணின மாத்திரத்தில் அல்லது பரபரத்த முயற்சியினால் அவைகளை விலக்கி உடனே சாந்தியையும் சுத்தியையும் அவனால் அடைந்துவிடமுடியாது. நீ நல்லதனமாய்ச் சொல்லும் பேச்சுகளுக்கு அவைகள் எளிதில் இணங்கி வரா. "இந்த ஆதாரத்தில் எங்களுக்கு நீ பல உரிமைகளைத் தந்தாய்; ஆதலின் நாங்கள் இங்கு தங்கியிருக்கப் பிடிவாதமாய் எங்களாலானவரை முயன்றுபார்ப்போம்." என்று அவைகள் உன்னிடம் முறையிடும். இதைக் காட்டிலும் ஜடப் பிரகிருதியின் தர்மங்களெனப்படுகிற உடலின் இயல்களுடன் எதிர்த்துப் போராடுவதானது மிகக் கஷ்டம்.

ஆயினும் தபஸ்-சக்தியானது ஸர்வசக்திமான்; அமைதியுடனும் திண்மையுடனும் இதைப் பயிற்சி செய்தால் வெற்றியுண்டாவது திண்ணம். தவவுறுதியே காளியென்பதை உனக்கு இன்று மொரு முறை சொல்லுகிறேன். இது தன்னுடைய இயக்கத்தினால் புதிய நியமங்களையும், வழக்கங்களையும், குணங்களையும் கடைசியாக நிலை நாட்டித் தரும்; இவைகள் பழைய வழக்கங்களுடனும், நியமங்களுடனும், குணங்களுடனும் போரிட்டு நாளாவரிசையில் வெற்றி கொள்ளும். பழைய வைகள் தோல்வியுற்று பலம் குன்றியிருந்த போதிலும்—நம் சுபாவத்தில் அவைகளுக்குத் தங்கத் தக்க இடமில்லாத போதினும்—அவைகள் ஆதாரத்தை விட்டு நீங்காதிருப்பதற்காகப் பலவாறு முயன்று புதியவைகளுடன் எதிரிட்டுப் போராடிப் போராடிப் பார்க்கும். உனது நுகர்ச்சிகளையும் போகாதிகளையும் அனுபவிக்கிற உன்னைச் சுற்றியுள்ள சக்திக்கூட்டங்களின் படையானது உன்னுடைய பழைய சக்திகளுக்கு உதவியாகவிருந்து அவைகளைக் காப்பாற்றுகின்றன. இவ்விதம் எதிர்முட்டிப் போராடும் நிலையே யோகஸாதனத்தின் இரண்டாம்படி. நாம் இந்த இரண்டாம்படியை அடைவதற்குள்ளாகத் தவவுறுதியும் நமது ஆதாரமும் முறையே ஸித்தியையும் சுத்தியையும் பெறாமல் இருந்தால், இப் படியினின்று சமாளித்து வெளிவருவதற்கு நமக்கு நிரம்ப கஷ்டமாகவிருக்கும். எதிர்த்துப் போராடும் பழைய சக்திகளின் திறமைக்கு முடிவு இல்லையென்றே சொல்லலாம்.

சிரத்தை அல்லது ஞானம் நமக்குத் துணையாயிருந்தால் கடைசியாக இவ்விடத்தும் தவவுறுதி வெற்றியைப் பெறும். வெற்றி நம் பக்கமிருந்த போதிலும் தோல்வியுற்று நம்மைவிட்டோடிய பழக்கவழக்கங்கள் குணங்கள் முதலியன அடிக்கடி நம்முடைய ஆதாரத்தில் புக முயன்று, தாங்கள் இழந்த ஸ்தானத்தை மறுபடி யடையப் பெரிதும் பாடுபடும். இதற்கே திரும்பத் திரும்ப வந்திடர் விளைக்கும் இயல் அல்லது ஆவர்த்தக இயல்" என்று பெயர். தவவுறுதியும் ஆதாரமும் எவ்வளவிற் கெவ்வளவு ஸித்தியையும் சுத்தியையும் முறையே பெற்றிருக்கின்றனவோ அவ்வளவிற்கவ்வளவு பழைய ஸம்ஸ்காரங்கள் பலஹீனத்தை அடையும்; முன்போல், அவ்வளவு அடிக்கடி வந்து அவைகள் நம்மைத் தாக்கமாட்டா; அவ்வாறு ஒருகால் நம்மைத் தாக்கிடி

ஹும் அவைகள் நமக்கு நீடித்த இடர் விளைக்க முடியாது. ஆனால் தவவுறுதி பூரணவிருத்தியை அடையாத பொழுது, அசுத்த ஆதாரத்தில் ஆவர்த்தக இயல் எதிர்மூட்டிப் போராடும் இயலைப் போலவே நீடித்த காலம் துன்பம் விளைக்கும்.

மேற்சொன்ன பிரதிகூலமான இயல்களைப் போலவே மூன்று அநுகூலமான இயல்களும் இருக்கின்றன. ஒரு புதிய வழக்கம் அல்லது குணம் நம்முள் நிலைத்தவுடன் அது வலிமையையும் விருத்தியையும் பெற்று வளர வேண்டுமென்பது பிரகிருதியின் நியமம். அவ்வழக்கம் அல்லது குணம் இடம்பெறப் போராடும்வரை எந்த நிமிஷத்திலேனும் யோகஸாதகன் பிரஷ்டன் ஆகலாம். அதாவது தவறு, வலியின்மை, ஆத்திரம் முதலியவைகளினால் அவன் போராட்டத்தினின்று களைத்துச் சளைத்துப் பின்வாங்கலாம். இது ஒன்றே ஒரு யோகி அடையக்கூடிய வீழ்ச்சி. இவன் போராட்டத்தினின்று பின் வாங்க இணங்காதவரை தவறும், தாத்காலிக நிலைபெற்ற தோல்வியும் பிரம்ஸமாக கருதப்படமாட்டா. நேர்மைக்குணம் ஒரு தரம் ஏற்பட்டு நிலைத்தவுடன், அது தன் ஆட்சியையும் போகத்தையும் முற்றிலும் அனுபவித்தாகும்வரை அதை எவராலும் அழிக்கமுடியாது.

ஆயினும் தவவுறுதியின் பலஹீனம் நீங்கிஅதற்கு நற்பயிற்சி உண்டாகும் வரை முன்னேற்ற வளர்ச்சி மெதுப்பாடாகவே இருக்கும். எவ்வளவிற் கெவ்வளவு தவவுறுதியின் விருத்தி ஆதாரத்தைச் சுத்தியாக்குகிறதோ அவ்வளவிற் கவ்வளவே முன்னேற்ற வளர்ச்சியும் விரைவாக நடை பெறும். இவ் வுலகில் ஒவ்வொன்றும் ஒரு முறைப்படி செய்யப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பலனை, ஒரு நியமப் பிரகாரம் படிப்படியாய் நெடுகத் தொடரும் செய்கைகளின் சேர்க்கையானது ஈன்றுதருங்காலத்து அது முறை யெனப்படுகிறது. இவ் வித முறையின் படிகளை மெதுவாய் ஏறிக் கடக்கலாம், அல்லது விரைவாய்க் கடந்து செல்லலாம். ஒன்றன் பின் ஒன்ருக, அடுத்தடுத்து, படிகள் கடக்கப்படும் ஒழுங்கிற்கு கிரம இயல் என்று பெயர். நீ பல மைல் கற்களை வழியில் கடந்தாகவேண்டும்—நீ இவைகளை நடந்து கடக்கலாம், அல்லது வண்டியிற் சென்று கடக்கலாம், அல்லது ரயில் வண்டியிற் சென்று கடக்கலாம்—எவ்விதமாயாவது இவைகளை நீ கடந்தாக வேண்டும். தவவுறுதியின் வளரும் வன்மையினால் மெதுப் போக்கை வேகப் போக்காக மாற்றிக் கொள்ளலாம்.

காளியானவள் மனிதக் கட்டுகளினின்று விடுபட்ட பொழுது அவள் மனித சக்தியாக இருப்பதினின்று மாறி மனிதனுள்ளத்துறையும் பகவத்-சக்தியாக ஆவ்விடுகிறாள். அச்சமயம் கிரம இயலானது ஏகாக்ர தீவ்ர இயலாக மாறி விடுகின்றது. ஒவ்வொரு மைல்கல்லாகக் கடந்து செல்வதற்குப் பதிலாக, முதற் கல்லிலிருந்து மூன்ருவது கல்லாகக் குதித்துத் தாண்டி வழியின் முடிவை எட்டுவதை இந்த இரண்டாவது முறைக்கு ஒப்பிடலாம். இப்பொழுதும் நீ முன் போலவேதான் ஒவ்வொரு கல்லையும் கடந்து செல்கிறாய்—ஆனால் வழியிலுள்ள ஒரு சில கற்கள் கடக்கப் படாது தவிர்த்து விடப்பட்டன போல் உன் கண்ணுக்குத் தோன்றும். உண்மையைச் சொல்லுமிடத்து உன் கண்களிற் படா வண்ணம் அவ்வளவு ஜல்தியாகவும் எளிதாகவும் அவைகளை நீ கடந்திருக்கின்றாய். இக்காரணம் பற்றியே இவ் வியல் முறைக்கு "ஏகாக்ர தீவ்ர இயல்" அல்லது சுருக்க வழியியல் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

கடைசியாகச் செயல்களின் ஒரு பகுதியில் அல்லது செயல்களனைத்திலும் ஒருவன் பகவத் தன்மையை அடையும்பொழுது ஏகாக்ர தீவ்ர இயலானது உள்ளடங்கி நெருங்கிவளரும் இயலாக மாறிவிடுகின்றது. இந் நிலையில் தன்னாகவும் உடனுக்குடனேயும் ஒவ்வொரு செயலும் பலனை விளைவிக்கும்—எவ்வித முறையும் கையாடப் படாததுபோல் நமக்குத் தோன்றும். இவ்வியல் முறையில் அதிசயப்படக்கூடியது ஒன்றுங் கிடையாது. வெகு சகஜமாயும், எளிதாயும், விரைவாயும் சகலமும் இயங்குவதினால் கிரமஇயல் முறையில் நடக்கவேண்டியதனைத்தும் உள்ளிட்டோ அல்லது முழுதும் மறைந்தோ ஒரு நொடிப்பொழுதில் நடந்து விட்டமாதிரி தோன்றும். இதற்கு "உள்ளடங்கிய துரித இயல்" எனப் பெயர்.

இரண்டாவது நிலை அல்லது படியை அடைய முடியுமானால் அதுவே அநேகருக்குப் போதுமானது. அவதார புருஷன் அவனது மகத்தான வீபூதியினாலேயே மூன்ருவது நிலையைப் பெற முடியும்.

ஆசையினால் நீ தாமதம் அல்லது தவறலைக் கண்டு அதைரியப்படக்கூடாது. வன்மையும் உறுதியில் தூய்மையும் இருந்தால் போதுமானது. இச்சையினின்றும், முயற்சியினின்றும், தக்க இடத்தைவிட்டுப் பிறழ்தலினின்றும் விடுதலை பெறுவதையே நான் இங்கு சுத்தியெனச் சொல்லியுள்ளேன். முதலில் தவவுறுதியினுடைய ஆத்ம சுத்தியை ஒரு முனைப்பட்டுத் தேடிப் பெற முயற்சிப்பதானது உத்தமமாகும். இதைப் பெறப் பலனை அடைவதில் உள்ள இச்சையைச்சாந்தஞ்செய்வது முதல் அவசியம். உறுதியைப் பிரயோகிக்குந் தருவாயில் சித்தத்தையும் புத்தியையும் சாந்தமாக்கவேண்டும்—இது இரண்டாம் அவசியம். உறுதிப்பிரயோகத்தில் ஆத்மஞானத்தை வளரச் செய்தல் மூன்ரும் அவசியம். இவ்வழியில் உறுதியைப் பயிற்சி செய்வதினால்—அதாவது "ஆத்மானம் ஆத்மனு"—ஆதாரத்தின் தூய்மை தன்னாகத் தயாராகும்; ஞானமும் வளரவும் இயங்கவும் தொடங்கும்.

மக்கள் அறம்

(*)

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுவது)

வாழ்வின் உண்மையை அறிய அலையும் மனதில் "நாம் எங்கிருந்து, என், எதனால் இவ் வுலகிற்கு வந்தோம்?, பிறகு எங்கு செல்கிறோம்?" என்ற வினக்கள் உதிக்கும். இக் கேள்விகளுக்கு விடை பெறவே சிறந்த ஆத்ம ஞானிகளும் தங்கள் ஆயுளைக் கொடுத்திருக்கிறார்கள். தான் ஏன் உலகிற்கு வந்தது, தான் செய்வதென்ன, செய்யவேண்டியதென்ன என்பதை யறிபவன் தன்னை யறிந்தவனாவன். தன்னை யறிந்தவனுக்கு உலகில் அரியதொன்றுமில்லை. தன் பிறப்பின் காரணமான வினையை அறிந்து அதை முடித்தல் மக்களின் முதல் அறம்.

உலகம் கடவுளின் ஆலயம். உயிர்களெல்லாம் கடவுளின் திருமேனி. இறைவன் தன் மகிழ்விலேயே உலகைப் படைத்துக் காத்து அடக்குகிறார். பரம்பொருளின் நினைப்பினாலும் பராதேவதையின் சக்தியினாலுமே உலகம் நடக்கிறது. இவ்வுலகெங்கும் பராசக்தி நிரம்பியிருக்கிருள். அவளில்லாத அணு இல்லை. பராசக்தி, தன் ஆடல்களைச் செய்வதற்கே இவ் வுலகைப் படைத்தாள். அவள் அமரும் இப் புவிக் கோயிலின் ஊழியஞ்செய்யவே எல்லா வுயிர்களும் படைக்கப்பட்டன. இப் புவி யெங்கும் அவள் சந்நிதியாதலின், நாம் எவ்வினை செய்யும்போதும் அவள் உருவம் எதிரே தோன்றவேண்டும். அவ் வெண்ணம் உறுதி பெறுமாயின், தாயின் முன்னே தீயது செய்யத் துணியோம். உலகம் கோயில் என்ற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஏற்படுமாயின், உலகில் தீங்கு செய்ய மக்கள் உன்னார். இவ் வுணர்ச்சி மனதிற் பதியின், மக்கள் தூய்மை யுறுவர்.

ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு சிறந்த நோக்கங் கொண்டே படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வினையையும், அதைச் செய்ய ஏற்ற ஆயுளையும் ஈந்து, நம்மைப் பராசக்தி உலகிற் கனுப்பினாள். அவ்வினையை நாமே முடிக்கு மட்டும் நாம் இப் புவி யரங்கில் தோன்றலும் மறைதலுமாக விருந்து, வினை முடிந்ததும் அவள் அருட் கடலில் கலக்கிறோம். ஆசைக்குமிழான இவ்வாழ்வு அவள் அருட்கடலில் மூழ்கு மட்டும் பிறவி நம்மை விடாது.

இவ் வுலகம் ஒரு பரீட்சைக்கூடம். நாம் வினை யென்னும் கேள்விக்காயிதத்தைப் பெற்று அதற்கு விடை யெழுத வந்திருக்கிறோம். விடையளிக்கப் போதிய ஆயுளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப் பரீட்சைக்கூடத்தில் நம்மைக் கடவுள் இடைவிடாது மேல் பார்க்கிறார். நம்முட் பலருக்குக் கேள்விகளை

புரியவில்லை. சிலருக்கு விடை தெரியவில்லை. சிலர் அதைப்பற்றி யெண்ணாமல் சோம்பலுடன் வேறு பொருள்களில் மனதைச் செலுத்திப் பலவிதமாக மயங்குகின்றனர். மிகச் சிலர் சரியாக விடை யிறுக்கின்றனர். விடைத்தாளைக் கொடுக்க மணியடித்ததும், எல்லோரும் வெளியே செல்லவேண்டியதுதான். பரிட்சையில் தவறினவர்கள் மறுபடியும் வரவேண்டியதுதான். தேறினவர்கள் மேன்மேலும் செல்லவேண்டியதுதான். ஆதலின் தன் வினையை யறிந்து அதன்பால் முயலுவதே மனிதனுடைய முதல் அறம்.

பசுக்கூட்டங்கள் பல இருப்பினும், கன்று தன் தாயைத் தேடியே செல்லும். அதுபோல சற்று எண்ணிப்பார்த்தால், இவ்வுலகாகிய வினைக்கூடத்தில் நமது மனம் நமக்குரிய வினையை நாடிச் செல்லும் பராசக்தி ஒவ்வொருவர் வாழ்விற்கும் ஒவ்வொரு வாய்க்கால் வகுத்திருக்கிறாள். அவ் வாய்க்கால் வழியாகவே நமது ஜீவநதி பாய்ந்து, உலகைச் செழிப்பிக்கத் தன்னையே யீந்து, பிறகு ஆனந்த வாரியில் கலக்கிறது. தன் வினையையும் வழியையும் அறிந்து செல்வதே மனிதனுக்கு ஆனந்த சுதந்திரத்தைத் தரும். அவ்வினையை யறிவதே தன்னையறிவது. தனக்கு இயற்கையாக ஏற்பட்ட வினைவாய்க்காலினின்று தப்பி, மயங்கி, எங்கெங்கோ சுற்றி வாழ்க்கையை மணல் வனாந்திரத்தில் இறைப்போர் பிறந்தும் பிறவாதவரே யாவர். அவர்களுடைய வாழ்வு குட்டை நீர் போல் தேக்குற்றுப் பல அழுக்குகளைச் சேர்ந்து பயனறுகின்றது.

ஒவ்வோருயிரும் உலகின் வினைக்கு அணியாகப் படைக்கப்பட்டதென்பது நமது நெஞ்சிற் பதிய வேண்டும். நுண்ணியதுளியினங்கள் (அமீபா) முதல், ஆறறிவுள்ள மனிதன் வரையிலுள்ள எல்லாத் தோற்றங்களும் தம்மளவில் உலகிற்கு உதவி, தம்வாழ்வினின்று ஒரு சிறந்த உண்மையைக் காட்டியே மறைகின்றன. துளியினங்கள் ஒன்று சேர்ந்து பெரிய பாறைகளாகி, எகிப்து தேசத்து கோபுரங்களாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. கடல் துளியினங்கள் (கிளாபின் ஜெர்மியா) சுண்ணமலைகளை யெழுப்புகின்றன! பவழப்பூச்சிகள் நூற்றுக்கணக்கான யோசனைகள் நீளமுள்ள, உயர்ந்த தடைச்சுவர்களையும், தீவுகளையும் செய்கின்றன. மண்ணுணிப்புழு, பூமியை உழுது பயிர்களுக்கு மெதுவாக்குகிறது. ஆ! தேனீக்களின் வழியாகவே கடவுள் சமூகவாழ்க்கையின் இலக்கணத்தை விளக்குகிறார். என்னே இவற்றின் களிப்பு!

கலைவல்லசிற்பிகளும் மயங்கும்படிகூடு அறைகளுள்ள ஒரு கூட்டில் ஆயிரக்கணக்கான தேனீக்கள், எவ்வளவு சாந்தமாக வாழ்கின்றன! தங்கள் இராணித் தேனியின் கட்டளைகளை எப்படிப்பணிகின்றன! இராணித்தேனீ எவ்வளவு பெருந்தன்மையாய் நடக்கிறது. சிலதேனீக்கள் இராணியின் ஊழியங்களைச் செய்கின்றன. மற்றவை பிரம்மச்சரியம் பூண்டு தமது சமூகத்தொண்டைச் செய்கின்றன. சில அறைகளைச் சுத்தம் செய்கின்றன. சில பெருந்தேனீக்கள், பகைவரிடமிருந்து தம்கூட்டத்தைக் காக்கின்றன, சில நண் மலரை நாடிச்செல்லுகின்றன. சில தேன் சேர்த்து வருகின்றன. கூட்டில் ஈக்கள் அளவுக்கு அதிகமாய்விடின், இராணி ஈ ஒரு கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு, வேறு இடத்திற்குச் சென்று விடும் பிறகு ஒரு இளந்தேனீக்குத் தக்க உணவையும் நல்ல பழக்கங்களையும் புகட்டி அதை இராணியாக்குகின்றன. எப்போதும் சுறுசுறுப்பாயிருக்கும் இத் தேனீக்களினின்று நமது கடமையை யறிவோமாக! எறும்புகளின் நேசமும், சுயநலமற்ற தன்மையும் முன்னறிவும், மனிதனைத்திருத்துமாக! அவை மாரிகாலத் தேவையைக் கோடையிலேயே தேடுவதுபோல், மனிதன், மறுமையின் தேவையை யிம்மையில் தேடி, நற்பணி புரிவதென்றோ! வண்டுகள் பூந்தாள்களைப் பரப்பிப் பழங்களைத் தருவது போல், நமது யுத்தி, சுத்தம் என்ற தாதுவை மனமலரிற் பெய்து, அறிவை பழுக்க வைப்பதென்றோ. மனிதசமூகத்தில் போர்கள், அற்று, இருளற்று, இருப்பதென்றோ!

முன் சொன்ன உயிர்களினும் மனிதனுக்கு அறிவு, மிகுதியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மனிதனுக்கு மற்றெல்லா உயிர்களின் பொறுப்பையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா உயிர்களுக்கும் பணி செய்யவே மனிதன் பிறந்திருக்கிறான். யானைக்குத் தன் நிறையில் நூற்றிலொரு பங்கு மூளையும், திமிங்கிலத்திற்கு, மூவாயிரத்தில் ஒரு பங்கு மூளையும் இருக்கிறது. ஆனால் மனிதனுக்குத் தன் நிறையில் நாற்பதிலொருபங்கு மூளையைக் கடவுள் கொடுத்திருக்கிறார். தன் பெரிய அறிவினால் நடமாடுங் கோயில்களுக்கு ஊழியஞ் செய்யவே மனிதன் ஏற்பட்டிருக்கிறான்.

ஒவ்வொரு பிராணியின் தர்மத்திற்கும் மனிதன் காவலன். மனிதன் பிராணிகளின் புவியரசன். அரசனென்போன் அறத்தின் காவலன். மற்ற உயிர்களினும் மனிதனுக்கு உயர் பெருங் கருமங்களுள்ளன. ஊண் உறக்கம், ஊடல் கூடல், ஈனல் பேணல், இவையெல்லாம் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான செயல்களே. இவற்றை மட்டும் செய்ய மனிதன் பிறக்கவில்லை. விலங்குகளெல்லாம் உண்டு உறங்கி மாறுபாடில்லாத வாழ்வு வாழ்கின்றன. மனிதன் புதிய புதிய காரியங்களைச் செய்கிறான். நேற்று நுகர்ந்தது இன்று தெவிட்டிப் போகிறது. விலங்குகள் தமக்காகவே வாழ்கின்றன. அவை பகுத்தறிவற்றன. வயிற்றிற்கும் மூர்க்ககுணத்திற்கும் அடிமைப்பட்டன. தன்னயங் கருதுவன. ஆனால் மனிதன் தன் சமூகத்திற்கும், உலகிற்கும், அரிய தொண்டுகள் செய்து, தன் அறங்காத்து, அதற்காகத் தன் உயிரையுங் கொடுக்கிறான். தன் பொருளினும், உயிரினும், உண்மையே மேல் என்று மனிதன் உறுதியாயிருக்கிறான். தெய்வ வழிப்பாட்டையும், ஆருயிர் வழிப்பாட்டையும், மனிதன் செய்யக் கடமைப்படுகிறான். நடமாடுங் கோயில்களுக்குத் தொண்டு செய்து, படமாடுங்கோயிற் பகவனின் அருளெய்துகிறான். விலங்குகள் தமக்கெனவாழுகின்றன. மனிதன் பிறருக்காகவே மூச்சுவிடுகிறான். மனிதன் இரக்கமுள்ளவன். அறிவுணர்ச்சி கொண்டவன். தன் குடும்பத்திற்கும் நாட்டிற்கும், உலகிற்கும், தான் செய்ய வேண்டிய கடமைகளை மனிதன் உயிரினும் பெரிதாகப் போற்றல் வேண்டும். மனிதனுக்குத் தியாக புத்தியே அழகு. விலங்குகளுக்குப் போக புத்தியே மிகுதி. பிறர்க்குப் பணி செய்யும் ஆற்றல் மிகவே மனிதன் உண்கிறான். மனிதன் அறவுணர்ச்சியுடன் பிறர்க்காக வாழ்ந்த வரையில் சமாதானமாக இருந்தான்; தன்னறந் தவறியதும் மனிதவிலங்கானான்.

அந்தோ! உலகில் இப்போது மக்களின்நிலை யென்ன! நாகரீகம் பெற்றோமென்று செருக்குறும் கண்டங்கள் பயங்கரமான போர்க்களங்காயின. தேசத்திற்குத் தேசம் போர்களும், பகையும் ஓங்கின. ஆயிரக்கணக்கான மக்களைக் குண்டுகளால் கொலைசெய்வதும், எளியவரைப் படை கொண்டு நசுக்குவதும், பிறநாடுகளிற் குடியேறி சுதேசிகளை யழிப்பதும், சுயநலம் நிறைந்த வாணிபத்தால் பிற நாட்டின் செல்வத்தை யுறிஞ்சி, அந்நாட்டாரை ஏழையாக்குவதும், பணவெறியும், தன்னயமும் இடம்பமும், தேவைகளைப் பெருக்குவதும், மிருகபலத்தையும், மிருகத்தனமான போகங்களை விழைவதும் மனிதனை மிருகமாக்கின. எளிமையுள்ள கொரியாவை ஜப்பான் படுத்துகிற பாட்டைப் பாருங்கள். ருஷியா அரசாங்கத்தார் மஹாத்மாவான லெனினைப் படுத்திய பாட்டை நாம் அறிவோம். ஆஸ்திரியமன்னன், ஹங்காரியின் ரக்ஷகனை தீக்கை என்ன பாடு படுத்தினான்! அஹங்காரமும், மிருகபலமும் நிறைந்த பலவான்கள் உத்தமர்களைச் சொல்லவொண்ணாத துன்பத்துட்படுத்துவது மனிததர்மமோ!

மனுநீதிகண்ட சோழனும், பொற்கைப்பாண்டியனும் அசோகனும், ஹர்ஷனும் ஆண்ட இப்பரதகண்டத்தின் நிலைமை தான் என்ன! அந்தோ சொல்லவும் நா கூசுகிறது. கங்கையும் காவிரியும் வளஞ் செய்யும்நாட்டில் பட்டினியோடு தவிக்கும் ஏழைகளின் கண்ணருவியே பாய்கிறது. வறுமையும், மடமையும் நாட்டிற் புகுந்தன. அயல் நாட்டுப் பொருள்களுக்கெல்லாம் இந்தியா ஒரு சந்தையாகி, வருஷந்தோறும் கோடி கோடியாகக் கொள்ளைகொடுக்கிறது. டாக்காசல்லா நூற்ற நாட்டார், தம் ஆடைக்கும், ஆயிரக் கணக்கான யோசனை தூரத்திலிருக்கும் ஒரு சிறு தீவினருக்கு அடிமையாயினர். குடியானவரெல்லாம் ஒப்பந்தக் கூலிகளாகத் தம் விளைநிலங்களைத் தரிசாக்கி, நத்தால் கொழும்பு முதலிய விடங்களில் அயல் நாட்டாருக்குத் தம் வாழ்வை யிறைத்து அடியும் அவமானமும் படுகின்றனர்.

சங்கரரும், காளிதாசனும், கம்பரும், வள்ளுவரும், சாத்தனாரும், இளங்கோவடிகளும் உதித்த நாட்டில் நூற்றுக்கு ஏழுபேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்! கல்வியோ அடிமைத்தொழிலை நோக்கமாகவுடையது. படித்தவர் அடிமை வேலைகளிற் புகுந்து உயிரைக் கச்சேரிகளில் வைத்துவிட்டு உடலோடு வீடு சேருகின்றனர். வாழ்வின் வினையெங்கே, இவர்கள் செயலெங்கே! படித்து வேலையின்றி யலைவோர் எத்தனை பேர் அறவாழ்வுமில்லை! ஒழுங்கான ஜீவனமுமில்லை

வாழ்வும் இன்புறுவதில்லை! ஆன்மலாபமுமில்லை. அறம், பொருள், இன்பம், வீடு, இந் நான்குமற்ற கல்வி பயிலவோ அந்தோ எம் நாட்டினர் ஆளாயினர்! நாட்டின் வீரத்தனமும், பெருமையும் போயிற்று. பணக்காரர்களோ, போட்டி போட்டு, ஆயிரம் ஏழைகள் வாழக்கூடிய இடத்தை வளைத்து மாளிகைகள் கட்டுவதும், ஏழைகளின் பணத்தை யுறுஞ்சுவதும், மின்னார்களின்பமே மெய்யென ஆழ்வதும், ஓயாது அணிகள் செய்வதும், தன்னை நீதியாய் எதிர்க்கும் ஏழைகளை, வழக்காலும், பயத்தாலும், வலிமையாலும், வருத்துவதும், தம் குற்றங்களை மறைப்பதும், பிறரிடம் செருக்குடன் நடந்து கொள்வதுமாயினர். உலகில் ஏழைகள் ஏழையாகின்றனர். விலங்குகள் நகங்களாலும், பற்களாலும் கொல்லுகின்றன. ஆறறிவுள்ள மனிதன் துப்பாக்கி பீரங்கி முதலியவற்றால் ஆயிரக்கணக்கான தன் சகோதரர்களையே கொல்லுகின்றான்! மனிதன் விலங்காகிக் கொண்டே வருகிறான். ஏனெனில் தன் தருமத்தை மறந்தான்.

தருமம் கடவுளுடன் பிறந்தது; வேதங்களுக்கும் முந்தியது; என்றும் அழியாதது; எல்லையற்றது; நூற்றாண்டிற்கு நூற்றாண்டு, தேவைக்குத் தக்கபடி புதிது புதிதாய் அரும்புவது. அறமே கடவுளின் சட்டம். தருமம் உயரஉயரக் கடவுட்டன்மை யுயரும். தருமத்தை உயர்த்தக் கடவுளே மனிதவுருவுடன் வருகிறார். தருமத்தைக் கடவுள் கண்ணெனக் காக்கிறார்.

கடவுளுக்கும் மக்களுக்கும் நாம் செய்யவேண்டிய கடமையே அறம். அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொற்களை விடுத்து, மனத்துக்கண் மாசிலனாகிய வாழ்க்கையே அறவாழ்க்கை. அவ்வாழ்க்கையால் வருவதே யின்பம். அதுவே சிறப்பும் செல்வமும் ஈனும். அதுவே உயிரின் நற்றுணை. அறம் யாவருக்கும் பொதுவே. ஆயினும் அவரவர்களுடைய குண கருமங்களுக்கும், ஆற்றலுக்கும் ஏற்றவாறு அறங்கள் வகுக்கவும் பட்டிருக்கின்றன.

தன் குணகருமத்திற்குத் தக்க அறமே தன்னறம் அல்லது சுதர்மம் எனப்படும். பாரத நாட்டில் நால் வகையான சுதர்மங்கள் சமூக ஊழியத்திற்காக ஏற்பட்டன. ஓதலும், ஓதுவித்தலும், உலகின் முன்னேற்றத்திற்காக யாகம் செய்வதும், பொறியடக்கமும் ஞானமும், பற்றறலும் தவமும், சுத்தமும், பொறுமையும், அந்தண அறம். தைரியமும், புகழும் வீரமும், போர்ப்பயிர்ச்சியும், நாட்டின் காப்பும், ஆட்சியும் க்ஷத்திரிய தருமம். வாணிபமும், பசுக்காத்தலும், பயிர்த்தொழிலும் வைசியர் தருமம். வேளாண்மையும், பொதுவூழியங்களும் ஏனையர் அறமாயின. ஆனால் அவ் வகுப் பெல்லைகளைக் காலவெள்ளம் பேர்த்துவிட்டது. இப்போதோ தக்கோர் தக்கதைச் செய்யலாம். சாதி முறை கலைந்துவிட்டது. அந்தணர் செய்யாத தொழிலில்லை. தவம் அருகியது. அவம் பெருகியது. வாணிப நோக்கங்களும் பொய்சாட்சியும், செருக்கும், அடிமைத்தனமும், தன்னயமும் உத்தம சாதியின் ஒளியை அணைத்தன. வீரக்ஷத்ரீயர் அருகினர். தொண்டர் அன்பற்றனர். வைசியத் தொழிலை அனைவரும் கொள்ள முயலுகின்றனர். நாடு கவருவதும், நடையல்லா வாரங்கொள்வதும், உலகில் ஓங்கியது. குடி, கஞ்சா, சீட்டு, சூது, புகையிலை தேயிலை, காப்பி, களவு, கொலை, விழைவு, தன்னயம், சோம்பல், தரித்திரம், அடிமைத்தனம், பொறாமை முதலிய பிசாசுகள் குகை போன்ற வாய்களைத் திறந்து கொண்டு தருமத்தை வேட்டையாடுகின்றன! அந்தோ! எத்தனை சாதிச் சண்டைகள்! சமயச் சண்டைகள்! மனிதருள் எத்தனை பிரிவினைகள்! எவ்வளவு பயங்கரமான செயல்கள்! மோசங்கள்! 'தான்' என்ற அசுரன் மனிதனுடைய தெய்வீகவுணர்ச்சியைத் தின்கிறான். மனிதன் வயிற்றிற்கு அடிமையாகி, தெய்வத்தை மறந்தான். தீனியும், மயக்குமே செட்து விலங்கொடு அனையனாயினான். மனிதன் எப்போதும் இப்படியேயிருப்பானோ அல்லது அவன் ஈடேற ஒருவழியுண்டோ? பயங்கரமான காட்டிற்குள்ளும் ஈசன் ஒரு வழியைக்காட்டுகிறான். மனிதன் வறுமை மடைமையற்றுப் பிழைக்க ஒரு மருந்துண்டு.

அதுவே சுத்தம். சுத்தமே மனிதனைப் புனிதனாக்கி, அவனை அறவாழ்விற் செலுத்தும். மன மொழி மெய்களில் தூய்மையுற முயல்வதே மனிதனின் பெருமுயற்சி; அதுவே வாழ்வின் தர்மம். பற்றறுதல் அன்பு, அருள், இரக்கம், தன்னயமின்மை, தைரியம், பொறுமை இவையெல்லாம் மனத் தூய்மை யாக்கும். சத்தியத்தை தைரியமாக வுரைத்தல், இன்சொல், புறங்கூறாமை, தூய வழிகளைப் பிறருக்கு உரைத்தல், முதலியன மொழித்தூய்மை தரும். தன் உணவு உடை முதலிய தேவைகளைப் பாவமற்ற வழிகளில், சுதந்திரமாக அடைதல், தன் வயிற்றிற்காகப் பிறருக்கு ஆட்படாமை, தன் ஆயுளை அருட் தொண்டிற் போக்குதல் முதலியன யாக்கையை தூயதாக்கும். இம் மாதிரி மனமொழி மெய்களில் சுத்தமடைந்தவன் வாழ்க்கை தெய்வீக வாழ்வாகும். பரிசுத்தமடைந்தவன் போகவெறுப்பும் யோகவிருப்புமுற்றுத் தன்னயம் விடுத்துத் தன் அருள் மனத்தைப் பராசக்தி யிருக்கும் மலர்க்கோயிலாக்குகிறான். அவன் வாழ்வின் தேருக்குப் பராசக்தியே சாரதியாகிறாள்.

உலகில் அரிய அருட்பணிகள் செய்த அவதாரர்கள் எல்லாரும், தங்கள் பரிசுத்தத்தினாலேயே உலகைப் பரிசுத்தமாக்கினர். சிவபிரான்மேல் மிக்க அன்புடன் தன் உடலை மறந்து, தூய்மையும், தொண்டும் கொண்ட அப்பருக்கு நீற்றறை குளிர்ந்தது, நஞ்சு அமுதானது. யானை வணக்கஞ்செலுத்தியது. கல் தெப்பமானது. தன் மனதைப் பரிசுத்தமாக்கி, உத்தம பத்தினிபோல், தன் நாதனான சிவனை எண்ணியுருகியதாலன்றோ, மாணிக்கவாசகர், தனக்கு அரிமர்த்தனன் செய்த இடர்களைத் தாங்கிச் சத்தியத்தை நிலை நிறுத்த முடிந்தது. உண்மையை அஞ்சாதுரைத்த வீரச் சிறுவனான பிரஹ்லாதன் கடவுளின் பரிவிற்குரியவனானான். தன் சரீரியின் அழிவற்ற தன்மையையுணர்ந்த அன்பு வடிவான ஏசுகிருஸ்துநாதர், தன் இரத்தத்தை உலகிற்காகச் சிந்தி அமரரானார். தன் மனதை எப்போதும் ஆண்டவனிடத்திலேயே வைத்த முகம்மது ரசூல் உலகிற்கு, சாந்தமதத்தை யீந்தார். போகசுகத்தை விடுத்துக் கந்தையுடுத்தி வீரத் துறவு பூண்டு, சீலமும் புரிவும், சிறந்த, புத்தரின் பெருமைதானென்னே! தன் புண்ணியத்தையே தானமாய்க் கேட்ட மாயனுக்குத் தன் உதிரத்தையே தாரைவார்த்து ஈந்த கர்ணனுக்கு இணையாவர் யாவர்! தன் வாழ்வின் தேவைகளைச் சாந்தமான நெசவால் அடைந்து இல்லறம் நடாத்திய வள்ளுவரின் பரிசுத்தமான வாழ்க்கையினின்றன்றோ திருக்குறள் அரும்பியது. நமது பாரதநாட்டின் இரக்ஷகனாக விளங்கும் மகாத்மா காந்தியடிகள் அஹிம்சையையே தவமாகக்கொண்டு, உலகையே பரிசுத்தமாக்கி வருவது உலகறிந்ததன்றோ? இன்னும் ஸோக்ராத்தன் கார்ல்மார்க்ஸ், தோல்ஸ்தோயி, லெனின் ஆகிய பெரியோர் தங்களைப் பரிசுத்தராக்கிக் கொண்டே உலகையெல்லாம் திருத்தினர். ஆதலின் பரிசுத்தமே நமக்கு பிறப்பின் பயனைத் தரத்தக்கது. மனோ வாக்குக் காயங்களை சுத்தப்படுத்தி, எங்கும் கோயில் கண்டு, உலகில், தொண்டுவாழ்வு வாழ்வதே மனிதனுக்குக் கடவுளின் திருவடிகளைத் தரும். வாய்மையும், நன்மையும், நோன்பும் தொண்டும், அடக்கமும், சுத்தவடிவான கடவுளை அடையும் வழி. இவை யுள்ளவன் மனிதருள் தேவனாவான்.

பரிசுத்த மடைவதால்தான் உலகிலுள்ள இருளும் மிடியும், அடிமைத்தனமும், போரும் நீங்கி உலகு சாந்த முறும். தன் உணவையும் உடையையும் பாபமற்ற வழிகளில் தன் முயற்சியால் மனிதன் அடைவனாயின், உலகில் வறுமை யிராது. வறுமை ஒழிந்தால் பாபம் ஒழியும். உலகன்னை யொருவள்; அவள் மைந்தரே நாம்; பூமாதேவியின் வளங்களைப் பொதுவாகவே நாம் துய்த்தல் அறம்; என்ற உணர்ச்சி மக்கள் மனத்தில் பிறக்குமாயின், தம் தேவைக்குமேல் சேர்த்து வைக்கும் திருட்டே நாட்டின் ஏழ்மைக்குக் காரணம் என்பதை மக்கள் எண்ணி நடந்தால், இவ்வுலகமே புண்ணிய விண்ணாகும். அறவுணர்ச்சியுள்ளவன் தன் தேவைகளைச் சுருக்கிக்கொண்டு களிப்புற்று வாழ்வான். சுத்தமே மனித தர்மத்தின் வேதம், என்று மக்கள் உணர்ந்தால் உலகின் மதப்போர்கள் அடங்கும். எம்மதத்தாருக்கும் சுத்தம் சம்மதமே. அதனடிக்கீழ் பஞ்சமரும், அந்தணரும், இஸ்லாமியரும், கிருஸ்தவரும் சோராஸ்திரியரும், புத்தரும், ஜைனரும் வேறு எம்மதத்தினரும் கைகோர்த்து நிற்கலாம். வேதமும் கொரானும் விவிலும், தர்மநூலும், பரிசுத்தமாகும் வழிகளையே முறையிடுகின்றன. பரிசுத்தவுணர்ச்சியுள்ள மனிதன் அசர கோடி ஜீவராசிகளுள்ளும் ஈசனைக் காண்கிறான். எல்லா வகுப்பினரையும் இவ்வுலக அன்னையின் கைகளென மதிக்கிறான். தருமத்தை இலக்காக வைத்து வாழ்வதே மேலானது. தருமம் என்ற மேடைமீது எல்லோரும் சமமாக நிற்கலாம். நம்முள் தூயவுணர்ச்சிகளால் ஏற்படும் ஒற்றுமையே சிறந்தது. அதுவே நமக்கு வெற்றிதரும். அதுவே நமக்கு இணையற்ற வலிமை.

என்று நாம் சுத்தமனத்துடன் ஒன்றுபட்டோமோ, என்று நமது உணவுடைகளைப் பாபமற்ற வழிகளில் அடைந்தோமோ, என்று நம் தேவைகளைச் சுருக்கி இடம்பம் நீத்து, நாட்டது போற்றி, வீரமுடன் எழுவோமோ, அன்றே நமது ஆன்மாவிற்கும், நாட்டிற்கும் பூரண சுதந்திரம் எய்தும்; அன்றே சுதந்தரதேவி நம்மைக் கைகொடுத்து அழைத்துக்கொள்வாள். அன்றே நம் நாட்டைப் பிடித்த அடிமைப் பிசாசு ஒழியும். அன்றே உலகில் போர் ஒடுங்கிச் சாந்தம் நிலவும். அன்றே நாம் அமரநிலையடைவோம். அந்தத் தெய்வீக நாளையே நாம் சமீபத்தில் கொண்டுவர முயலுவோமாக!

நடமாடுங் கோயில்காள்! உலகம் ஒரு பெரிய ஊருணி. அதைத் தருமம் என்னும் காவற்காரன் காத்துக்கொண்டிருக்கிறான். அவன் அடிக்கடி "அசுத்தம் செய்யாதே! இது கடவுளுக்குக் கொண்டு போகும் அபிஷேகதீர்த்தம்! மக்கள் குடிக்குநீர்! அக்ரமஞ் செய்யாதே!" என்று கூவுகிறான். சுத்தமுள்ள அறிஞர், காவற்காரன் சொல்லாமலே தம் அறத்தையுணர்ந்து, அசுத்தம் செய்ய அஞ்சிச் செல்கின்றனர். பகுத்தறிவுள்ளவர்கள் காவற்காரன் கூவுவதைக் கேட்டு விலகுகின்றனர். தன்னயமுள்ளவர்கள் காவற்காரனின் அற்றம் நோக்கியாயினும், இருட்டிலாயினும் நம்மை ஒருவரும் அறியார் என்று எண்ணி அசுத்தம் செய்கின்றனர். சில அரக்கர், காவற்காரன் சொல்லச் சொல்ல, அவனையும் அடித்து வெருட்டி அக்ரமம் செய்கின்றனர். பின் சொன்ன இருதிறத்தோரால் குளம் முழுவதும் கெட்டுப்போய்விடுகிறது. ஊர் முழுதும் அவர்களால் வருந்துகின்றது. காவற்காரனும் வருந்துகிறான். அன்பர்களே! தரும தேவதை உலகிற் கூவிக்கொண்டிருக்கிறாள். தீமையாலும் வஞ்சகத்தாலும் உலகை அசுத்தமாக்காதின்மின்! இன்னா விடுமின்! இனியவை செய்மின்! தம்மறஞ்செய்மின்! சத்தியத்துய்மின்! பிறர்க்குதவுமின்! பீடுற்றொழுகுமின்! அறவழிநின்மின்! சுதந்திரம் பெறுமின்!

நம்மை அறநெறியில் நிற்கக் கற்பிப்பதே சகல சமயங்களிலும் மெய்ச் சமயமாகும்.

ஸவானரோலா.

* * *

தர்ம காரியங்கள் செய்யும்பொழுதுதான் ஒருவன் தெய்வ வழிபாடு செய்வதாய் சொல்லக்கூடும்.

ஸவான ரோலா.

* * *

குற்றம் செய்வது மனித குணம்; மன்னிப்பது தேவ குணம்.

போப்.

* * *

மற்றவையெல்லாம் அதிர்ஷ்ட வசத்தால் கிடைக்கும்; மனையாள் மட்டும் ஆண்டவன் அருளாலேயே கிடைப்பாள்.

போப்.

* * *

இவ்வுலகில் இன்பமாவது அறம் ஒன்றே: இவ்வுண்மையை அறிகுதி; மனிதன் அறிவதற்கு இது ஒன்றே போதும்.

போப்.

* * *

எவரைக் காணும்தோறும் இறைவன் ஞாபகம் வருகின்றதோ அவரே ஆண்டவன் அடியார்களில் சிறந்தவர்.

முகம்மதுநபி.

* * *

கற்றவர் என்பவர் யார்? கற்றபடி நிற்பவரே.

முகம்மது நபி.

1602 00
600 008. ★

பகவான் புத்தனும் மகாத்மா காந்தியும்

(ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி பாடியது)

அதிரதர் முதல வீர ரமர்க்களம் படைக ளேவி
உதிரமும் வாளு மொன்றி யுயிர்ப்பலி யுதவுங் காலம்
மதியறந் தயைநற் சீவ வளர்ச்சியில் வுலகி லோங்கப்
புதியவ னுதயஞ் செய்தான் புத்தனென் றெவரும் போற்ற. க

உயிரின முயிரை யுண்ண வொருபுற மறைக ளோதி
அயர்வுறு மதுவு மூனு மந்தண ரருந்தி வாழத்
துயர்பசி வறுமை யாதி துன்பமெப் புறத்துஞ் சூழத்
தயையக லுலகைக் கண்டான் தவித்துளந் தளர்ந்து நைந்தான். உ

துடைப்பெனித் துயரை யின்றே சூழ்கட் லுலகி னின்றும்
படைப்புறு முயிரும் பூண்டும் பஞ்சபூ தங்க ளாதி
நடப்புயர் பொருள்க ளியாவும் நவையகன் றுய்யு மாறென்
றடப்பெரும் பொறுமை சாந்தி யாதியாம் படைகைக் கொண்டான். ங

பெருமைசேர் கலையும் ஞானப் பெரும்புறக் கடலு மிந்த
இரவியு மதியு முள்ள எத்துணைக் காலங் காறும்
பரவுறு தருமம் நட்டுப் பகைசெகுத் தருளின் வெற்றி
திருமியெத் திசையுஞ் சீர்த்தி நிலைத்திடப் புரிந்து மீண்டான். ச

நாவலந் தீவி லிந்த நவையறு தருமந் தேய்ந்து
பாவமும் பழியு மோங்கிப் படையெடுத் தயலா ரெய்தி
யாவையுந் தமதாக் கைகொண் டாட்சியு மவரா தாகிச்
சேவையு மடிமை வாழ்வும் செழித்ததோர் காலந் தன்னில், ரு

மாந்தரிற் றருமந் தேயின் மாயவன் மனித னாகிப்
போந்திவண் காப்ப னென்னும் புண்ணிய மொழிக்குச் சான்றாய்
சாந்தமோ டறமு மோயாத் தயவுமோ ருருவ மாகிக்
காந்தியென் றொருபேர் கொண்ட கடவுள்மா முனிவன் வந்தான். சு

படையெடுத் தடுதல் நீக்கிப் பகைவர்தம் உறவு போக்கிக்
கொடுமையைப் பொறையால் வென்றிக் குவலயம் புகழும் வண்ணம்
அடிமையை நீக்க வாரீர் ஆரிய ரெவரு மென்றான்
விடுதலைக் குதயங் காட்டும் விரிகதி ரிரவி யன்னான். எ

ஆதலா லறிவின் மிக்கீர் அறப்பெருங் கடவுள் தானே
போதனாய்க் கண்ண னாகிப் புத்தனாய் ஏசு வாகிக்
காதலார் காந்தி யாகிக் காக்கவுங் கூடு மன்றோ
ஈதலா லுவமை மற்றிங் கியம்புத லெமக்கொன் றுண்டோ? அ

கண்ணனே யாக மற்றக் களங்கமில் புத்த னாக
அண்ணலாம் ஏசு வாக அன்றிநங் காந்தி யாக
புண்ணிய நாடும் நங்கள் புகழுமே காக்க வன்னார்
இன்னெழில் நாமம் போற்றி இருகரங் குவித்து மன்னே. கூ

ராஜகோபாலன் கடிதங்கள்

கூ சித்திரை உ௦.

பிரிய நண்ப,

இவ் வூரில் இருந்து வருவதில் ஒரு விஷயம் இடைவிடாது கண்ணில் பட்ட வண்ணமாக இருக்கிறது. ஜனங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஆலசியமாக, வன்மையின்றி, வேகமின்றி, செய்து வருகிறார்கள். என்ன மெதுவு! என்ன சோம்பல்! என்ன அஸ்வாரஸ்யம்! நிலத்தை உழுகிறவன் நிலத்தில் கொழுமுனை நன்றாக அழுந்தும்படி பிடித்து உழுகிறானில்லை. மரத்தை இழைக்கும்போதும், பலகைகளை அறுக்கும்போதும், கதவு முதலிய சாமான்கள் சேர்க்கும்போதும் தச்சனுடைய கை மிக மிக மெல்லச் செல்லுகிறது. இரும்பு அடிக்கும் கொல்லன் கூடவா 'சவுக்,' 'சவுக்,' என்று அடிக்க வெண்டும்? செம்மட்டியையும் பழுக்கக் காய்ந்த இரும்பையும் காணும்போதே என் புஜங்களின் தசை பூரித்து வஜ்ராயுதத்தின் வேகத்தைப் பெறுகிறது. பூரண பலத்தையும் பிரயோகித்துக் கடுமையாக வேலை செய்து, கடினமான காரியங்களை முடிப்பதில் ஊறிவரும் மனவெழுச்சியையும் மகிழ்வையும் அனுபவியாமல் இவ்வூர் ஜனங்கள் நடைபிணங்களாக நிற்பதைக் காண, எனக்கு ஒருபுறம் எரிச்சலும் இன்னொரு புறம் அவமதிப்பும் உண்டாகிறது. ஒரு கூட்டம் தேவாங்கு வாழ்க்கை வாழ்ந்து கொண்டா இருக்கும்? ஐயோ பாவம்! பெரு முயற்சியினால் வரும் சுகத்தை இவர்கள் என்றுதான் அனுபவிப்பார்களோ!

ஆனால் தமிழ் நாடு என்றைக்கும் இவ்வாறு இருந்ததில்லை. தமிழ் நாட்டின் மகாயுகங்களை நினைக்குங் காலத்தில் என் மனம் பூரிக்கின்றது. என் மார்பு விரிகின்றது. என் தோளில் புதிய வன்மை பிறக்கின்றது. நான் புதிய மனிதனாகவே போய்விடுகிறேன். முற்காலத் தமிழரின் பெருஞ்செயலை உள்ளது உள்ளபடியே நினைத்துப் பார்க்கும் போது, பிரம்மாண்டமனைத்தையுமே தன்னுள்ளே அடக்கி வைக்கக் கூடிய ஆற்றலையுடைய மனதுகூட இவ்வுத்யமத்தை அளந்து பார்க்கத் தனக்கு ஆற்றல் இராதோ என்று ஐயுறுகின்றது. யூத சக்ரவர்த்தி ஸாலமான் எத்தனைக் காலத்துக்கு முன் வாழ்ந்தான், யோசித்துப்பார். அவன் விரும்பி வருவித்துக் கொண்ட மயிற் பீலியையும் வானரங்களையும் தந்தத்தையும் அகிலையும் அவன் தமிழ்ப் பெயராலேயேதான் குறிப்பிட்டான் என்று யூத வேதம் கூறும். தோகை (மயிற்பீலி), கபி (குரங்கு), அகில் என்னும் தமிழ் வார்த்தைகள் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னமே எபிரேயபாஷையில் புகுந்துவிட்டன. நமது இஞ்சிவேர் கிரேக்பாஷையில் ஜிங்கிபேர் என்றும், நமது அரிசி அப் பாஷையில் ஒருஜா என்றும் ஆகிவிட்டன. இவைகளெல்லாம் நம் தமிழ் நாட்டுக்கும் மேல் நாடுகளுக்கும் வியாபார சம்பந்தம் நிரம்ப இருந்தது என்று காட்டும். ஆனால் இது மாத்திரமில்லை. இன்றைக்கு ஐரோப்பாவிற்கும் நம் நாட்டிற்கும் வியாபாரசம்பந்தம் முன்னைவிட நூறு மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் இச் சம்பந்தம் பெருமை பாராட்டிக் கொள்ளக் கூடிய சம்பந்தமன்று. வியாபாரத்தில் நம் கை கீழேயும் ஐரோப்பியர் கை மேலேயுமாக இருக்கிறது. நம்முடைய பழைய நூல்களை ஆராயுங்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து சீனாவரையிலுமுள்ள நாடுகளோடு நமக்கு ஏற்பட்டிருந்த வியாபார சம்பந்தம் இன்றைக்குப் போல நமக்கு அவமானத்தைத் தரும் சம்பந்தமாயிருக்கவில்லை என்று ஏற்படும். நம்முடைய கப்பல்கள் திரை கடலோடி நமது செல்வத்தை வளர்த்தன. நம்முடைய மிளகும், பாக்கும் ஏலம் கிராம்பு முதலியனவும், கடல் நீலக்கற்களும் கோமேதகங்களும் நம்மைச் சுற்றிலுமுள்ள ஜாதிகளால் விரும்பி வாங்கப்பட்டு வந்தன. தமிழ்வியாபாரிகள் தமிழர்களால் கட்டப்பட்ட, தமிழ்மாலுமிகளால் ஓட்டப்பெற்ற, தமிழருக்கே சொந்தமான, கப்பல்களில் இச்சரக்குகளை யவன நாடுகளுக்கும் சீனக்கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளுக்கும், எகிப்து, ஜான்ஜிபார், அபிஸீனியா, கிழக்கு ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்கும் கொண்டுபோய் விற்று அவ்விடமிருந்து தங்க நாணயங்களும் வியாபாரச் சரக்குகளும், வேலையாட்களும், அடிமைகளும் கொண்டுவருவார்கள். யவனர்களின் கப்பல்களும் கணக்கில்லாமல் தமிழர் துறைமுகங்களில் காணப்படும்.

> யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னொடு வந்து கறியொடு பெயரும்,

என்று அகநானூறு கூறும். நம் துறைமுகங்களில் வியாபாரத்துக்காக வந்து குவிந்துகிடக்கும் சரக்குகளை பற்றிப் பட்டினப் பாலையில் என்ன சொல்லியிருக்கிறது பார்.

> வட மலைப் பிறந்த மணியும் பொன்னும்,
> குட மலைப் பிறந்த ஆரமும்,* அகிலும்,
> தென்கடல் முத்தும்,குணகடல் துகிரும்,†
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்,‡
> ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்,§

கரிகாற் பெருவளவன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தில் செறிந்து, மலிந்து கிடக்கும். அவன் காலத்திற்குப் பிறகு சோழநாடு கீழ்மைப்பட்டுப் போனாலும் வியாபாரச்செருக்கு தமிழ் நாட்டில் குறைந்ததாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டுச் செல்வியாகிய மணிமேகலை சாவகத்தீவு, மணிபல்லவத் தீவு முதலிய இடங்களுக்குச் சென்றதாகக் கவி வர்ணிக்க வேண்டுமானால், தமிழ் நாட்டவர் திரை கடல் சூழ்ந்த தூரதேசங்களுக்குப் போவது எத்துணைச் சகஜமாக இருந்தது என்று ஒருவாறு ஊகித்துக்கொள்ளுவாய். நக்கவாம் என்கிற அந்தமான் தீவுகளையும் கடாரம் என்கிற பெகு நாட்டையும் ராஜேந்திர சோழன் வென்றதைப் பற்றித் திருவாலங்காட்டுக் குருக்கள் ஒருவரின் உதவியைக்கொண்டு நான் ஓர் தாமிரசாசனத்தில் படித்த சங்கதியை உனக்கு இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் சொல்லியிருக்கிறேன். நீயும் உற்சாகத்தோடு கேட்டாயாதலால் மறந்திருக்கமாட்டாய். லக்ஷந்தீவுகளையும் மாலத்தீவுகளையும் சேரர் கடல் பிறக்கோட்டி வென்றதைப்பற்றி நீயே எனக்குப் படித்துக் காட்டியிருக்கிறாய். இவைகளையெல்லாம் நினைக்குங்காலத்தில் பழந்தமிழரின் உத்யமம் ஐநூறு வருஷங்களுக்கு முன் ஐரோப்பியர் காட்டத் துவங்கிய உற்சாகத்துக்கும் புதுமை நாட்டத்துக்கும் கொஞ்சமேனும் தாழ்ந்ததில்லை என்று அடிக்கடி எனக்குள் சொல்லிக்கொள்வேன். பண்டைய ஐரோப்பியருடைய சாகசத்தையும் விக்ரமத்தையும் காலமாகிய யமன் மறைத்து விழுங்கிவிடாதபடி பாதுகாக்க இங்கிலாந்தில் ஹாக்ளூப்த் சங்கம்* இருக்கிறது. எங்கெங்கேயோ உள்ள தஸ்தவேஜுகளையும், சுவடிகளையும், தோல் புத்தகங்களையும், வியாபாரச் சீட்டுகளையும் துருவித் தேடியெடுத்து, ஆங்கிலேயர், பெரிய கப்பற் தலைவர் முதற்கொண்டு சின்னஞ்சிறிய வியாபாரிகள், கப்பற் கொள்ளைக்காரர் ஈறாகப் பெரு முயற்சி செய்த தங்கள் முன்னோருடைய சரித்திரங்களனைத்தையும் வெகு சிரத்தையுடன் வெளியிட்டு வருகிறார்கள். இதற்காக முதலா

* சந்தனம். † பவளம். ‡ கங்கையும் காவிரியும் வளர்த்துத்தரும் செல்வங்கள். § ஈழம்-லங்கை காழகம் —பர்மா.

* Hakluyt Society

ளிகள் பெரிய முதல் பிரத்தியேகமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். ஏன்? அந்தச் சரித்திரங்களைப் படிக்கும் வாலிப ஆங்கிலேயர் சோம்பேறிகளாகத் தூங்கமாட்டார்கள். டிரேக்கும் புரோபிஷரும், ராலேயும் மகெல்லனும், பேரிங்கும் கூக்கும் ஸ்காத்தும்,* காட்டிய வீரத்தையும் ஆற்றிய பராக்கிரமங்களையும் படிக்கும் எவன்தான் அவர்களைப்போல நாமும் பெருஞ் செயல்கள் செய்து புகழ் ஈட்டவேண்டும் என்ற நினைவு வராமல் இருப்பான்? இது மாத்திரமா? சிற்சிலருக்குச் சரித்திர ரீதியில் எழுதப்படுகிற இந்தப் பிரயாணக் கதைகள் சுவை தராது என்று நினைத்துச் சிலர் இந்த தீரர்களின் செய்கைகளைக் கற்பனைக் கதைகளோடு சேர்த்துச் சுவைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். அக் கதைகளைப் படிக்கும் போது மனதில் தோன்றுகிற உற்சாகத்துக்கு எல்லையில்லை. நாம் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் இத்தகைய புத்தகங்கள் மிக அருமையாகத்தா னிருந்தன. ஆனால் இப்பொழுது ஹென்தி, ஹார்தி † முதலியோர் பாலர்களுடைய மனதில் உத்யமம் பிறக்கச் செய்யக்கூடிய கதைகள் எழுதிக் குவித்துக்கொண்டு செல்லுகிறார்கள்.

ஆனால் எல்லாவற்றையும்விட, கிங்ஸ்லி எழுதிய போ, மேற்கு நோக்கி ‡ என்ற கதை எனக்கு உண்டாக்கிய மனவெழுச்சியை என்னால் வர்ணித் தெழுத முடியவில்லை. அதி லுள்ள சாமானிய நாயகர் கூட எத்தகைய அஞ்சாநெஞ்சம் காட்டுகிறார்கள்! அசாத்தியம் என்கிற உணர்ச்சியே இன்றி, எப்பேர்ப்பட்ட கடினமான காரியங்களையும் எவ்வளவு அலக்ஷியமாகச் செய்து முடித்துவிடுகிறார்கள்! ராஜஸ வேகமே உருவெடுத்துவந்தது போன்றிருக்கிறது அக் கதையின் சம்பவங்களைப் படிக்கும்போது. எத்தனைத் திட்டம், எத்தனை ஆற்றல், எத்தனை வேகம்! ஐரோப்பாவின்—இங்கிலாந்தின்—உத்யமம்நிறைந்த யௌவனம் அக் கதையின் ஒவ்வொரு பக்கத்திலும் ததும்பி நிற்கிறது. அக் கதையைப் படிப்பவனுடைய மனக் கண்ணின் முன்னே, பொருளும் புகழும் ஈட்டி இவ் வாழ்க்கையை அசாமானியமான வாழ்க்கை யாக்க வேண்டும் என்கிற பேராவல்களும், அபாயங்களை எதிர் சென்று தாக்கி வெல்லவேண்டும் என்கிற வீராவேசமும், போர் முனையில் வீரவெறி கொண்டு பகைவர்மேல் விழுந்து வாகைமாலையைப் பறித்துத் தன் தோளில் அணியவேண்டும் என்கிற உள்ள வெறுக்கையும் அலைமேல் அலை விழுவதுபோலக் கொந்தளித்துக்கொண்டு செல்லாநிற்கும். பிரசண்டமான ஒரு புயற்காற்றின் சுழற்சிகளுக்குள்ளே மனங் கலங்காமல் நின்றுகொண்டு அப் புயற்காற்றுக்கு லகான் மாட்டி அதை நம் மனம் போனபடி ஓடச் செய்யும் ஆற்றல் நமக்கு வருவதுபோலிருக்கும் அவ்வரிய நூலை நாம் படிக்கும் பொழுது தமிழ் நாட்டின் மகாயுகங்களைப்பற்றி ஆராயும் பொழுது எனக்கு இந்தப் போ மேற்கு நோக்கி! என்கிற நூலின் நினைவு வராமல் இருப்பதில்லை. கடற் பிரயாணங்களைப்பற்றி நாம் காவியங்களில் படிக்கிறோம். ஆனால் அப் பிரயாணங்கள் சர்வ சகஜமாகப் போகுமுன் எத்தனை தீரமான தமிழர் பயங்கரமான, யாரும் போயறியாத, கடல் மீது சென்று, சொல்லொணாத அபாயங்களுக்கெல்லாம் உட்பட்டு, அவ் அபாயங்களை யெல்லாம் தங்கள் தீரத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் வென்று, திக்குத் தெரியாத திரைகடலில் திக்குத் திசைகளை வகுத்து வைத்து, ஜனங்களுடைய கண்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும்? சிறு கப்பல்களில் ஏறிக்கொண்டு, பெருங்கடலில் கடவுளையும் தங்கள் தோள்வலியையும் தமிழ்நாட்டின் போதிர்ஷ்டத்தையும் நம்பி இறங்கி, கடலும் வானமும் தவிர வேறு காட்சிகளில்லாமல் வெகு நாட் பிரயாணம் சென்று, கண்டு கேட்டறியாத நாடுகளிலும் தீவுகளிலும் கரையேறி, அங்கேயுள்ள புதிய ஜனங்களோடு நட்புச் செய்துகொண்டோ, போர் செய்தோ ஓர் சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான தமிழர் எத்தனைவிதமான தீவ தீவாந்திரங்களை வியாபாரத்திற்கும் பரஸ்பர நாகரீகக் கைமாற்றுக்கும் திறந்துவைத்திருக்க வேண்டும்! தேனீக் கூண்டிலுள்ள வேகம், தற்காலத்து ஐரோப்பிய ஆலைகளில் காணப்படும் யந்திரவேகம் அக் காலத்துத் தமிழரினிடையில், ஒவ்வொரு தமிழனுடைய இரத்தத்திலும், காணப்பட்டிருக்கும். அத்தகைய வேகத்தை இன்றைக்குக் காணவேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது

கரிகாற் பெருவளவன் காலம், அல்லது அதற்கும் முந்தின யுகம், ராஜேந்திர சோழன்காலம் ஆகிய இந்தப் பெருங் காலங்களில் நிகழ்ந்ததாகப் பல கதைகள் எழுத வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் என்னுடைய நிலைமையில் நான் எங்கே எழுதப்போகிறேன்? யாரேனும் கற்பனா சக்தி நிரம்பிய தமிழர் எடுத்தெழுதமாட்டார்களா? ஏன், நீயேதான் ஏன் எழுதக்கூடாது? உனக்குள்ள மனோதர்மத்துக்கு இத்தைய கதைகள் மிகவும் ஏற்றன. முயன்று பார். நீயே நம் தமிழ்நாட்டு தியூமாஸாகவோ, விக்தர் ஹியூகோவாகவோ, ஸர் வால்தர் ஸ்காத்தாகவோ ஆகப் போகிறாய் என்கிற நம்பிக்கை எனக்கு உளது. என்ன செய்கிறாய், பார்க்கலாம்!

இப்படிக்கு

உனது நண்பன்-

* Drake, Frobisher, Raleigh, Magellan Behring, Cook, and Scott.

† G. A. Henty, Hardy.

‡ Kingsley's Westward Ho!

—(*)—

நமது சிற்பச் செல்வம்

திருநெல்வேலி கோயில்

திருநெல்வேலியிலுள்ள திருநெல்வேலிநாதர் ஆலயம் தென்னிந்தியாவில் அழகிலும் கல் வேலைகளிலும் சிறந்த ஒரு பெரிய கோவில். இதில் அற்புதமான சிற்பவேலைகள் எவ் விந்தியன் மனதிலும் தமிழ் நாட்டு நாகரீகத்தின் சிறப்பை யுணர்த்தி நிற்கும்.



திருநெல்வேலி கோபுர வாயில்

தமிழ்ச் சிற்பிகளின் வேலை நுட்பங்களைக் காட்டுகிறது. தாருகா வனத்திலுள்ள இருடிகள் சிலவுரு தூண்களும், உருவங்களும், கட்டடங்களும், இங்கு மானை எதிர்க்க விடுத்த மத யானையைத் தோலுரித்து மலிந்துகிடக்கின்றன. இதர நாடுகளில் இத்தகைய விடம் இது. இக் கோயில் குளத்தினின்றே உம்



திருநெல்வேலி கோயில் தெப்பக்குளம்

சிற்ப வேலைகள் அரிதென்றே சொல்லலாம். இதிலுள்ள தூண்கள் கையால் தட்டினால் இனிய நாதத்தைத் தருகின்றன. உருவச் சிலைகள் எதிர் நின்று பேசுவதுபோலிருக்கின்றன. கோயிலின் கோபுரவாயிலையும் உள்ளே புஷ்கருளத்தையும் படத்தில் காட்டியுள்ளோம். பாண்டியமன்னரின் சிலைகளைக்கொண்ட தூண்களுள்ள ஒரு மண்டபம் இதனிடையிருக்கிறது. இக் கோவிலிலுள்ள ஏராளமான செல்வத்தை நாட்டுக் கல்விக்காக உபயோகித்தால் அறிவும் கலைகளும்பெருகும்

வழுவூர்க் கோயில்

மாயவரத்திற்குத் தென்மேற்கே ஐந்துமைல் தூரத்தில் வழுவூர் என்னும் தலம் இருக்கிறது. இதில் வீரட்டேஸ்வரர் கோயில் மிகவும் சிறப்புற்று விளங்கு மதயானை எழுந்ததாயும், சிவ பெருமான் கஜஸம்ஹார மூர்த்தியாகச் சென்று அதைக் கொன்றதாயும் ஐதீகமிருக்கிறது. பார்வதியானவள் சிவ பெருமானுடைய கோபத்தைத் தணிக்கத் தன் மைந்தன் கந்தனுடன் அருகே நிற்பதாயும் காட்டப்பட்டிருக்கிறது. கஜஸம்ஹார மூர்த்தியின் உருவைப் படத்தில் காட்டியிருக்கிறோம். இக் கோயிலுக்கு விட்ட மானியங்களையும் செய்யப்பட்ட தருமங்களையும் குறித்து இதன் சுவர்களில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி. பி. ௯௨௧-ம் வருஷம் பரகேசரிவர்மன் மதுரை, இலங்கை, கருவூர் முதலியவற்றை வென்று முடி சூடியவன்று தனது வீரர்களுக்குப் பட்டம் கொடுத்து மரியாதை செய்தான். அந்த தினத்தன்று இந்த தேவாலயத்திற்குச் சில தருமங்கள் செய்ததாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது.

செஞ்சிக் கோட்டை

தன்து உரிமையை நிலை நாட்ட ஆற்காட்டு நவாபோடு கடும்போர் புரிந்த வீரசிங்கமான தேசிங்கு என்று சாமானியமாகப் பெயர்வழங்குகிற ஜெய சிங்கன் விளங்கிய கோட்டையே செஞ்சி. இம் மன்னன் புகழை ஒரு புலவர்மாலையாகப் பாடியுள்ளார். மன்னர் மன்னரும் அடக்கமுடியாத டில்லிமன்னனின் குதிரையைத் தன் இளமையில் ஜயசிங்கு ராஜன் அடக்கி யாண்டு சவாரி செய்து மெச்சப் பட்டான். இவன் மீது பொறாமை கொண்ட நவாபு செஞ்சியை முற்றுகைபோட்டான். தன் இள மனைவியிடம் திரை மறைவினின்று உத்தரவு பெற்று, நீலவேணியின் மேல் ஏறிக்கொண்டு, ஜயசிங்கு தன் பகைவன் மீது சிம்மம் போலப் பாய்ந்தான். வெற்றி பெறும் சமயத்தில் தன் குதிரையுடன் அவன் இறந்தான். அவன் இராணியும் தன் வீரக் கணவனுடன் தீக்குளித்தாள். இவ் விருவருடைய பெருமையுள்ள சாம்பலும் இன்னும் கலியாணமண்டபம் என்ற கட்டடத்தடியில் இருக்கிறது. ஜயசிங்கின் வீரத்தையும் இராணியின் கற்பையும் வியந்த நவாபு அவர்கள் ஞாபகத்தின் பொருட்டு கி - பி கஎஎக - ம் ௵ இராணிப்பேட்டை என்ற ஊர் ஏற்படுத்தினன்.

செஞ்சிக்கோட்டையனது. ராஜகிரி, கிருஷ்ணகிரி, சந்திராயண துர்க்கம், என்ற மூன்று மலைக்கோட்டைகளை யுடையது. அதுமுதலில் விஜயநகரமன்னர் கையிலிருந்தது. கி-பி. கருருச-ம் ஆண்டில் முகமதியர் அதை ஆண்டனர். பிறகு டில்லி மன்னனால் சொரூப சிங்கனுக்குக் கொடுக்கப்பட்டது. இவனே ஜயசிங்கின் தகப்பன். பிறகு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அதற்காகப் பொருதனர். ராஜகிரிக் கோட்டையில் அரங்கநாதர் ஆலயமும், ஆத்தான மண்டபமும், பொக்கிஷ சாலையும் வெகு அழகான கல்வெட்டுகளோடு கூடியவை. வேணு கோபால ஸ்வாமி கோவிலில் கிருஷ்ண லீலைகள் வெகு அழகாகக் கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள வேணுகோபால விக்கிரகத்தைப் படத்தில் காட்டியுள்ளோம். புதுச்சேரியில் துய்ப்ளெக்ஸின் சிலையை அலங்கரித்து நிற்கும் சிறந்த கல் தூண்கள் செஞ்சி வேணுகோபால ஸ்வாமி கோவிலினின்று பிரெஞ்சுக்காரரால் கொண்டு போகப்பட்டவையே. புதுச்சேரியில் பலவிடங்களில் செஞ்சிக்கோட்டையின் தூண்கள் அலங்காரமாய் நிற்பதைக் காணலாம்.



செஞ்சிக்கோட்டை வேணுகோபால ஸ்வாமி

தேசிய கொடி

———(*)———

(ஸ்ரீ திரு. வி. வாஸுதேவன் எழுதியது)

பண்டிகைக் காலங்களிலும், விவாகாதி சுப முகூர்த்தங்களிலும், நம் நாட்டில் வீடுகளை அலங்கரிப்பது வழக்கமாய் இருந்து வருகிறது. வீடுகளின் வாயில்களைச் சுத்தஞ் செய்து, மெழுகிக் கோலமிட்டு, காவிபூசி மாவிலைத் தோரணங்களினாலும், கமுகு வாழைக் குலைகள் முதலியவற்றாலும் சிங்காரஞ் செய்வது இத்தேசத்தில் பொதுவாய் வழமையில் இருக்கின்றது. தேர்ச் சீலைகளும், கொடிகளும், சித்திரங்களும் கட்டுவதுமுண்டு. இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளிலும் கிறிஸ்மஸ் போன்ற பண்டிகைக் காலங்களில் கோயில்களையும் வீடுகளையும் பசுமை இலைகளினால் அலங்கரிப்பதோடு கொடிகள் கட்டி அலங்கரித்தல் உண்டு. இத்தேசங்களில் தம் தம் நாட்டுக் கொடிகளை ஏராளமாய் அச்சிட்டு விற்கிறார்கள். தற்போது இந்தியாவிலும் இவ் வன்னிய நாட்டுக் கொடிகளை வாங்கி சகஜமாய் உபயோகித்து வருகிறார்கள்.

இந்தியாவிற்கெனத் தனித்து ஓர் தேசிய கொடி ஏற்படாமலிருந்ததினாலேயே நம் ஜனங்கள் இவ்விதம் பிறநாட்டுக் கொடிகளினால் தோரணங்கட்டி வந்தார்களெனக் கூறவேண்டும். இந்தியாவிற்கெனத் தனித்து ஓர் தேசிய கொடி வேண்டியதின் ஆவசியகத்தை இப்பொழுது எல்லோரும் உணர்ந்து விட்டார்களென்று நம்புகிறோம். ஜியார்ஜ் மன்னரின் பட்டாபிஷேக காலத்தில் மிக மிகச் சிறிய குடியேற்ற நாடுகளெல்லாம் தம் தம் கொடியுடன் பிரசன்னமாயிருந்தபோது, இந்தியாவிற்கு மட்டும் ஒரு கொடியுமில்லாததைக் கண்டு ஆம்த்ஹில் பிரபு கூட பிரலாபித்து, இந்தியாவிற்கென ஓர் கொடி ஏற்படல் வேண்டுமென்றனராம். இதுவன்றி தேசிய மகா சபையாகிய 'காங்கிரஸூம்' இவ்விஷயத்தில் சும்மா யிருக்கவில்லை, 'ஹிந்தி-பஞ்ச்' என்னும் ஹாஸ்ய பத்திரிகையில் தேசிய மகா சபையைப் பரிகசித்துப் பிரசுரிக்கப்பட்ட சித்திரப் படங்களின் மூலம் பலவகையான கொடிகள் இந்நாட்டின் தேசிய கொடிக்காக நிர்மாணஞ் செய்யப் பட்டதெனத் தெரியவரும். பின்னர் அன்னிபெஸண்ட் அம்மையார் தமது 'ஹோம்ரூல்' சுய ஆட்சி இயக்கத்தைத் தீவிரமாய் நடத்துங்கால் பச்சை சிவப்புக் கொடி ஒன்று தேசிய கொடியாக நிர்ணயிக்கப்பட்டது. பச்சை சிவப்புக்கு அதுமுதல் சிலர் தேசிய வர்ணங்களென்றும் வழங்குதல் உண்டு. சமீப காலத்தில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய பின் இந்திய தேசிய மக்களின் ஐக்கியத்தையும், அவர்களுடைய நாட்டுத் தொழிலையும் குறிப்பிடும் பொருட்டு வெண்மை பச்சை, சிவப்பு மூன்று வர்ணங்களுடன் கூடிய துணியின்மீது கைராட்டினம் ஒன்றை வரைந்து அதுவே இந்திய தேசிய கொடியென வழங்குதல் வேண்டும் என மகாத்மா காந்தி நிர்ணயிக்கவே, அத்தகைய கொடியே நமது நாட்டுக் கொடியாக எங்கும் இப்பொழுது வழங்கி வருகிறது. இதுவே 'ராஷ்டிரீய ஜண்டா' வெனவும், 'தாயின் மணிக்கொடி' யெனவும் தற்போது பெருமை பெற்று விளங்குகிறது. நாகபுரியிலும், ஜப்பல்பூரிலும் அதிகாரவர்க்கத்தாருக்குப் பீதியை உண்டுபண்ணி அவர்களுடைய சித்தங் கலங்கும்படி மேன்மையுற்று, நாட்டில் தேசிய உணர்ச்சியைக் கிளப்பி விட்டதும் இக்கொடியே.

ஒரு நாட்டின் கொடி அத்தேசத்தில் நிகழ்ந்த வீரச் செயல்களையும், அச்செயல்களைச் சாதித்த வீரர்களுடைய மனோதிடத்தையும் குறிப்பிடும் அறிகுறியாகும். ஒவ்வொரு நாட்டிலும் ஜனங்களிடம் ஒரு பொதுவான நோக்கத்திற்காக ஒரு பொது உணர்ச்சி உதித்து, அதற்காக அவர்கள் ஒன்று சேர்வதற்காக உற்சாகம் அளிக்கக்கூடிய பொது ஸ்தாபனம் ஒன்று இருத்தல் வேண்டும். அப் பொது ஸ்தாபனத்தைக் காப்பாற்றும் பொருட்டு யுத்தங்கள் நேரிடினும் ஜனங்கள் போர் புரிய முன்வருவார்கள். அவ்விதம் ஜனங்களைத் திரட்டத் தகுந்த வீர உணர்ச்சியை அந்நாட்டிற் கென் அமைக்கப்பட்ட கொடியினால் தான் கிளப்பக்கூடும். ராணுவ விவகாரங்களுக்கும் கொடி இன்றியமையாதது. அவ் வத்தேச ஜனங்கள் பண்டைக் காலந்தொட்டு தமக்கென ஓர் கொடி அமைத்தேயிருந்தார்களெனச் சரித்திரங் கூறும். எகிப்தியர்கள் தங்கள் கொடியில் தங்களுக் கேற்றவாறு அடையாளங்கள் பொறித்திருந்தனர். அவ்விதமே அஸீரிய நாட்டினருக்கும் கொடியுண்டு. கிரேக்கர்களும், ரோமர்களும் பிரத்தியேகமான குறிகளுடைய கொடிகளை உபயோகித்தனர். கேசரியின் கொடி வல்லூறு வரையப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. தற்காலத்திலும் யூனியன் ஜாக் என்னும் ஆங்கில நாட்டுத் தேசிய கொடியினிடத்து ஆங்கிலர்களுக்குப் பொங்கும் உற்சாகத்திற்கு அளவில்லை. அமெரிக்கர்களுக்குக் கோடுகளும் நக்ஷத்திரங்களும் அடங்கிய கொடியைக் காணில் உண்டாகும் பற்று எவ்வள வென்று கூற முடியாது. ஜப்பானியர்களுக்குத் தங்களது உதய சூரியனிடத்தில் ஏற்படும் ஆனந்தத்திற்குக் கணக்கில்லை. இவ்வாறு ஒவ்வொரு நாடும் தன்னுடைய தேசிய கொடியை மிகவும் உன்னதமாகப் பாராட்டுகின்றது. ஆகவே இந் நாட்டின்கண் வசிக்கும் ஹிந்துக்களும், ஜயினர்களும், பௌத்தர்களும், முகம்மதியர்களும், கிறஸ்தவர்களும், யூதர்களும், பாரசீகர்களும், சீக்கியர்களும் தங்கள் உயிரை வேண்டுமானாலும் தியாகஞ் செய்யச் சித்தமாயிருக்கத் தகுந்த உற்சாகத்தையும், வீரத்தையும் ஊட்டத்தகுந்த ஒரு பொது தேசிய கொடி அமைக்கப்படுவது ஆவ்சியமாகுமல்லவா? இவ்வாவசியகத்தை உணர்ந்தே மகாத்மாஜீ ஓர் கொடியை இந் நாட்டிற்கு நிர்ணயத்திருக்கின்றனர்.

இந்தத் தேசிய கொடி இயக்கம் இந்தியாவில் புதியதாய்த் தோன்றியிருக்கும் ஓர் ஊக்க மல்லவென இந்துதேச சரித்திர ஆராய்ச்சி விளக்கும். பண்டைக் காலந்தொட்டு, இந் நாட்டு மன்னர்கள் அவரவர்கள் இராஜ்ஜியத்திற் கெனக் கொடிகள் அமைத்துக்கொண்டிருந்தனர். சூரிய குலத்து மன்னர்களும், சந்திர வம்சத்து அரசர்களும், தங்கள் தங்கள் தேசத்திற்கெனத் தனிமையாகக் கொடிகள் தாங்கி நின்றனர். பாண்டிய மன்னர்களுக்கும், சோழ ராஜாக்களுக்கும் புலிக்கொடி, மீன் கொடிகள் இருந்தனவென்று ஆராய்ச்சியில் தெரிய வருகிறது. கொடிகளும், டமாரங்களும், அரசு புரியும் மன்னர்களின் விருதுகளிற் சேர்ந்தவையென ரிக்வேதத்தில் காணப்படுகிறது. சூரிய பகவானின் உருவம் வரைந்த ஓர் கொடி ஆரியர்களுக்கேற்பட்டிருந்ததாக அதர்வ வேதத்தில் இரண்டு வாக்கியங்களிலிருந்து தெரியவருகிறது. மகாபாரதத்திலும் பீஷ்மாசாரியாருக்குத் தூய வெள்ளைக்கொடியிருந்ததாகவும், துரோணாசாரியாருக்குக் கமண்டலமும் தனுசும் அம்புகளும் அக்கினியும் பொறித்த ஓர் கொடி இருந்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றது. துரியோதனனுக்கு அரவக் கொடி இருந்ததென்பதாகவும் அறிகிறோம். சிம்மத்தின் வால் உள்ள கொடி அசுவத்தாமனுக்கு இருந்ததாம். கலிங்கராஜனுடைய கொடியில் அக்கினிபகவானின் உருவம்வரையப்

பட்டிருந்தது. மனுஸ்மிருதியிலும், ராமாயணத்திலும், கொடிகளைப்பற்றிய வரலாறுகள் நிரம்பியிருக்கின்றன. சிவபிரான், மன்மதன், விஷ்ணு இவர்களுடைய "விருஷபத் துவஜத்தையும், மீனகேதனத்தையும், கருடத்துவஜத்தையும்" இன்றைக்கும் நம் ஆலயங்களிலும், சுவர்சித்திரங்களிலும் காண்கிறோம். இந்திரனுக்கு வாள் கொடி எனக் காளிதாஸன் ரகுவம்சத்தில் கூறுவதிலிருந்து விளங்குகிறது. அர்ச்சுனனுடைய ஹனுமந்தக்கொடியைப் பற்றிக் கேளாதாரும் உளரோ? சூதஸம்ஹிதையில் கொடி ஸ்தம்பங்கள் எவ்வளவு உயரமிருத்தல் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. மேற் கூறியவற்றி லிருந்து கொடிகள் புராதன இந்தியாவில் எவ்வளவு சிறப்புற்று விளங்கியவென அறியலாகும்.

இடைக்காலத்திலும் இந்தியாவில் கொடிகள் விசேஷமான மஹிமை பெற்று விளங்கி வந்தனவென்று புலனாகும் ஆதாரங்களுள. சிவாஜிமகாராஜின் பக்வா ஜண்டாவும், ராஜபுத்திரர்களுடைய குங்குமநிறமுள்ள கொடியும் பிரசித்தி பெற்றவை. முகம்மதிய மன்னர்கள் பச்சைக் கொடியைத் தாங்கிநின்றனர். தற்பொழுதும் முகமதியர்களுக்கு பிரதானமாயேற்பட்டது இப் பச்சைக் கொடியே. சாதுக்களும் அரசர்களும் அவரவர்களுக்கு ஏற்றவாறு சிறப்பான கொடிகள் வைத்திருந்தனர். ஹிந்து ஆலயங்களிலும், இஸ்லாமியர் கோரிகளிலும் அவரவர்களுடைய கொடிகள் பறப்பதை இன்றைக்கும் காணலாம்.

இனி, இந் நாட்டிற்கென்று அதனுடைய பெருமைக் கேற்றவாறு ஓர் தேசிய கொடி தனிப்பட்டு வழங்கப்படல் வேண்டுமென்ற அவசியத்தை சகலரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. அது எத்தகையதா யிருக்க வேண்டு மென்பதைக் குறித்து நம் தலைவர்கள் கூடி ஆலோசித்து நிர்ணயிக்கவேண்டுவது மிகவும் பிரதானமானது. தற்காலம் மகாத்மா காந்தியடிகள் ஹிந்துக்களைக் குறிக்க சிவப்பு நிறமும், முகமதியர்களைக் குறிக்க அவர்களுக்கு ஏற்பட்ட பச்சை நிறமும், இதர ஜாதிக்களைக் குறிக்க வெள்ளை நிறமும் வாய்ந்து அதில் இந் நாட்டினருக்கு க்ஷேமத்தை யளிக்கத் தக்க இராட்டினத்தின் உருவத்தை வரைந்து ஓர் தேசியகொடி நமக்கு வழங்கி யிருக்கின்றனர். சிக்கியர்கள் தம்மைக்குறிக்க ஓர் நிறம் சேர்க்கப் படல்வேண்டுமெனக் கூறுகின்றனர். அவ்விதமே கிறஸ்தவர்களும் யூதர்களும், பாரசீகர்களும் கேட்கக்கூடுமெனினும், இந் நாட்டில் ஹிந்துக்கள் முகமதியர்கள் ஆகிய இரு பெரிய மதஸ்தர்கள் போக மற்றவர்களை இதரர்கள் என்று வகுக்கப் படுவதில் தாங்களும் சேர்ந்தவர்கள்தானென மதித்து, சகல மதஸ்தர்களும் சமூகத்தினரும் ஐக்கியப்பட்டு இந்நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைத்து, தாயின் மணிக்கொடியை சிறப்புறச் செய்தல்தான் தேச க்ஷேமத்தைக் கருதும் ஒவ்வொருவருடைய நோக்கமாயிருத்தல் வேண்டு மென்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

வைரங்கள்

——(*)——

வைரங்களுக்காகத்தான் உலகத்தில் எத்தனை அக்கிரமங்கள் நிகழ்ந்திருக்கின்றன! வைரங்கள் சகோதரர்களைக் கொன்றிருக்கின்றன; குடும்பங்களைச் சின்னா பின்ன மாக்கியிருக்கின்றன; ராஜ்ஜியங்களை அடிமையாக்கியிருக்கின்றன; ஆலயங்களையும் விக்கிரகங்களையும் தகர்த்திருக்கின்றன. ஒரு பாதகம் கூடப் பாக்கியில்லாமல் சகல பாதகங்களுக்கும் அவை தாயகமாயிருந்திருக்கின்றன. வாழிய வைரம்!

வைரம் வெறும் கரி என்றால் அனேகமாய் யாரும் நம்பமாட்டார்கள். ஆனால் கலப்பில்லாத, ஸ்வச்சமான கரி ஏதாவது இருக்கும் பக்ஷத்தில் அது வைரமேதான் என்க. வேறு எந்தக் கரியையும் பற்றி இது சுத்தமான கரி என்று சொல்லுதல் சாத்தியமில்லை. வைரம் ஒன்றைப்பற்றித்தான் கிஞ்சித்தேனும் சந்தேகமின்றி ரஸாயனசாஸ்திரம் இது 'அங்காரம்' தான் என்று கூறும். சகம் கசுகஎ- இல் இத்தாலியாவிலுள்ள புளோரென்ஸியா ராஜ்ஜியத்தின் தலைவனான மூன்றுவது கோஸ்மோ என்னும் 'மகாப்பிரபு'வின் வேண்டுகோளுக்கிணங்கி ஆராய்ச்சிகள் செய்து ஆவரானி தார்கியோனி என்னும் சாஸ்திரிகள் உஷ்ணம் உக்ரமாக ஏற ஏற வைரம் சூடம் கரைவதுபோலக் கரைந்து போகும் குணமுடையது என்று கண்டுபிடித்தார்கள். சாமானியவாயு அல்லது பிராண வாயுவுடன் சேர்த்து சாமானியமாக உஷ்ணம் ஏற்றும்போது வைரம் எரிந்து கரிவாயு வாகிறது என்று பிரெஞ்சு ரஸாயனியான லவ்வாஜியே சகம் கசுகூச- இல் ருஜுப்படுத்தினான். சகம் கஎகக- இல் ஸ்மித்ஸன் தென்னந்து என்னும் ஆங்கிலன் வைரம் கரியே யன்றி வேறில்லை என்று சித்தாந்தம் செய்துவிட்டான். இன்று ரஸாயன சாஸ்திரத்தின் பாலபாடம் படிப்பவர்கள்கூட வைரம் என்பது கரியேதான் என்று அறிவார்கள்.

ஹிந்துக்களுக்கும் இந்த உண்மை தெரிந்திருந்தது என்று ஊகிக்க இடமுண்டு. ஏனெனில் இந்திரன் பலன் என்னும் அசுரனை வஜ்ஜிராயுத வேகத்தால் கொன்ற பிறகு அவனுடைய எரிந்துபோன உடலினின்றும், வஜ்ஜிராயுதத்தை வார்த்த பிறகு ததீசி மகாரிஷியின் எலும்புகளினின்றும் வஜ்ஜிரங்கள் பிறந்தன என்று கருடபுராணமும் வ்ராஹமிஹிராசாரியன் எழுதிய பிருஹத் ஸம்ஹிதையும் கூறுகின்றன.

ரத்நாநி பலாத் தைத்யாத், தத்ஹீசிதோ
அந்யேவதந்தி ஜாதாநி .
கேசித் ப்ஹுவஸ் ஸ்வப்ஹாவாத் வைசித்ர்யம்
ப்ராஹு: உபலாநாம்

என்று வாராஹமிஹிரன் கூறுவதினின்று வைரங்கள் மண்ணின் வேறுபாடு என்ற அபிப்பிராயமும் இருந்தது என்று ஏற்படுகிறது.

மிஸாத்திலாவது பாபிலோனியாவிலாவது வைரங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியாவைப் படையெடுத்து வந்த ஸிக்கந்தர்தான் * ஐரோப்பாவுக்கு முதல் முதல் வைரம் கொண்டுபோனவனா யிருத்தல் வேண்டும். அவன் காலத்திற்குப் பிறகு ரோமாபுரியின் ஏகாதிபத்தியம் வளர்ந்தபோதும்கூட வைரம் ஐரோப்பாவில் அதிகமாகப் பரவவில்லை. இஸ்பானியாவைப் படையெடுத்து அங்கே இஸ்லாமிய ராஜ்ஜியங்களை ஸ்தாபித்த ஸாரஸேனர்கள் இந்தியாவினின்று பல வழிகளால் வந்த வைரங்களை ஐரோப்பா கொண்டு போய்ச் சேர்த்தார்கள். இந்தியாவினின்று வந்த வைரங்களையும் முத்துக்களையும் மனதில் வைத்துக் கொண்டுதான் மில்தனும் செல்வத்தின் பெருக்கத்தைச் சொல்லும்போது, 'பாரதத்தின் வெறுக்கையினும் ஒளி வீசும் அரியணை மீது' என்று, சொல்லுகிறான்.

பாரதநாட்டு ஜனங்கள் வைரங்களை வெகுகாலமாக அறிவார்கள். அதன் தன்மையையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்று சொல்லுவதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன.

* Alexander the Great

கருடபுராணத்தில்,

கோட்ய: பார்ச்வாநி த்ஹாராச்ச ஷட்ஷ்டி
த்வாத சேதிச
உத்துங்க ஸம தீக்ஷ்ணாக்ரா வஜ்ரஸ்யாகர
ஜாதுணு

அதாவது வைரம், ஆறு, எட்டு, பன்னிரண்டு கோணங்களும் பார்சுவங்களும் தாரைகளும் உள்ளவையாகக் காணப்படும்: இவையும் உத்துங்கமாயும், சமசதுரமாயும் கூரிய முனைப்புள்ளவையாகவும் இருக்கும், என்று கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் ஊர்காண்காதையில் அடியார்க்கு நல்லாரும்,

பலகை எட்டும், கோணம் ஆறும்,
இலகிய தாரையும்' சுத்தியும், தாரசமும்,
ஐந்தும் குணம் என்று அறைந்தனர் புலவர்,
இந்திரசாபத்து இகல் ஒளி பெறினே.

என்ற மேற்கோள் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வைரத்தை விடக் கடினமான வஸ்து இல்லை. ஆகையால்தான் இந்திரனுடைய ஆயுதத்தை வஜ்ராயுதம் என்று நம் பெரியோர்கள் கற்பித்தனர். வைரம் எதையும் ஒரு நொடியில் வெட்டிவிடும். வைரத்தை வேறு எதுவும் வெட்டாது. வைரத்தை வைரம்தான் வெட்டும். வேண்டும் என்று உடைத்தாலொழிய வைரம் கெடுகிறதே இல்லை. பூமியின் கர்ப்பத்திலும் நதியிலும் பல்வேறு பொருள்களாலும் விசைகளாலும் தாக்கப்பட்டாலும் வைரம் அழியாமல், காயப்படாமல் அப்படியே இருந்து, அளவு ஒன்றில் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் ஏறத்தாழக் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டபடியே அகப்படுகின்றது.

ஆபரணமாக உபயோகமாதல் ஒரு புறத்தேயிருக்க, வைரம் கண்ணாடிகளை வெட்டவும், கைக்கடியாரங்களிலும் வைத்யுதமானி (எலெக்த்ரிக்மீதர்) களிலும் இடைவிடாது உராயும் பாகங்களை மூடிப் பலப்படுத்தவும், வைரம், சிவப்பு முதலிய கற்களுக்குப் பட்டைபோடவும், உபயோகமாகிறது.

தற்காலம் தென் ஆபிரிக்காவில்தான் மிக்க விலையுள்ள வைரங்கள் அகப்படுகின்றன. சென்ற ருரு வருஷங்களாக உலகில் வெட்டி யெடுக்கப்படும் வைரங்களில் முக்காலரைக்கால் பங்குக்குமேல் திரான்ஸ்வாலிலிருந்துதான் வருகின்றன. மிகப் பெரிய வைரங்களும் அங்குதான் அகப்படுகின்றன. முப்பது வருஷங்களுக்கு முன் யாகர்ஸ்போந்தைன் கனியிலிருந்து எடுத்த எக்ஸெல்ஸியோர் என்ற வைரமும் திரான்ஸ்வாலில் இருபது வருஷங்களுக்குமுன் அகப்பட்ட குல்லினான் என்ற வைரமும்தான் உலகத்தில் இதுவரை தோன்றிய வைரங்களுள் பெரியன. இவற்றுள் ஒன்றேகால் ராத்தலுக்குமேலிருந்த குல்லினானைத் திரான்ஸ்வால் அரசாங்கம் விலைக்கு வாங்கி இங்கிலீஷ் அரசனாயிருந்த எ-வது எத்வார்துக்கு நஜராகக் கொடுத்தார்கள். அது உலாந்தாவில் ஒன்பது பெரிய கற்களாகச் சேதிக்கப்பட்டுப் பட்டைபோடப்பட்டது. அதனின்று வெட்டப்பட்ட ஒவ்வோர் கல்லும் தோஷமில்லாத மணியாகும். அவற்றுள் பெரிய கல் தற்பொழுது ருகசு-இ காரத்து இருக்கிறதாம்!

ஆனால் (வைரத்தை மதிக்கிற உலகத்தில்) மகாகீர்த்தி பெற்ற வைரங்களெல்லாம் நமது பாரதமாதாவின் கர்ப்பத்தினின்று தோன்றியவையே. கௌஸ்துப மணியையும் சியமந்தக மணியையும் கண்டவர் இல்லை. உருo வருஷங்களாக இந்தியாவினின்று ஐரோப்பா அடித்துவருகிற கொள்ளையில் சரித்திர கௌரவம் பெற்ற சில வைரங்களைப்பற்றி மாத்திரம் இங்கு சொல்லுவோம்! ஓர்லோப் என்ற வைரம் ஆதியில் ஓர் விக்கிரகத்தின் நேத்திரமாக விளங்கிற்று. அதை நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் ஓர் பிரெஞ்சுக்காரன் களவாடிச் சென்றான். ஆனால் ஏறிச் சென்ற கப்பலின் தலைவன் அவனிடமிருந்து அதை அபகரித்துக்கொண்டான். பிறகு பல கைகள் மாறி அது ஓர்லோப் என்ற ருஷிய பிரபுவால் கரு-இ லக்ஷ ரூபாய்க்குவாங்கப் பட்டு உ-வது காதரீனா என்ற ருஷிய ராணிக்கு நஜராகக் கொடுக்கப்பட்டது. சo காரத்துள்ள துருவதாரகை என்ற மணியும் இந்நாட்டிலிருந்த வைரம்தான். அதுவும் இன்று ருஷியாவில் போய்ச் சேர்ந்துவிட்டது. பெரிய மோகலாயன் என்ற ஜாஜ்ஜ்வல்யமான வைரம் ஷாஹஜஹானுடைய புத்திரர்களுடைய தாயாத யுத்தத்துக்கு ஓர் துணைக் காரணமாக இருந்தது. அது போன வழியே இன்று தெரியவில்லையாம்.

அதன்பேரில் மோகம் வைத்தேதான் பாரவீக அரசனான நாதிர்ஷா ஹிந்துஸ்தானத்தின்மீது படையெடுத்து வந்து தில்லியைச் சூறையாடினான். ஆங்கில வாசாலகனான உவில்லியம் பித் என்பவனுடைய பாட்டனான பித் சென்னையில் மகாமாத்தியனாக இருந்தகாலத்தில் ஓர் வைரத்தை ரு-இ லக்ஷத்திற்கு வாங்கினான். அதைப் பிரெஞ்சு ராஜ சிசுவின் போஷகனான ஓர் லெயான் பிரபு கஉ லக்ஷம் கொடுத்து வாங்கினான். அது பிரெஞ்சு ராஜப்புரட்சி சமயத்தில் திருட்டுப் போய்ப் பிறகு அகப்பட்டது; இக் கட்டுரையின் ஆசிரியன் அதைப் பிரான்ஸில் பார்த்திருக்கிறான்?

ஆனால் வைரங்களுக்கெல்லாம் ராஜா கோஹிநூர் தான். யுதிஷ்டிர மகாராஜாவுக்கு ராஜசூய யாககாலத்தில் அது காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகின்றது. அது முதல் சரு00 வருஷங்கள் வரையில் அது ஹிந்து அரசர்களுடைய முடியையே அலங்கரித்துவந்தது. ஆனால் சு00 வருஷங்களுக்கு முன் அது மாளவதேசத்து அரசனிடமிருந்து அவனை வென்ற அல்லாவுதீன் கை போய்ச் சேர்ந்தது. அதுமுதல் அதை ஓர் சாபம் பிடித்துக்கொண்டது. எந்தக்குடும்பத்துக்குஅதுபோய்ச் சேருகிறதோ அந்தக் குடும்பத்தை அது சேர்ந்த நூறு வருஷங்களுக்குள் அது ஹதம் செய்துவிடுகிறது. தன்னை வைத்துக் கொண்டிருக்கிறவனுக்கு நான்கு பக்கங்களிலும் சத்துருக்களை உண்டாக்கித் தருகிறது. தான் இருக்கும் குடும்பத்தில் தகப்பனுக்கு மகன், அண்ணனுக்குத்தம்பி, ஆகவிடாமல் செய்துவருகிறது. அல்லாவுதீன் அதைக் கைப்பற்றிய பிறகு சந்ததி யில்லாமல் இறந்துபோனான். பல் கைகள் தாண்டிக் கடைசியாக அது குவாலியாரை ஆண்ட ராஜபுத்திர அரசனிடம் வந்து சேர்ந்தது. ஆனால் பாபரும் ஹுமாயூனும் விக்ரியில் தில்லி அரசனை வென்று மொகலாய ஏகாதிபத்தியத்துக்கு அங்குரார்ப்பணம் செய்தகாலத்தில் அது ஹுமாயூன் கைக்கு வந்துசேர்ந்தது. ஆயினும் அது கிடைத்த ரு வருஷத்துக்கெல்லாம் ஹுமாயூன் ராஜ்ஜியத்தை விட்டு ஓடவேண்டி வந்துவிட்டது. நிற்கக்கூட நிழலில்லாமல் பதினைந்து வருஷம் வேட்டையாடப்பட்ட மான் போலத் திரிந்து கடைசியாய்ச் சாகுந்தருவாயில்தான் அவன் தில்லிக்கு மறுபடி வந்துசேர்ந்தான். அது முதல் இருநூறு வருஷம் வரையில் அது முகலாய அரண்மனையிலேயே இருந்துவந்தது. முக்கியமாக அதை அணிய எண்ணித்தான் ஔரங்கஜேபு தன் சகோதரர்களைக் கொன்று தகப்பனையும் சிறையிலிட்டான். தில்லிக் கொள்ளையின் பிறகு அது முகம்மது ஷாவின் ஆபரணங்கள் இருந்த இடத்தில் இல்லாதது கண்டு நாதிர்ஷா விசாரித்து, அதை முகம்மதுஷா தன் தலைப்பாகையில் மறைத்து வைத்திருப்பதாக அறிந்துகொண்டான். உடனே, இனி நாம் இருவரும், சமாதானமாகப் போவதற் கடையாளமாக நம் தலைப்பாகையை மாற்றிக் கொள்வோம் என்று எத்தாகச் சொல்லித் 'தலைப்பாகை மாற்றி'யாகிவிட்டான். அதை வெளியிலெடுத்ததும் அதன் ஜாஜ்ஜுவல்லியமான பிரகாசத்தைக் கண்டு வியந்து தன்னையே மறந்து கோஹ்-இ-நூர்— ஜோதிமலை—அப்பா என்று கூவினானாம். அதுமுதல்தான் அதற்கு இந்தப் பெயர் வழங்கிவருகிறது. ஆனால் அது பாரவீகம் சென்றதுதான் தாமதம், நாதிரின் பாரவீக ஏகாதிபத்தியம் சீர்குலைந்து, அதுவும் ராஜ்ஜியத்திற் பெரும் பகுதியும் ஆப்கானிஸ்தான அரசனான அஹமதுஷா அப்தலியினிடம்வந்துவிட்டது. ஆப்கானிஸ்தானத்தில் அது சுமார் ஐம்பது வருஷம் இருந்தது. நூறு வருஷங்களுக்கு முன் பஞ்சாபின் சிங்கமான ரணஜித் சிங்கன் ஆப்கானியரை வென்று அவ் விராஜ்ஜியத்தின் ஒரு பகுதியையும் கோஹிநூரையும் பிடுங்கிக்கொண்டுவிட்டான்.

ஒரு நாள் அந்த ஜோதிர்மணியின் பிரகாசத்தைக் கண்டு அனுபவித்துக்கொண்டே அதன் மதிப்பு என்ன இருக்கலாம் என்று அவனுடைய அவைக்குழாத்தினர் அவனுடைய சன்னிதியில் வாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவனும் முன் பேசியவனைவிட ஒருபடி உயர்த்திக் கூறி, அதன் விலை தங்கள் அரசனுடைய ராஜ்ஜியம் நீங்கலாக மற்றெல்லா ராஜ்ஜியங்களும் என்றும், பூமண்டலமேதான் என்றும் புனைந்துரைத்து வந்தார்கள். கடைசியாக ஓர் பிரபு ராஜாவைப் பார்த்து தாங்கள் ஏது அதன் விலையைப்பற்றி ஓர் மதிப்பு கூறவில்லையே!' என்று கேட்க, மற்றோர் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டு புன்னகை செய்துகொண்டிருந்த ரணஜிதன், 'அதற்கு விலையா கேட்கிறீர்கள்! நீங்கள் கூறிய மதிப்பெல்லாம் தவறு, மிகமிகத் தவறு

கோஹிநூரின் விலை ஐந்து செருப்படிதான்!' என்றான். எல்லோரும் திகைத்துப் போய்த் தாற்பரியம் என்ன என்று கேட்க, "இந்த ஜோதிமலையை யார் விலை கொடுத்து வாங்கமுடியும்? அல்லாவுதீன் மாளவ அரசனை நொறுக்கினான், கோஹிநூரைக் கைக்கொண்டான்: நாதிர் முகமதுஷாவை நூறினான், இம் மணி அவனதாகிவிட்டது: நான் அப்கானியரை இடிப்பொடித்துவிட்டேன், கோஹிநூர் லாகூர் வந்து சேர்ந்துவிட்டது: நான் இறந்த பிறகு என்னுடைய சந்ததியாரை அவர்களைவிட பலிஷ்டன் தாக்கி வென்றுவிட்டால் இம்மணி பஞ்சாபில் அரைநாழிகை நில்லாது. ஆகவே இதன்விலை ஐந்து செருப்படிக்கு மேல் வேறு ஏதாவது உண்டா என்று நீங்களே சொல்லுங்கள்," என்று சொன்னான். அவன் சொன்னது எவ்வளவு உண்மை என்று கோஹிநூரின் பிற்காலத்துச் சரித்திரம் நன்றாக விளக்கிவிட்டது. ஆங்கிலேயர் பஞ்சாபை வென்றார்கள். இன்றைக்கு அது இங்கிலாந்து அரசனின் சூடாமணியாகிவிட்டது.

ஆனால் தற்காலத்தில் ஹோப் என்ற பெயரால் வழங்கப்படுகிற நீலடால் வீசும் வைரத்தின் கதைதான் மற்ற எல்லா வைரங்களின் கதையையும் விடப் பயங்கரமாக இருக்கிறது. இதைத் தவெர்னியே என்னும் பிரெஞ்சு வியாபாரி ஆதியில் நமது நாட்டில் விலைக்கு வாங்கினான். ஆனால் தன் நாடு போனதும் அவன் கடனாளியாகி முறிந்து போய்விட்டான். மறுபடியும் பொருள் சம்பாதிக்கலாமென்று அவன் இந்தியாவுக்குத் திரும்புங்காலையில் வழியிலேயே இறந்து போய்விட்டான். பிறகு பதினாலாவது லூயி என்றஅரசனால் அவனுடைய காமக்கிழத்தியான மோந்தெஸ்பான் என்னும் பெண்ணுக்கு அது கொடுக்கப்பட்டது. ஆனால் அது கிடைத்த சின்னாட்களுக் கெல்லாம் அவள் அரசனுடைய வெறுப்புக்குப் பாத்திரமாகிவிட்டாள். அதை இரவலாக வாங்கிக் கொண்ட பூகே என்பவன் அரசனாணையால் கொலை செய்யப்பட்டான். அதைத் தாயபாகமாகப் பெற்ற பதினாலாவது லூயியும் அவனுடைய ராணியான மாரி அன்த்வானெத்தும் கிலோதீனில் வெட்டுண்டார்கள். பிரெஞ்சுராஜ்ஜியப் புரட்சியின் காலத்தில் அதன் கதி என்னவாயிற்று என்று தெரியாது. ஆனால் அதைத் திருடிய கள்ளர்கள் வெட்டுண்டார்கள். அக் கள்ளர்களுக்காக அதைப் பட்டை போட்டுக் கொடுத்த ரத்தினத் தச்சன் உண்ணச் சோறில்லாமல் இறந்துபோனான். கள்ளர்களிடமிருந்து அதைத் திருடிய அத் தட்டான் மகன் தற்கொலை புரிந்துகொண்டிறந்தான். கடைசியாக அது ஹோப் என்னும் அமெரிக்கன் ஒருவன் கையில் வந்தது. ஆனால் இன்றைக்குப் பதினெட்டு வருஷங்களுக்குமுன் அவன் கடனாளியாகி அதை வேறொருவனுக்கு விற்றுவிட்டான். பிறகு அது இங்கிலாந்திலுள்ள ஹோப் என்னும் பிரபுவுக்குச் சொந்தமாயிற்று. அவன் கடனாளியாகி முறிந்து போனது மன்றி, அவனுடைய பெண்ஜாதியா யிருந்த மே யோஹே என்பவளும் அவனை விட்டு ஓடிப்போய் விட்டாள். அவளோ என்றால் ஒரு ஊரில் தூர்ப்புக்காரியாக அமரும்படி யேற்பட்டுவிட்டது. பிறகு அது லோரான்ஸ் லாத்யூத் என்னும் ஓர் நடியின் வசம் வந்து சேர்ந்தது. அவள் அவ் வைரத்தை மார்பில் தரித்துக் கொண்டு நடனசாலையில் ஆடிக்கொண்டிருக்கையில் அவளுடைய காமக்கிழவன் அவள் மீது பொறாமை கொண்டு அவளைச் சுட்டு வீழ்த்திவிட்டான். அவளுக்கு அந்த மணியை அணிவித்த மற்றொரு காமக்கிழவனான ருஷியன் கொலையுண்டிறந்தான். அதைத் துருக்கி சுல்தான் அப்துல் ஹமீதுக்கு விற்ற ஓர் கிரேக்கன் அகால மிருத்யு வயப்பட்டான். அப்துல் ஹமீதின் காமக்கிழத்தி ஸல்மா ஸூபாயா என்பவள் அரண்மனையிலேயே சுடப்பட்டுக் கொலையுண்டாள். அப்துல் ஹமீது தன் ராஜ்யத்தையே இழந்துவிட்டான். எதுவார்து மக்லின் என்னும் அமெரிக்கன் ரு-லக்ஷம் டாலருக்குத் இதை துருக்கியினின்று வாங்கினான். ஆனால் கொஞ்ச காலம் கழித்து அவனுடைய மூத்தமகன் ஸ்வயசலனி (மோட்டார்) வண்டியிலகப்பட்டு இறந்து போய்விட்டான். ஆனால் இப்பொழுதும் அதை ச-லக்ஷ ரூபாய் மதிப்பிடுகிறார்கள். என்னே மனிதனின் பைத்தியம்!

கம்ப ராமாயணம்

——(*)——

(ஸ்ரீமான் வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

ஆரண்ய காண்டம்தான் ராமாயணத்தின் மத்திய பாகம். கிஷ்கிந்தா காண்டம் கேவலம் உபாக்கியானமேயானதால் கதையின் காண்ட வரிசையிலும் ஆரண்ய காண்டத்தையேதான் மத்திய காண்டமாகக் கொள்ளவேண்டும். இதில் தான் ராமராவணரின் பகைமைக்கு நேரான காரணமான சீதாபஹாரணம் நிகழ்கின்றது. ஆதலால் ராமகதையாகிற கன்னிகையின் மேகலாபரணமாக விளங்குகிற இக் காண்டத்தின் ரசனை மிக அழகாக அமைந்திருத்தல் வேண்டும். கம்பன் அவ்வாறு அமைத்தேயிருக்கிறான் என்று இவ்விடத்தில் காட்டுவோம். அதனோடு இக் காண்டத்தில் வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங்களெல்லாம் ரஸக்ஞர்களுக்கு நல் விருந்தாக இருக்கின்றன என்றும் காட்டிவிடுவோமானால் படிப்போர் கம்பனுடைய ரசனா சக்தியை மதிக்கவேண்டிய அளவுக்கு மதிப்பர் என்பதில் எமக்கு ஐயமில்லை.

இக் காண்டத்தில் முதல் ௨௨௯ விருத்தங்கள் வரையில் கதை ஆலசியமாகத்தான் நடக்கிறது. விராதன் வதைப்படலம் மாத்திரம் சிறிது வேகத்தைத் தாங்கி நிற்கின்றது. ஆனால் அது —விராதனுடைய ஸ்தோத்திரம் இருப்பினுங் கூட —வேதாளக் கதையின் ஜாதியைச் சேர்ந்ததேயொழிய, மகாகாவிய ஜாதியைச் சேர்ந்ததன்று. ஹோமர் எழுதிய ஒதுஸியத்தில் வரும் குக்ளோப உபாக்கியானம், விர்கிலியனுடைய ஏனேயத்தில் வரும் ஹார்ப்பியரின் செய்தி, * ஆகிய இவைகளோடுதான் இந்த விராதன் கதையையும் இக் காண்டத்தின் கடைசியில் வரும் அயோமுகியின் கதையையும் ஒப்பிடலாகும். சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் கதைக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை—அதை எடுத்துவிட்டதனால் கதைக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாது. அகத்தியப ட்டலத்தின் விஷயத்தை ஐரோப்பிய கவிஞர் அது கம்பனில் தோன்றுமிடத்தில் கூறமாட்டார்கள். கதையின் பிற்பாகத்தில் யாராவது இரண்டு நாயகர்கள் சம்பாஷிக்கும்போது இவ் விஷயம் உபாக்கியானமாக வரும்படி செய்வது அவர்களுடைய முறையாகும். அவ்வாறு செய்திருந்தால் இவ் விடத்திலுள்ள ரசனையைவிட உயர்ந்த ரசனையாயிருந்திருக்கும். ஆனால் சூர்ப்பநகையின் பிரவேசத்திலிருந்து கம்பனுடைய ரசனை மேனாட்டுக் காவியங்களின் சுவையில் தோய்ந்தவருக்கும் கீழ்நாட்டுக் காவியங்களின் ரஸத்தைப் பருகி அனுபவிப்பவருக்கும் சமமான இன்பத்தைத் தரும். இவ் இரசனையை ஆராய்ந்து பார்ப்போம்.

பஞ்சவடியில் சீதாராமலக்ஷ்மணர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும்நாளில் உடன்பிறந்தேகொல்லும் வியாதியைப்போல ராவணனுக்கு உடன்பிறந்தாளேயாயினும் அந் நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினளான சூர்ப்பநகை ராமன் இருந்த சூழல்வாய் வந்து தோன்றுகிறாள். ராமனுடைய ரூபலாவண்யத்தைக்கண்டவுடன் காமாதுரையாகி, அவள் தன் அரக்க உருவத்தை மாற்றிக்கொண்டு தேவ கன்னிகை போன்ற ஜகன்மோகனமான உருவம் ஒன்றைத்

* The episode of Polyphemus the Cyclops in the Odyssey of Homer, and the account of the Harpies in Virgil's Æneid.

தரித்துக்கொண்டு ராமன் கண்ணெதிரே வருகிறாள்.

கம்பனுடைய சந்தங்களைப்பற்றிய விசாரணை இவ் வாராய்ச்சியின் இறுதியில்தான் செய்வது முறையானாலும், இங்கே கம்பன் எடுத்துக் கொள்ளுகிற சந்தம் விஷயத்துக்கு மிகவும் பொருத்தமானது என்று நாம் கூறாமலிருக்க முடியவில்லை. பாலகாண்டம் கோலங்காண் படலத்தில் சீதா தேவி சபாமண்டபத்தில்,

சிற்றிடை நுடங்க, ஒளிர் சீறடி பெயர்த்து,
அன்னமும், அரம்பையரும், ஆர் அமிழ்தும் நாண,
மன் அவை இருந்த மணி மண்டபம்,

அடைந்ததை வர்ணிக்க எடுத்துக்கொண்ட சந்தத்தையே, தாமரைக் குளத்தில் அன்னம் நீந்தி வரும் உணர்ச்சியையும், இன்பப் படகு வலிக்கப்பட்டு வரும் ஒய்யாரத்தையும் அது நினைவுக்குக் கொண்டுவருவதால், கம்பன் இங்கும் கையாளுகிறான்.

சூர்ப்பநகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் அழகைத்தான் என்னென்று சொல்லலாம்! வால்மீகியில் சூர்ப்பநகையின் வரவு சாமானியமாகத்தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமன் ரிஷிகளோடும் சீதாலக்ஷ்மணர்களோடும் உட்கார்ந்துகொண்டு அவர்களுக்குக் கதைகள் சொல்லிக்கொண்டிருக்குங் காலத்தில் சூர்ப்பநகை சிவந்த தலைமயிரும், கொடிய கண்களும், நரைதிரை உள்ள உடலும் முதலிய அலங்காரங்களுடன் ராமனிடம் வந்து, பத்தினியோடு கூட இந்தப் பிரதேசத்திற்கு வந்த நீ யாவன், உன்னுடைய விருத்தாந்தங்களெல்லாம் என்ன, என்று கேட்கிறாள். ராமன்,

ந ஹி தாவத் மனோஜ்ஞாங்கி
ராக்ஷஸீ ப்ரதிபாஸி மே,

என்று சொல்லுகிற வாக்கிலிருந்துதான் உரைகாரர் சூர்ப்பநகை யௌவன உருவத்தை எடுத்துக்கொண்டு ராமனிடம் வந்திருக்கவேண்டுமென்று கவி அநுமானிக்கச் செய்கிறார் என்கிறார்கள். சூர்ப்பநகை கேட்டதும் ராமன் தன்னுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லிவிட்டுச் சூர்ப்பநகையின் பூர்வோத்தரத்தைக் கேட்பதும், சூர்ப்பநகை தான் ராமனைக் காமிப்பதாக முதலெடுத்ததுமே வெள்ளையாகச் சொல்லிவிடுவதும் வேலைப்பாடில்லாமல் மொட்டையாக இருக்கிறது. ஆனால் கம்பனில் சூர்ப்பநகை மோகனமான உருவத்தைத் தரித்துக்கொண்டு நூபுரம் மேகலை முதலிய ஆபரணங்கள் குலுங்க ராமன் தனியே இருக்கும் இடத்தை நோக்கி வர, அவ் உருவத்தைக் கண்ட எம்பெருமான்,

பாருழையின் இல்லது ஒரு மெல் உருவு பாரா,
ஆருழை அடங்கும்? அழகிற்கு அவதி உண்டோ?

என்று நினைக்கிறான். அவள் வந்து, வெவ்விய நெடுங்கண் அயில் வீசி, அயல் பார்த்து, நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி அயல் நின்றதும், ராமன் அவள் செய்தியை விசாரிக்கிறான். சம்பாஷணை வெகு ருசிகரமாக, இயற்கையில் நடைபெறுவதுபோல, நடக்கிறது. இடையில்தான் அமுதின் வந்த அருந்ததிக் கற்பின், அஞ்சொல் வேயிடை தோளினளான சீதை ராமனிடம் விடுகிறாள். இந்தச் சிறு, ஆனால் ரசனைத் திறம் அனைத்தையும் காட்டுகின்ற, தந்திரத்தினால், சீதையை ஓர் அரக்கியென்று சூர்ப்பநகை கூறும்படி செய்வதும், ராமன் அதைக் கண்டு சிரித்துச் சூர்ப்பநகையின் தன்மையைப் பரிபூரணமாகத் தெரிந்துகொண்டுவிடும்படி செய்து கதையை அழகுபட அமைப்பதும் கவிக்குச் சாத்தியமாகிவிடுகிறது. அதனோடு மானம் லவலேசமுமிழுக்கா மறம் நிரம்பிய கம்பனுடைய ராமன் சூர்ப்பநகையின் ஸ்வரூபத்தைக் கண்ட

பிறகுதான்,

தரையளித்த தனி நேமித் தயாதன்தன்
புதல்வர் யாம்......
கரை அளித்தற்கு அரிய படைக் கடல் அரக்கர்
குலம் தொலைத்து, கண்டாய், பண்டை
வரை அளித்த குல மாட நகர் புகுவேம்
இவை தெரிய மனக் கொள்!

என்று அகங்காரத்தோடும் கர்வத்தோடும் சொல்லுகிறான்.

கர தூஷண திரிசிரர்களுடைய யுத்தம், வால்மீகியில் போலவே கம்பனிலும், யுத்தகாண்டத்தில் வரப்போகும் கோரயுத்தங்களுக்கு ஒத்திகையாக விளங்குகிறது. சூர்ப்பநகைராவண சந்திப்பிலும் சம்பாஷணையிலும் கம்பன் அபூர்வமான திறமை காட்டுகிறான். பரதராம சமாகமம் போல வால்மீகியில் இச் சகோதரசகோதரி சந்திப்பும் சம்ஹிதை வழியைத் தான் பின்பற்றுகிறதே யொழியக் காவிய வழியைப் பின்பற்றவில்லை. சூர்ப்பநகை, நீ ராஜ்ஜியத்தைக் கவனிப்பதில்லை, விஷய போகத்தில் இறங்கிவிட்டாய், வேவு சரியாகப் பார்ப்பதில்லை, கரதூஷணாதியர் இறந்ததைப்பற்றி நீ இன்னும் தெரிந்துகொள்ளவில்லை, என்று முதலாகச் சொல்லி ராவணனைத் திட்டிவிட்டு, சம்பந்தாசம்பந்தமில்லாமல்,

தீக்ஷ்ணம், அல்பப்ரதாதாரம்
ப்ரமத்தம், கர்விதம் சட்ஹம்,
வ்யஸனே ஸர்வ பூதானி
ந அப்ஹிதாவந்தி பார்த்திவம் *

என்பன போன்ற மொழிகளை அவனிடம் பேசுகிறாள். இவ்வாறு இருபத்துமூன்று சுலோகங்களால் சூர்ப்பநகை தகுதியில்லா அரசன் இம்மாதிரி இருப்பான் என்று ராவணனிடம் சொல்லி வருதலில் சுவை சிறிதும் இல்லாமலிருக்கிறது. தவிர இச் சம்பாஷணைக்கு முன்னாகவே அகம்பனன் என்னும் அரக்கன் கரன் முதலாயினோர் பட்டவாற்றைச் சொல்லிச் சீதையை அபகரித்து வருதல்தான் ராமனைத் தண்டிக்கும் முறை என்று ராவணனுக்குப் போதித்ததன்மேல் ராவணன் மாரீசனுடைய உதவியை வேண்டினதாகவும், மாரீசன் ராமனுடைய பராக்கிரமத்தைப்பற்றிச் சொல்லி ராவணனைத் தன் ஊருக்குத் திரும்ப அனுப்பிவிட்டதாகவும் வால்மீகி கதையைக் கொண்டுபோகிறான். சூர்ப்பநகை இதன் பிறகு சீதையை அபகரித்து வா என்று ராவணனிடம் சொல்லுவதும், ராவணன் மறுபடி மாரீசனிடம் சென்று கூறியதையே கூறுவதும் கதைக் கிரமத்துக்குப் பொருந்தாததாக இருக்கிறது.

கம்பனில் இவ் இரசனையைக் கவனிப்போம். இரத்தம் ஒழுகும் அவயவங்களோடு சூர்ப்பநகை ராவணனைப் பார்க்க வருங் காலத்தில் அரக்கியரெல்லாம் மனங்கலங்கிக்கொண்டும், அழுது கொண்டும், இதைப் பார்த்ததும் ராவணனுடைய கோபம் என்ன செய்யுமோஎன்றுஅஞ்சிக்கொண்டும் நிற்கிறார்கள். இனி வர இருக்கும் ராவணனுடையகோபத்திற்கும்,சீதாபஹரணத்திற்கும், ராமராவண யுத்தத்திற்கும், அரக்கரின் வீழ்ச்சிக்கும்இந்த உபோற்காதம் அந்தம் தருகிறது. வந்த சூர்ப்பநகை வால்மீகியில் போல ராவணனை இழித்துக் கூறவில்லை. கம்பனுடைய ராவணனை உரிமையின்றிச் சீறத் தகுந்தவர் யாருமில்லை. முறைபிறப்பவள் செய்யவேண்டிய பிரகாரம் சூர்ப்பநகை ராவணனது பாதத்தில் வீழ்கிறாள். அந்த நிலைமையில் அவளைக் கண்ணுற்றதும் ராவணனுடைய புருவங்கள் நெரிந்தன. நயனங்கள் எரிந்தன. கோவத்தால் உடல் விம்மத் தோள்

*(இ-ள்) கடுஞ்செயலன், இவறற்குண முடையான், பொச்சாப் புடையவன், கர்வமுடையவன், மூர்க்கன் ஆகிய இத்தகைய அரசர்களுக்குக் கேடு வந்த காலத்தில் யாரும் உதவார்.

வலயங்கள் விரிந்தன! அவன் கோபாவேசத்தைக் கண்டு சூரியன் நடுங்குகிறான்; தேவர்கள் ஓடி ஒளிக்கின்றனர்; ஆதிசேஷன் கூட நெளிந்து கொடுத்துக்கொள்ளுகிறான். கடைசியாக,

மடித்த பில வாய்கள்தொறும் வந்து புகை முந்த
துடித்த தொடர் மீசைகள் சுருக்கொள உயிர்ப்ப,
கடித்த கதிர்வாள் எயிறு மின் கால, மேகத்து
இடித்த உரும் ஒத்து உறி,

"யாவர் செயல்?" என்று ராவணன் கேட்கிறான்.

மானிடர்தாம் வாளுருவி வெட்டினர் என்று சொல்லிச் சூர்ப்பநகை நிறுத்துவதால், ராவணன் பயமில்லாமல் உள்ளதைச் சொல் என்று சொல்வதும், ராமலக்ஷ்மணரின் ரூப லாவண்ணியத்தில் அழுந்திய மனத்தினளாகிய சூர்ப்பநகை அவர்களது அழகை ஆசைதீர வர்ணிப்பதும் இயற்கையாகிறது. தன்னுடைய ஆக்கினைக் குட்பட்ட காட்டில் தன் அருமைச் சகோதரிக்கு இந்த அவமானம் ஏற்பட்டுவிட்டது பார்த்தாயா என்று ராவணன் தன்னைத்தான் கடிந்துகொள்ளுவதும், கரதூஷணர் அவர்களைக் கொல்லவில்லையோ என்பதும், கரன் பேரைக் கேட்டதும் சூர்ப்பநகை கண்ணீர்விட்டுப் புரண்டு அழுது கரதூஷணர் வீழ்ந்த வரலாறு கூறுவதும், ராவணன் நிறைநெடுங் கண்களெல்லாம் நெருப்புக் கால, "நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல்?" என்று கேட்பதும், காரணம் சொல்லுகையில் பொய் யொன்றைச் சேர்த்து, ராவணனுடைய அந்தப்புரத்துக்காக, பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தவளும், தாமரை இருந்த தையல் சேடி ஆம் தரமும் அல்லாதவளும், அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவளும், கடலினும் பெரிய கண்களையுடையவளும் ஆன சீதையை வர்ணித்து ராவணனுடைய மனத்தில் காமத்தீயைக் கொளுத்தி விடுவதும், மலையருவி விழுவதுபோலக் கதையில் தேக்கமின்றிச் சரளமாகப் பெருகிவருகிறது. அயோத்தியா காண்டத்தில் 'ஆழிசூழ் உலகமெல்லாம்' என்ற செய்யுளில் போட்ட வித்து காவிய பூமியில் விழுந்து மண்ணையும் நீரையும் உண்டு, உப்பி, அங்குரித்துவிட்டது.

காரையும் மறந்தான், தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
ஊரையும் மறந்தான், உற்ற
பழியையும் மறந்தான், வெற்றி
ஆரையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வாரையும் மறந்தான், கேட்ட
மங்கையை மறந்திலாதான்!

என்ற செய்யுளில் அவ் வித்து முளையைக் காட்டத் துவக்கிவிட்டது.

ராவணனுடைய காம நோயை வர்ணிக்கக் கம்பன் ௪௦ செய்யுள்கள் எழுதியிருக்கிறான். இது அதிவர்ணனையே. ஆனால் கும்பகர்ணன் மாண்டும், இந்திரசித்தன் தலை யிழந்தும், மூலபலங்கள் மடிந்தும் அவியாத காமத்துக்கு இத்துணை விளம்பனமான வர்ணனை வேண்டும் என்று கவி நினைத்திருக்கிறான் என்று கொள்ளல் வேண்டும். இவ் வர்ணனைகளில் பெரும்பாலன பண்டைட்டு இலக்கியங்களையும் ஆராய்ந்து சுவையறிவைச் சேகரித்தவருக்குச் சுவைகொடா. இவற்றில் இயல்பின்மைதான் மிகுதியாகக் காணப்படுகிறது. முன் சொன்ன காரணத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் இதிலும் ரசனையின் குறைபாடு அத்துணை அதிகமாகத் தோன்றாது என்று சொல்லுவோம். இருப்பினும் இப் பாகம் வேறு மாதிரி அமைக்கப்பட்டிருத்தலே முறை என்று எடுத்துக்காட்ட நாம் பின்வாங்குகிறோமில்லை.

மாயமான் விஷயத்தில் லக்ஷ்மணன் ஆக்ஷேபித்ததும் ராமன் சமாதானம் கூறிவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுகிறன் என்று வால்மீகி செய்திருக்கும் ரசனையில் லக்ஷ்மணனுடைய சாமர்த்தியமும் முன் யோசனையும் வற்புறுத்திக் காட்டப் படவில்லை. லக்ஷ்மணன் ராமனை அவ் வேட்டையினின்று விலக்கப் பன்முறையும் முயன்று பார்த்தால்தான் படிப்போருடைய மனதில் லக்ஷ்மணனுடைய கூரிய அறிவையும் ராமபக்தியையும் விளக்கிக் காட்ட முடியும் என்று கம்பன் ராமலக்ஷ்மண சம்வாதத்தை மிக வேலைப்பாடோடு அமைத்திருக்கிறன்.

சீதை லக்ஷ்மணனைச் சீறி ராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்பனுடைய கைநயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கேயும் விட அதிக விசதமாக விளங்குகிறது. மாரீசன் ராமன் குரலை அனுகரித்துக் கூவியதும், சீதை ராமனது உயிருக்கு அபாயம் நேர்ந்துளது என்று ஐயுற்று லக்ஷ்மணனை ராமனைத்தேடிப் போகும்படி ஆக்ஞாபிக்கிறள். ஆனல்

> ந ஜகாம தத்ஹோக்தஸ்து
> ப்ஹ்ராதுர் ஆஜ்ஞாய சாஸனம் *

என்று மாத்திரம் கவி லக்ஷ்மணனைப் பற்றிக் குறிப்பிடுகிறன். அவன் சும்மா இருந்ததைக் கண்ணுற்ற சீதை உடனே, "என்னைக் காமித்தன்றே நீ ராமனுடைய அழிவைக் கோருகின்றய்! என்னைச் சுவீகரிக்கும் பொருட்டே நீ ராகவனுக்குத் துணைபுரியச் செல்லுகிறயில்லை" என்று சொல்லிவிடுகிறள். இவ்வாறுபேசுவதில் உள்ள வைரஸ்யம் † ஒருபுறமிருக்க, ஆரம்பத்திலேயே இத்துணைப் பெரிய வார்த்தைகளைப் பிரயோகிப்பதனல் இச் சம்பாஷணைக்கு ஆரோகணக் கிரமம் இல்லாமற் போய், சென்று தேய்ந்திறுதற் குற்றம் சம்பவித்துவிடுகிறது. இன்னும் "பரதன் ஏவுதலினலோ, அல்லது நீயே சூழ்ச்சி செய்துகொண்டுதானே இவ்வாறு செய்கிறய்; பார் உன்னெதிரிலேயே பிராணனை விட்டுவிடுகிறேன்," என்று சீதை சொல்லுகிறள். பரதனைப் பற்றிச் சீதை இவ்வாறு பேசுவது இயற்கைக்குப் பொருந்தியிருக்கிறது என்று சிலர் சொல்லலாம்—சிலர் சொல்லியும் கேட்டிருக்கிறேம். ஆனல் இயற்கைக்காவது கதை அமைப்புக்காவது சீதையின் தன்மைக்காவது இத்தகைய வாக்குச் சிறிதும் பொருந்தியதன்று என்று தைரியமாகச் சொல்லுவோம். இதற்கு லக்ஷ்மணன் கூறும் பதில் இன்னும் விரஸமாக இருக்கிறது.

"இத் தகாத வார்த்தைகள் பெண்கள் வாயினின்று வருவதில் ஆச்சரியமில்லை. பெண்கள் அறவழி நில்லாதவர், சபலசித்தர், கொடியவர், கலகமூட்டுபவர். என்னை இவ்வாறு ஐயுறும் நீ கெடுக!" என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில் "உன்னை வன தேவதைகள் காத்திடுக," என்று சொல்லிக்கொண்டு லக்ஷ்மணன் ராமன் காலடிகளைப் பின்பற்றிச் செல்லுகிறன்.

இக் கட்டத்தைக் கம்பன் எவ்வாறு அமைக்கிறன் என்று பார்க்கலாம். மாரீசனுடைய சத்தத்தைக்கேட்டதும் குயில் தலத்திடை உற்றதோர் கொள்கையாளான சீதை லக்ஷ்மணன் யாதொரு வேதனையும் படாதிருப்பதைக்கண்ணுற்று,

> குற்றம் வீந்த குணத்தின் எங் கோமகன்
> இற்று வீந்தனன் என்னவும், என் அயல்
> நிற்றியோ, இளையோய், ஒரு நீ!

என்றள். உடனே லக்ஷ்மணன் ராமனுடைய

* (இ-ள்) அவ்வாறு ஆணையிடப்பட்டும் அண்ணனது ஆணையைக் கருதி லக்ஷ்மணன் அதை விட்டு நகரவில்லை. † விரஸத்தன்மை.

அசகாய சூரத்துவத்தை ஆறு கம்பீரமான பாட்டுக்களில் வர்ணிக்கின்றன்.

> கார் எனக் கரிய அக் கமலக் கண்ணனை
> ஆர் எனக் கருதி இவ் இடரின் ஆழ்கின்றீர்?
> .... புரம் எரித்த புங்கவன்
> ஏற்றி நின்று எய்த வில் இறுத்த எம் பிரான்
> ஆற்றலின் அமைவது ஓர் ஆற்றல் உண்மையோ"

என்று கேட்டுவிட்டு, லக்ஷ்மணன் ராமனது அம்பினல் பட்டு வீழ்ந்த அரக்கனதுசத்தமாகத்தான் அது இருக்கவேண்டும், ஆதலின் மனதில் சஞ்சலப்படாமல் பொறுத்திரும் என வணங்கிச் சொல்லுகிறன். இதற்குச் சீதை வால்மீகியில் போலவே எடுத்த சீற்றத்தளாய், கொன்றன இன்னலளாய், கொதிக்கும் உள்ளத்தளாய்த் தான் பேசுகிறள். ஆனல் அதில் எவ்வளவு நிதானம்! சிறிதேனும் வரம்பு கடத்தல் என்பதில்லை. வார்த்தைகள் நிறுத்து வைத்ததுபோல் விழுகின்றன. பரதனைப்பற்றியாவது லக்ஷ்மணனைப்பற்றியாவது விரஸமான, அவாச்சியமான வார்த்தைகள் ஒன்று கூடச் சீதையின் வாயினின்று வரவில்லை. "நின்ற நின் நிலை இது நெறியிற்று அன்று!" என்று சொல்லிவிட்டு,

> ஒரு பகல் பழகினர் உயிரை ஈவர், ஆல்!
> பெரு மகன் உலைவுறு பெற்றி கேட்டு, நீ
> வெருவலை! நின்றனை! வேறு என்? யான் இனி
> எரியிடை வீழ்ந்து உயிர் இறப்பல் ஈண்டு!

என்று சொல்லிக் கொண்டு, தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல், காட்டுத் தீ எரியுமிடம் நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டாள்.

இதன் பிறகும் லக்ஷ்மணன் வாயினின்று ஒரு கொடிய சொல்கூட விழவில்லை.

இந்தக் கட்டத்தை வால்மீகியிலும் கம்பனிலும் ஆதியோடந்தமாய்ப் படிக்குமவர்க்கு வால்மீகி ராமாயணமானது இடைக்கிடை தங்கக்கொடிகள் கொழுத்து ஓடுனும் பூமியிலிருந்து அப்படியே பாறையோடு வெட்டியெடுக்கப்பட்ட கட்டியைப் போன்றதுதான் என்றும், கம்பராமாயணம் அத்தங்கத்தை எடுத்து உருக்கி, மாசு போக்கி, வார்த்த சொர்ண விக்ரகமாகும் என்றும் தோன்றும்.

சீதா ராவண சம்வாதத்தையும் கம்பன் வெகு சாமர்த்தியமாய்ப் பாகுபடுத்தியிருக்கிறன். ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போகுமுன் ஒரு சம்வாதம் அமைத்துவிட்டு வால்மீகி உடன் கையிலேயே சீதையை அசோகவனத்தில் கொண்டுபோய்ச் சேர்த்த பிறகு அவர்களுக்குள் ஏறத் தாழ அதேமாதிரி சம்பாஷணையே மறுபடி ஏற்படும்படி செய்திருக்கிறன். கம்பனுடைய சுவைபுணர்ச்சிக்கு இவ் விரண்டு சம்பாஷணைகளும் இவ்வளவு நெருங்கியிருத்தல் முறையில்லையென்று தோன்றியே கம்பன் சுந்தரகாண்டத்தில் அநுமானுடைய பார்வையில் நடக்கும் சம்வாதத்துக்கு முன் லங்கையில் சீதாராவணர்களுக்குள் யாதொரு பேச்சும் நிகழ்த்தாமல் நிறுத்திக்கொண்டிருக்கிறன்.

ராவணன் சீதையை அபகரிப்பதற்காக வருங் காலத்தில், வால்மீகி அவனைக் கண்டு இயற்கைப் பொருள்கள் நடுங்கின என்று வர்ணிக்கிறன். * கம்பன் இந்த வர்ணனையைச் சுவீகரித்துக்கொண்டு தனது சித்திர படலத்திலும் அதைச் சேர்த்துக்கொண்டுவிட்டான். கம்ப

* அந்தக் கொடுந் தொழிலனன ராவணனைக் கண்டதும் ஜனஸ்தானத்தில் நின்ற மரங்கள் அசைவொழிந்து நின்றன: காற்று அடங்கி விட்டது: வந்தறு கண்ணினனன அவனது கண்கள் பட்டதும் வேகமாய்ச் செல்லும் கோதாவரி நதியும் பயந்து ஸ்தம்பித்துப் போய் மெல்லவே நகர ஆரம்பித்தது! (வால்மீகி சகூ. கூ, எ.).

ஞுடைய வர்ணனை பின் வருமாறு:

நடுங்கின மலைகளும் மானும்! கா அவிந்து
அடங்கின பறவையும்! விலங்கும் அஞ்சின!
படம் குறைந்து ஒதுங்கின பாம்பும், பாதகக்
கடுந் தொழில் அரக்கனைக் காணுங் கண்ணினே!

மகா கவிகளுக்கெல்லாம் இத்தகைய மகா சந்தர்ப்பங்களில் பிரகிருதி மனித உணர்ச்சியோடு நடப்பது போல எழுதுவது சகஜமாயிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இலியாதின் ௨௦-வது சருக்கத்தில் ஹோமர் பின்வருமாறு பாடுகிறான்:

போர்க்கடவுள் * துரோயா † மீது வட்டமிட்டுக்கொண்டு, தன் பயங்கரமான உருவத்தைப் புயற் காற்றாலும் மழை மேகத்தாலும போர்த்தி மறைத்துக்கொண்டு, அத் துரோயாவின் உன்னதமான கோபுரங்களின் மீது நின்று கர்ஜித்துத் தன் வேகத்தைத் துரோயர் நெஞ்சில் ஊற்றினான். பக்கத்திலுள்ள மனோகரமான குன்றிற்குத் தாவி ஸிமோயா ‡ நதியை நோக்கிக்கொண்டு அட்டகாசம் செய்கையில் குன்று அதிர்ந்தது, வேகமாய்ச் செல்லும் அந் நதி ஸ்தப்தமாய் நின்று விட்டது. ¶

ஏவாள் மாத்திரமின்று கடவுள் தொடக்கூடாது என்று ஆணையிட்டிருந்த பழத்தைக் கொய்து மனித ஜாதிக்கே துக்கத்தையும் மரணத்தையும் உண்டாக்கித் தந்துவிட்டபோது,

பூதேவி புண்பட்டாள்; முடிவு வந்துற்றதென்று
பகுதியாளும் தான் நிற்கும் அனைத்துப் பொருள்
களினும் உயிர்த்துக் கொண்டு பொருமினள்,
துடித்தாள், *

என்று மில்தனும் கற்பித்தெழுதுகிறான். எந்த ஜாதியினராயினும் பெருங்கவிகளின் இதயத்தில் ஒரே மகாநாதம் ஒலிக்குமன்றோ?

சீதா ராவண சம்வாதத்தைக் கம்பன் வெகு அழகாக, சுவைப் பிறழ்ச்சி சிறிதுமின்றி,

இருந்தவன், 'யாவது இவ் இருக்கை? இங்கு உறை
அருந்தவன் யாவன்? நீர் யாரை?' என்றலும்,
விருந்தினர்—இவ்வழி வீரு இலார் என,
பெருந் தடங் கண்ணவள் பேசல் மேயினள்,

என்று ஆரம்பிக்கிறான். வால்மீகியோ ராவணனைப் பதினேழு சுலோகங்களால் சீதையின் சர்வாங்கங்களையும் காமாதுரனைப் போல வர்ணிக்கச் செய்து விரசமாக்குகிறான். சம்பாஷணையின் துவக்கத்தினின்று,

....

எரிந்தன நயனம்: தீந்தின
சென்றன திரள் தோள்: வான்ம
தீண்டின மகுடம்: திண் கை
ஒன்றோடு ஒன்று அடித்த: மேகத்து
உரும் என எயிற்றின் ஒளி
மென்றன: வெகுளி பொங்க,
விட்டது மாய வேடம்!

என்ற முத்தாப்பவை கம்பனில் சம்வாதம் ஆரோகணக் கிரமத்திலேயே ஏறிவருகிறது படிப்போருக்குப் போனந்தத்தைத் தருகிறது.

'படங்குறைந்தொடுங்கின பாம்பும்' என்பதற்குக் கூட இங்கு மில்தனில் Back to the thicket slunk the guilty serpent என்கிற சதிருச வாக்கு அகப்படுகிறது. ஆனால் சர்ப்ப ரூபம் தரித்துவந்த சைத்தானையே அது குறிப்பதால் நூலில் அதை எடுத்துக்காட்டவில்லை.

* Ares or Mars. † Troy. ‡ Simois.

¶ The mountain shook, the rapid stream stood still.

* Earth felt the wound, and Nature from her seat
Sighing through all her works, gave signs of woe
That all was lost.

அயோமுகிப்படலம் விராதன் வதையைப் போலவே வேதாளக்கதை ஜாதியைச் சேர்ந்ததாயிருக்கிறது என்றோம். ஆனால் கம்பன் அதற்கு ஓர் பிரயோஜனம் கற்பித்து வைக்கிறான். லக்ஷ்மணன் அயோமுகியினால் வழி மறிக்கப்பட்டுக் குறித்த காலத்துக்குள் வாராததைப் பார்த்து ராமன் சகோதரனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்துவிட்டதோ என்று தவியாய்த் தவிக்கிறான். லக்ஷ்மணனிடம் ராமனுக்கு இருக்கும் நிரதிசயமான வாற்சல்லியத்தைக் காட்டச் செய்து கம்பன் இந்த விபர்த்தமான கதையையும் பொருளுள்ளதாகச் செய்துவிடுகிறான்.

இன்னும் எடுத்துக் காட்டக்கூடியது அனேகமிருந்தும் விரிவஞ்சி இதனோடு நிறுத்திக் கொள்வோம்.

விர்கிலியன் *

——(*)——

(ஸ்ரீமான் சு. வையாபுரிப் பிள்ளை எழுதுவது)

[மேனாட்டுக் காவியங்கள், கதைகள், நாடகங்கள் முதலியவற்றை மொழிபெயர்ப்போரும் அவைகளைப் பற்றி எழுதுவோரும், அவைகளில் வரும் சிறப்புப் பெயர்களை, ஒன்று தமிழில் பொருள் தரக்கூடிய பெயர்களாக மாற்றிவிடுகிறார்கள், அல்லது ஆங்கிலத்தில் அவை உச்சரிக்கப்படுகிற படியே எழுதுகிறார்கள். சாலக்கிரமத்தில், அன்னிய நாட்டு வீரர்கள், கவிகள் முதலியோரின் பெயர் நமது காவியங்களிலும் வசன நூல்களிலும் சேர்க்கப்படவே இருக்கின்றனவாதலாலும், அன்னியநாட்டுச் சரித்திரங்கள், காவியங்கள், வீரர்கள் முதலியோரைப்பற்றித் தமிழர் எழுதும் முதனூல்களும் விமரிசன நூல்களும், மொழிபெயர்ப்புக்கள் மூலமாயாவது, அன்னிய நாட்டாரால் படிக்கப்படும்படி செய்யவேண்டியது அவசியமாதலாலும், மேற்சொன்ன சிறப்புப் பெயர்களைத் தமிழுடன் பொருந்தும்படியும், அன்னியர் படித்த மாத்திரத்தில் அறிந்துகொள்ளும் படியும் அமைக்கவேண்டியது அவசியம் எனக் கருதி நாம் வெகு நாட்களாக அத் தகைய பெயர்களை அவைகளின் பகுதியை அப்படியே வைத்தும், அவைகட்குத் தமிழ் விகுதியைச் சேர்த்தும் மாற்றி எழுதி வருகிறோம். 'பாலபாரதி'யிலும் அதே முறையைத்தான் முடிந்த அளவுக்கு ஆண்டு வருகிறோம். ராமன், லக்ஷ்மணன், சிவன், கங்கர், கலிங்கர், கூர்ஜ்ஜரர் முதலிய பெயர்களும் இவ்வாறே அமைக்கப்பட்டு ஆன்றோரால் ஆளப்பட்டு வந்திருப்பதை ஈண்டுக் குறிப்பிடுவோம். இம்மாதிரி ஐரோப்பியநாட்டுப் பெயர்களை அமைப்பதில் ஆங்கிலேயர் தங்கள் முறைப்படி உச்சரிக்கிற உச்சரிப்பை எடுத்துக்கொள்ளாமல், அவ் வந் நாட்டு ஆசிரியர் உச்சரித்த பிரகாரம் அவற்றை எழுதுவதே முறை என்று அறிஞர் ஒப்புக்கொள்ளுவார்கள் எனவும் நம்புகிறோம். தெரிந்த அளவுக்கு அவ் உச்சாரணப் படியே 'பாலபாரதி'யில் அமைத்தும் வருகிறோம். இம் முறையைக் கையாடவேண்டும் என்று ஆசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு அவரும் அதற்கு இசைந்துளார். ப—ர் 'பாலபாரதி.']

ஆங்கிலவுணர்ச்சியுள்ள அறிஞர்கள் தமிழ் இலக்கிய சரிதம் கூறுமிடத்துக் கடைச்சங்க காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் ஒளகுஸ்த யுகம் † என்று எழுதி வருவது பலரும் அறிந்திருக்கலாம். இதன் பொரு

* Virgil.

† The Age of Augustus.

ளமைதி ரோம் நகரத்துச் சரித்திரத்தினை அறிந்தார்க்கே நன்கு விளங்கக்கூடியது. ஔகுஸ்தன் என்று பெயர் வழங்கிய ஒக்தாவிய கேசரி, * ரோம் நகரத்தில் அரசு செய்த சக்கரவர்த்தி; பேரரசனாகிய ஜூலிய கேசரி † என்பவனுடைய மருமகன். இவன் காலத்தே, பெரும் புலவர்கள் பலர் சிறந்து விளங்கினார்கள்; இலக்கியம் வளம் நிரம்பிச் செழித்தோங்கியது. இவ் இலக்கியங்கள் என்றென்றைக்கும் நின்று நிலவக் கூடிய பெருமை வாய்ந்தனவாய், பிற்காலத்திய புலமைத் துறைகளைச் செவ்வனே தெரிக்கும் கலங்கரை விளக்கம் போன்றனவாய், ஆதுனிக நூல்களின் பெருமையை அளவிடுதற்கமைந்த உரை கல்லெனக் கருதத் தகுதியனவாய் உள்ளன. இதனாலேயே இவ் இலக்கியங்களைப் புராதனப் பேரிலக்கியங்கள் (கிளாஸ்ஸிஸ்) என ஆராய்ச்சியாளர்கள் வழங்குகின்றார்கள். இங்கு குறித்தன லத்தீன் பாஷை இலக்கியங்களாம். லத்தீன் இலக்கியங்கள் செழுமையாய் விளங்கிய காலம் ஔகுஸ்த யுகம் எனப் பெயர் பெறும். ஆனால் இவ் ஔகுஸ்தன் காலத்தில் பெருஞ்சிறப்பால், பிறபாஷை யிலக்கியங்கள் சிறந்து விளங்கிய காலங்களையும் அவ் வப் பாஷை இலக்கியங்களின் ஔகுஸ்த யுகம் எனக்கூறுவது மரபாயிற்று.

ரோம் நகரத்தில் ஔகுஸ்தன் அரசு செய்த காலத்தில் லத்தீன் இலக்கியம் செழித்து வளர்தற்குப் பல காரணங்க ளுள்ளன. கல்வி மிகவும் போற்றப்பட்டு வந்தமையோடு, நாகரிகமும் பண்பு மிக்கு விளங்கிற்று. வெகு காலமாகப் போரும் உட்பகைக் குழப்பமும் நிரம்பி இருந்த இடத்தில் அமைதியும், சாவகாசமும், சௌகரியமும் நிலைபெற்றமையும் ஒரு காரணம். ஆனால் இவற்றோடு வேறொரு காரணமும் இருந்தது. ரோம சக்கரவர்த்தியாகிய ஔகுஸ்தனுடைய குணாதிசயமே இலக்கிய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயமைந்திருந்தது. சக்கரவர்த்தியும் அவனது அருமை நண்பனும் மந்திரியுமாகிய மேகேனன் ‡ என்பவனும் புலவர்களை ஆதரித்துப் போற்றி வந்தமையோடு நுண்கலைகளையும் பரிபாலித்து வந்தனர். மேகேனன் ரோம் நகரத்துப் பெரியதோர் குடும்பத்திற் பிறந்தவன்; ஆற்றல் சான்றவன்; பலதுறை விற்பன்னன்; கைதேர்ந்த இராஜ்யதந்திரி. இவனுக்குச் சக்கரவர்த்தியால் அளவற்ற செல்வாக்குண்டு. இவனது மனோஹரமான அரண்மனை எஸ்கிலின் என்ற குன்றின் மீதிருந்தது. அங்கே ரோம் நகரத்துக் கலைவாணர்களெல்லாம் கூடிச் சல்லாபம் செய்வது வழக்கமாயிருந்தது. இவ் அருங்கலைவினோதன் இலக்கியங்களையும், நுண் கலைகளையும் பரிபாலனம் செய்யும் வள்ளல் என நாடெங்கும் புகழ் பெற்றனன். யாதேனு மொரு கலையில் மேம்பாடுற்றிருப்பதே இவனது அன்புடை நோக்கிற்குப் பாத்திரமாகும் வழி. இவனது ஆதரவு இருப்பின் கலைவாணரைச் சக்கரவர்த்தி மிக விரும்பிப் பெற்றுக்கொள்வன். கிடைத்தற்கரிய இப் பெரும் பேறு பெற்றவர்களுள் ஒருவன் விர்கீலிப மகா கவி.

* Octavius Cæ:ar. † Julius Cæaar.
‡ Mœcensa.

விர்கீலிப மகாகவி மாந்துவா நகரத்தையடுத்துள்ள ஆந்தை என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவன். இவனது முழுப்பெயர் 'புப்லிப விர்கீலிப மாரோ' என்பது. இவன் இளமையில் நன்றாகக் கல்வி பயின்றுள்ளவனாதல் இவனது நூல்கள் மூலமாய் அறியக்கிடக்கின்றது. தக்க பருவமெய்திய பின்னரும் தனது தந்தையாரோடு குடும்ப வீட்டிலேயே இருந்து வந்தனன். அப்பொழுது பெரியதோர் விபத்து இவனுக்கு நேர்ந்தது. இத்தாலியா தேசத்தை வெகு காலமாக வருத்திப் பாழ்படுத்திய உட்கலகத்தில் போம்பேயன் என்பவன் ஒரு கக்ஷியிலும், அந்தோணி என்பவனும், பின்னால் சக்கரவர்த்தியாகிய ஒக்தாவியானன் என்பவனும் மறுகக்ஷியிலும் ஆக இருந்தார்கள். பிலிப்பியில் நடந்த யுத்தத்தில் குடியரசு ஒழிந்ததோடு கலகமும் ஓய்ந்தது. மாந்துவா நகரத்தை யடுத்த பிரதேசங்கள் ஒக்தாவியன் முதலானவர்கள் கக்ஷியைச் சார்ந்த சேனைவீரர்களின் ஆதீனத்தில் விடப்பட்டன. மாந்துவாவை யடுத்துள்ள கிரெமோனா, போம்பேயன் என்பவனுக்கு அநுகூலமாயிருந்து வந்தமையால், அரசமரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்ததுபோல, மாந்துவாவும் வருந்த வேண்டுவதாயிருந்தது. விர்கீலினது குடும்ப வீடும் நிலமும் ஒக்தாவியனின் நன்றிக்குப் பாத்திரராயமைந்த சேனைவீரர்க்குள் முதலிற் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. ஆனால் சக்கரவர்த்தியிடத்து மிகுந்த செல்வாக்குடையவனும் மாந்துவாபிரதேசத்தின்

தலைமை யதிகாரியுமாகிய ஆஸினி போல்லியோ என்பவனது பேருதவியால் விர்கீலியனுக்கு அவனது குடும்பச் சொத்துத் திரும்பக் கிடைத்தது. இவ்வுபகாரத்தை அவன் ஒருபோதும் மறவாது மிகப் பாராட்டி வந்தான். 'ஒக்தாவியன் ஔகுஸ்தன்' என்ற பட்டம் வஹித்துச் சக்கரவர்த்தியான பிறகு அவனைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் மிகப் பலராவர். அவர்களுக்குள்ளே விர்கீலியனைப்போல நன்றி நிரம்பிய உள்ளன்போடு வியந்து புகழ்ந்து பாடினோர் ஒருவரும் இல்லை. இந்த மாந்துவா நகரப் புலவன் இயற்றிய பாஸ்தோரல் என்னும் முல்லை நிலப்பாக்களில் முதற்பா, அரசனது பொறுமையினையும், கவியினுக்கு அவன் செய்த பேருபகாரத்தையும், கவியினது செய்ந்நன்றியறிதலையும் வெளியிடுதற்கே பாடப்பட்டது.

விர்கில் புலவன் முதன் முதல் பாடியது இம்முல்லை நிலப் பாக்களே. அவற்றைப் பாடும்பொழுது அவனுக்கு வயது ௨௭-க்கு மேல் ௩௪-க்குள் இருக்கலாம். இக்காலத்தில் அவன் தான் இழந்துவிட்ட குடும்ப நில முதலியவற்றைத் திரும்பப் பெற்று அவற்றின் வருவாயால் வாழ்ந்து வந்தனன். இப்பாக்கள் மேகேனன் என்ற மேற் சொல்லப்பட்ட மந்திரியின் கவனத்தைக் கவர்ந்தன. வெகு சீக்கிரத்தில், ஜன ரஞ்சகமான இம்மந்திரியைக் காண வந்துள்ள இராஜ்ய தந்திரிகள், கலைவாணர்கள், கவிஞர்கள், முதலிய இவர்களது கூட்டத்தில் நெடியதொரு கிராமவாசி வணக்க ஒடுக்கத்தோடு நின்று கொண்டிருந்தான். இவனே விர்கில். காலக்கிரமத்தில் மேகேனன் அரண்மனையில் அடிக்கடி வரும் விருந்தாளிகளில் ஒருவனாக இவன் ஏற்பட்டான். தன் மந்திரிப் பெருமானது உணவுச் சாலையை ஔகுஸ்த சக்கரவர்த்தி 'சோம்பேறிமடம்' என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு. அவ்வாறுள்ள சோம்பேறிகளில் ஒருவனாக விர்கீலியனை எண்ணுதற்கில்லை. மேகேனன் மூலமாக அவன் அடிக்கடி ரோம் நகரத்துக்குச் சென்று அங்கே நீடித்துத் தங்கியிருந்திருத்தல் வேண்டும். ஆனால் மாந்துவா நகரம் விட்டுச் சென்ற பின்னர் நாப்பிள்ஸ் நகரத்தில்தான் வசித்து வந்தான். தன்னை ஆதரித்துவந்த மேகேனன் சொற்படி ரோம ராஜ்யத்து 'உழவு' 'பசுபரிபாலனம்' என்ற விஷயங்களைப்பற்றி மருத நிலப்பாக்களை 'செயோர்கிக்ஸ்' என்று பேர் வைத்துப் பாடினான். அவன் செய்த நூல்களிலெல்லாம் மிகச் சிறந்ததும், உலக முழுவதும் பிரசித்தி பெற்றதுமான ஏனெயிட் என்னும் மகா காவ்யம் ஔகுஸ்தன் சக்கரவர்த்தியினது உள்ளக் குறிப்பின் வண்ணம் பாடப் பெற்றதாகும். இதுவரை பாடியவற்றைக், காட்டினும் பெருமையிற் சிறந்ததோர் விஷயம் பற்றிப் பாடுக என்று அரசர் பெருமான் திருவுளம் பற்றினான். எனினும் இக் காவியத்தை விர்கில் வெகு காலமாகச் சிந்தித்து அதற்கு ஒரு ரூபமும் ஒருவாறு அமைத்திருக்க வேண்டுமென்று நாம் நினைப்பது தவறாகாது. இதன் பலனாக ஏனெயிட் இயற்றப்பட்டது. ஹோமர் என்ற கிரேக்க மகா கவி யியற்றிய இரு பெருங் காவ்யங்களையும் அனுசரித்து எழுதப் பெற்றது இக் காவ்யம். விர்கீலியன் தன் காவியத்தை முற்ற முடித்தனன் என்று கூறவியலாது. அவன் தனது நுண்ணிய அறிவாலும், நெறிதவறா ரஸக்ஞானத்தாலும் அவ்வாறு முடிக்கு-முன்னர் தேகவியோக மாயினன். தனக்கு இறுதிக்காலம் வந்துவிட்டதென்பதையும் வுணர்ந்தவுடன் தனது காவ்யத்தை எரித்துவிட உத்தேசித்தனன். அவ்வாறு செய்யாதபடி அவனது நண்பர்கள் தடுத்தமையால்தான் இக் காலத்தில் இவ் அரிய காவ்யத்தை நாம் பெறலாயினோம். இவன் ஆதென்ஸ் நகரம் பார்ப்பதற்காகக் கிரேக்க தேசத்திற்குச் சென்றிருந்தான். அங்கே ஔகுஸ்த சக்கரவர்த்தியைச் சந்தித்து அவனது பரிவாரத்துடன் இத்தலி தேசத்திற்குத் திரும்பப் பிரயாணமாகி, பிரிந்திஸியம் என்ற இடத்தில் கப்பல் விட்டிறங்கினான். இவ் விடத்தில்தான் விர்கில் மரணமாயினன். நாப்பிள்ஸிலிருந்து பூதேயோலி என்னும் நகரத்துக்குத் திரும்பும் பாதையினருகே இக் கவிஞர் பெருமான் புதைக்கப்பட்டனன். போஸிலிப்போ நகரத்தையடுத்து இவனது சமாதி இன்றும் உளதெனக் கூறப்படுகின்றது.

மரணமாகும்பொழுது விர்கில் தக்க ஸ்திதிவந்தனாகவே யிருந்தான். ரோம் நகரத்தில் மேகேனன் அரண்மனைக்கருகில் ஒரு வீடும் புஸ்தகாலயமும் இவனுக்கு இருந்தது. பெரும் பதவியில் இருப்போர்களது சிநேகமெல்லாம் இவன் பெற்றிருந்தபோதிலும், தனது பூர்வ நிலையைச் சிறிதும் மறந்துவிடவில்லை. தனது வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கு இவன்

வருஷந்தோறும் தவறாமல் பணம் அனுப்பிக்கொண்டிருந்தானென்று நாம் அறியும்பொழுது நமது மனம் பூரித்து மகிழ்கின்றது. தன் காலத்தவராலே இவன் பெரிதும் நன்குமதிக்கப்பெற்றவன். ஒருமுறை இவன் ஒரு நாடகத்திற்குப்போக நேர்ந்தது; அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் இவனைக்கண்டதும் உடனே யெழுந்து அரசனுக்கு மரியாதை செய்வது போல் வணங்கி நல்வரவு கூறினார்கள். இறக்கும்வரை இவன் ஒழுக்கநெறி தவறுவதே இல்லை. ஸாது ஔகுஸ்தீனன் என்னும் கிறிஸ்தவ ஆசிரியன் தான் எழுதிய 'நெஞ்சறிவுறுத்தல்' என்னும் பெயர் பெற்ற நூலில் அந்நியமதச்சார்பினர் எழுதியவற்றுள் இவனது காவ்யமொன்றையே பிரமாணமாக எடுத்தாண்டுள்ளான். இதுவே வர்கிலியனது பெருமையை விளக்குதற்குப் போதியசான்றாகவுள்ளது.

—(*)—

ஆலோசன அவலோகனம்

ஐரோப்பிய சங்கத்தில் விருந்து

வங்காளத்தில் புதிய ஆக்கினையை நடவடிக்கைக்குக் கொணர்ந்து அநேக இந்தியரைச் சிறைசெய்துவைத்த பிறகு, வித்தன் பிரபு அவர்களைச் சிறைசெய்ததும், விசாரணை செய்யாமலே சிறையில் நிறுத்திவைப்பதும் பரம நியாயமே என்று பல அவைக் களங்களினின்று பேசியுள்ளார். இப்பொழுது ராஜப்பிரதிநிதி கல்கத்தாவிற்கு வந்து அதே பாட்டைப் பாடிவிட்டார். கல்கத்தா நகரசபை அவருக்கு நல்வரவு கூற மறுத்துவிட்டது. ஆனால் ஐரோப்பிய சங்கம் அவருக்கு ஓர் விருந்து வைத்து அவருடைய அபிப்பிராயங்களைப் பகிரங்கமாகக் கல்கத்தாவில் உரைக்க ஓர் இடம் தந்தது. விருந்து மண்டபத்தை ராஜீய பிரசங்க மேடையாக ஆக்குவது சிலவருஷங்களாக மேனாட்டு ராஜ தந்திரிகளின் வழக்கமாக இருக்கிறது. வயிறும் நிரம்பி, மதுவும் உள்ளே போய்ச் சேரும்போது நாக்கைக் கட்டிவைத்திருக்கும் கயிறு இயற்கையாக அவிழ்த்து கொடுத்துக்கொள்ளுகிறது. மனது விருந்திடுவோர் பக்கம் மலர்ந்து கொடுக்கிறது, தன்னைத்தான் வியந்துகொள்கிறது. பயன்—விருந்திடுவோர் ஆமோதிக்கக் கூடிய, பரஸ்பர ஸ்துத்தியம் நிரம்பிய கட்டுரைகள், நமது ராஜப்பிரதிநிதிக்கு ஐரோப்பிய சங்கம் கொடுத்த விருந்திலும் ஏறத்தாழ இதே நிகழ்ச்சிகள் சம்பவித்தன. ஆகவே ஐரோப்பிய சங்கத்தார் முன்னே ராஜப்பிரதிநிதி ஐரோப்பிய உத்தியோகஸ்தரின் புகழைப்பாடிக்கொண்டே தமது நீண்ட பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

ஐரோப்பிய உத்தியோகஸ்தர்

இந்திய அரசாங்கத்தின் ஐரோப்பிய உத்தியோகஸ்தரைப் புகழுவது கவர்னர்களாலும் ராஜப்பிரதிநிதிகளாலும், இந்திய மந்திரிகளாலும், இங்கிலீஷ் மந்திரிகளாலும் ஒரு இன்றியமையாத ஆலய வழிபாடாகக் கருதப்படுகிறது போலும். இவர்களுடைய சேவைக்கும், திறமைக்கும் தியாகத்திற்கும் எவ்வளவு பெரிய அடைமொழிகள் போட்டாலும், அவர்களுக்குக் குறைவாகத் தோற்றுகிறது. இவர்களைப் போன்ற தீரர் ஒருவரும் கிடையாது என்பார்கள். சொந்த நாட்டை விட்டுவிட்டு இந்த உஷ்ணப் பிரதேசத்தில் வந்து இவர்கள் தங்கள் கடமைகளைச் செய்து முடித்து இந்த நாட்டைச் சீர்படுத்தியிருக்கிற பான்மையை யாரால் புனைந்துரைக்க முடியும் என்பார்கள். அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் பிரம்மதேவன் ஹிந்துஸ்தானத்தைச் சீர்படுத்தி அமைப்பதற்காகவே இந்த வெள்ளை உத்தியோகஸ்தரைப் பிரத்தியேகமாகச் சிருஷ்டித்து வைத்தான் என்றும், அவர்கள் தோன்றிய பிறகு கடவுளே தனது கண்காணிப்பு இனி அனாவசியம் என நினைத்து; பாரத தேசத்தின் க்ஷேமத்தை அவர்கள் வசம் ஒப்பிவித்துவிட்டு வேறு ஜோலியாய்ப் போய்விட்டான் என்றும் தோன்றும். ராஜப்பிரதிநிதி பிரஸ்தாப பிரசங்கத்தில் அவர்களுடைய மெய்க்கீர்த்தியை விஸ்தாரமாகப் பாடுகிறார். இங்கிலாந்து இந்தியாவுக்கென அளித்திருக்கும் சீர்திருத்தங்கள் நிலை பெறுவதற்காக ஒருவர் கூட பாக்கியின்றி அவ் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் அனைவரும் பரம விசுவாசத்தோடு உழைத்து வந்திருக்கிறார்கள் என்று கூறுகிறார். சீர்திருத்தங்கள் பொறிக்கப்படாத முட்டையாக இருந்த காலத்தில் அச் சீர்திருத்தங்களை கருவிலேயே அழிக்க இவர்கள் என்ன பாடுபட்டார்கள் என்பதைச் சிறிது ஞாபகமுள்ளவர்களும் அறிவார்கள். பாரதஜாதியின் தலைவர் அனைவரும் ஒரு குரலாகப் பயனற்றது, பயனற்றது என்று கூவித் திரஸ்கரித்திருக்கும் இந்தச் சீர்திருத்தங்களை இவர்கள் எவ்வளவு பிரேமையோடு பாதுகாத்தால்தான் நமக்கென்ன? ஆனால் இவைகளைக்கூட இவர்கள் மாற்றாந்தாயின் அன்போடு தான் பார்த்துவருகிறார்கள் என்பது வெளிப்படையன்றோ? மந்திரிகளுக்கு உண்மையான சுதந்திரம் ஒன்றுகூட இவர்கள் கொடுப்பதில்லை. மந்திரிகள் இவர்களுக்கு லக்ஷியமாக இருந்தால் தானே? ஹரி கிருஷ்ணலால் முதற்கொண்டு இந்தச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக இந்த ஐரோப்பிய உத்தியோகஸ்தர் நடந்துகொண்ட மாதிரியைக் கண்டித்திருக்கும்போது ராஜப்பிரதிநிதியார் நம்புவார்கள் என்று இவ் வார்த்தைகளைச் சொல்லுகிறாரோ தெரியவில்லை.

ஐரோப்பியர் அனாவசியமில்லை

ஆனால் ஐரோப்பியர் இந் நாட்டின் அபிவிருத்திக்கு அனாவசியம் என்று நாம் சொல்லுகிறோமில்லை. இது மாத்திரமில்லை. அவர்களுடைய உதவி இன்றியமையாததாக இருக்கிறது என்றும் கூறுகிறோம். ஐரோப்பியருடைய உதவி இன்றைக்கு இன்றியமையாததாக இருக்கிறது என்று நாம் கூறுவதே இந்த அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சிமுறை மிகவும் கேடு தருவதாக இருந்திருக்கிறது என்பதைக்காட்டும். ஐரோப்பியர் உதவியை நாம் எவ்விஷயத்திற்காக வேண்டுகிறோம்? யந்திரகலைகளையும் ரஸாயன சாஸ்திரத்தையும், பௌதிக சாஸ்திரத்தையும் நமக்குக் கற்பிக்கவும், யந்திரசிற்பவேலைகளை நடத்தவும் அவர்கள் இந் நாட்டுக்கு இன்றியமையாதவர்களாக இருக்கிறார்கள். நம்மிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு, வாங்கிக்கொள்ளும் சம்பளத்துக்கு உண்மையாக உழைத்து, நம் மாணவர்க்கும் தொழிலாளிகளுக்கும் இவர்கள் இச்சாஸ்திரங்களைக் கற்பிப்பார்களானால் ஹிந்துஸ்தானம் அவர்களை இரண்டு கைகளாலும் வரவேற்கும். அவர்களுக்குவேண்டிய சௌகரியங்களனைத்தையும், செய்துதரும். அவர்கள் கொடுக்கும் கல்விக்கும், செய்யும் வேலைக்கும் முக்காலும் நன்றியுள்ளதாக இருக்கும். ஆனால் ராஜ்ஜிய நிர்வாகத்தின் கடிவாளத்தையெல்லாம் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாக இருந்துகொண்டு, அக் கடிவாளத்தை நாம் கைப் பற்றச் செய்யும் முயற்சிகளை அழித்துக் கொண்டே இருக்கிற இந்த உத்தியோகஸ்தர் குழாத்தை இந்தியர் விரும்புவார்கள் என்றாவது, அவர்கள் செய்திருக்கும் வேலைகளுக்கு இந்தியர் நன்றி காட்டுவார்கள் என்றாவது யாரேனும் நினைத்தால் அது கேவலம் மனப்பால் குடிப்பதேயாகும். ஆனால் ஐரோப்பியர் இவ் விஷயத்தில் மனப்பால்

குடிப்பதைக்கூட விட்டுவிட்டார்கள். சம்பிரதாயத்துக்காக மாத்திரம்தான் இந்திய ஜாதியில் பெருங் கூட்டம் இந்த அரசாங்க முறையை ஆதரிக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவ்வாறு அவர்கள் சொல்லுகிற சொல்லிலே ஒட்டை சத்தம் கேட்கிறது. அவர்களே கூட அவ் வார்த்தைகளைப் பூரணமாக நம்புகிறார்களோ என்பது எமக்குச் சந்தேகமாக இருக்கிறது. லீ யாதாஸ்தின் மேல் ஆங்கில அரசாங்கம் செய்திருக்கிற உத்தரவின் பிரகாரம் ஐரோப்பிய உத்தியோகஸ்தருக்கு 'நியாயமான' சம்பள உயர்வுகள் கிடைத்துப் போய்விட்டமையால், ஆங்கில சர்வகலாசாலைகளினின்று ஆங்கில வாலிபர் இந்தியாவின் ஊழியத்துக்காக மேல் வந்து விழுவார்கள் என்று ராஜப்பிரதிநிதி ஐரோப்பிய சங்கத்தாருக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவிக்கிறார். இத் தகைய 'ஊழியக்காரர்' கையினின்று எம்மைக் காக்கவேண்டும் என்று இந்தியர் ஒரே கூக்குரலாய்க் கத்துவது எம் காதைத் தொளைக்கிறது.

வங்காளத்து நிலைமை

எதிர்பார்க்கக்கூடியது போல, ராஜப்பிரதிநிதியானவர் தமது பிரசங்கத்தின் பாகத்தை வங்காளத்தில் லித்தன் பிரபு காட்டியுள்ள பராக்கிரமங்களைத் தாங்குவதற்கென எடுத்து வைத்தார். லித்தன் பிரபு பிரதிநிதி ஸ்தாபனங்களை வளர்ப்பதே தன் காரியமாகக் கொண்டவர் என்று ரெதிங் பிரபு சொல்லுகிறார். சாட்டும் குற்றங்கள் இன்னவை என்று தெரிவியாமல் பிரதிநிதிகளைச் சிறை செய்வதும், சட்ட சபைகளில் தமக்கு வேண்டிய வெகு ஜனம் இருக்கும்படி செய்ய முயலுவதும், தான் குறிப்பிடும் நியாயமில்லாத மசோதாக்களைச் சட்டமாக்கினால் பிடித்து வைத்திருப்பவர்களை விட்டு விடுவதைப் பற்றி யோசிப்பேன் என்று பேசுவதும் பிரதிநிதி சபைகளின் செல்வாக்கை வளர்க்கும் வழிகள்போலும். இதை விட்டுவிட்டு, புதிய ஆக்கினையைப்பற்றி ராஜப்பிரதிநிதி ஏதாவது ஓர் புதிய வார்த்தை சொல்லியிருக்கிறாரோ என்று பார்த்தால் ஒன்றுகூடக் காணப்படவில்லை. வங்காளத்தில் ராஜ்ஜியப் புரட்சிக்காரக் கூட்டம் ஒன்று இருக்கிறதாகப் பிரதிநிதி கூறுகிறார். தேசபந்து அதை மறுக்கவில்லை. இது மாத்திரமில்லை, தேசபந்துவேதான் முதன் முதலில் அத்தகைய குழு ஒன்று இருக்கிறது என்று பகிரங்கமாக, வேறொரு உட்கருத்துமின்றி, சொன்னார். ஆனால் இந்தக் குழுவின் நியாயமற்ற முயற்சிகளை அடியோடு போக்கிவிட வழி என்ன என்கிற விஷயத்தில்தான் தேசத்துத் தலைவருக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் பரஸ்பரம் முற்றிலும் விரோதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இப்பொழுது பிரகடித்திருக்கிற ஆக்கினைகளையும் அவற்றின்படி கொடுத்திருக்கும் சிறை வாசங்களையும் தவிர வேறு மார்க்கங்களில்லை என்பது ராஜப்பிரதிநிதியின் அபிப்பிராயம். இருபது வருஷத்து அனுபோகத்துக்குப்பிறகும் இந்திய அரசாங்கத்தின் மனநிலை இவ்வாறே இருக்கிறதானது, எத்தனை தடவை யோசித்துப் பார்த்தாலும், நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. புரட்சிக் காரரைத் தண்டித்தவண்ணமாகவே இருந்தும் இன்னும் புரட்சி எண்ணங்கள் அவிந்த பாடில்லை. தண்டனையினாலும், பலாத்காரத்தினாலும், தலைவர்களைச் சிறை செய்ததாலும் எந்த நாட்டில், எந்தப் புரட்சி அடங்கிற்று? உலாந்தா பெல்ஜியங்களின் புரட்சியை ஸ்பெயினால் அடக்க முடிந்ததா? அமெரிக்கரின் புரட்சி எண்ணங்களை இங்கிலாந்தின் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் பந்தி காணுக்களும் அழிக்க முடிந்ததா? பிரெஞ்சு ஜனங்களின் கொந்தளிப்பைப்பூர்ப்போனியருடைய பாஸ்தீய*

* சீர்திருத்தம் விரும்பியவர்களையும் புரட்சிக்காரரையும் அரச விரோதிகளைச் சிறை வைக்கும் இடமாகிய Bastille கோட்டை

கோட்டை தணிக்க முடியவில்லை. ஜெர்மனியின் கிளர்ச்சி, அசகாய சூரனான நப்போலியனுடைய வீரத்தையும் உடைத்துவிட்டது. ஒற்றரை ஆண்டவர்களில் ருஷிய ஜார்களை விடத் தேர்ந்தவர் யாவர்? ஆனால் ஜார்கள் இருந்த கிரெம்லின் கோட்டையில் இன்றைக்குத் துரோத்ஸ்கி தூங்குகிறான். இதெல்லாம் ரெதிங் பிரபுவுக்குத் தெரிந்திருந்தும் அவர் இன்னமும் தன் ஆக்கினைகளில் நம்பிக்கை வைத்து இந்திய புரட்சிக் கட்சியை அழித்து விடலாமென்று நம்புவதை என்ன என்று கூறலாம்?

புரட்சி எண்ணங்களை வேரறுக்கும் வழி

புரட்சி எண்ணங்களை அடியோடு அகற்றிவிட ஒரே ஒரு வழிதான் உலகத்தில் உண்டு. அது இங்கிலீஷ் சரித்திரத்திலேயும் செதுக்கப் பட்டிருப்பதால் ரெதிங் பிரபு அதை அறியாதிருக்க முடியாது. விரும்பிய பிரதிநிதி ஸ்தாபனங்களை அமைக்கமாட்டேன் என்று பிடிவாதமாக இருந்த காரணம் பற்றி, புதிய இங்கிலாந்து மகாணங்கள் என்கிற குடியேற்று நாட்டு ஜனங்கள் இங்கிலாந்துக்கு விரோதமாகக் கிளம்பிப் போர் செய்து இங்கிலீஷ் சைனியங்களைப் பல பல போர்க்களங்களில் முறியடித்து, ஐக்கிய நாடுகள் என்ற பேரால் தற்பொழுது வழங்குகிற குடியரசை ஸ்தாபித்துவிட்டார்கள். நப்போலியனையும் இந்தியரையும் வென்ற சூழ்ச்சியும் வீரமும் சுதந்திரப் போர் புரிய முன் வந்த முப்பது லக்ஷ ஜனங்களுக்கு முன் செல்லவில்லை. கடைசியில் அக் குடியேற்று நாட்டு ஜனங்களைத் தனி அரசாங்கமாக ஒப்புக்கொண்டு சமாதானமாவதைத் தவிர இங்கிலாந்துக்கு வேறு வழியில்லாமற் போய்விட்டது. ஆனால் அது முதல் இங்கிலாந்து ஒரு பாடமும் கற்றுக்கொண்டு விட்டது: தன்னுடைய இதர குடியேற்று நாடுகளில் ஜனங்கள் ராஜீய உரிமைகளைச் சற்று உரத்த குரலில் கேட்கத் துவக்கினதும் அவர்கள் கேட்கும் உரிமைகளை அவர்களுக்கு உடனே கொடுத்துவிடவேண்டும் என்று இங்கிலாந்து தீர்மானம் செய்துகொண்டு விட்டது. அவ்வாறே கானதா ஆஸ்திரேலியா முதலிய நாட்டு ஜனங்கள் ஆங்கிலேயரின் நேரான அரசாட்சி தங்களுக்கு வேண்டியதில்லையென்றும், தங்களுடைய நிர்வாகத்தைத் தாங்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தங்கள் நாட்டுக் காரியங்களில் ஆங்கில அரசாங்கம் பிரவேசிக்கவேகூடாது என்றும் கிளர்ச்சி செய்தபோது, கசப்பாக இருந்தாலும் அதை அப்படியே விழுங்கிக்கொண்டு ஆங்கில அரசாங்கம் அந் நாட்டாருக்குச் சுயராஜ்ஜியம் கொடுத்துவிட்டது. வைரக் கனிகளையும் தங்கக் கனிகளையும் ஆக்கிரமிக்கிறதற்காகப் போர் தொடங்கி, இரண்டு லக்ஷம் ஆட்களைப் பலிகொடுத்து, இரண்டு கோடி பவுனும் நஷ்டப்பட்டு தென் ஆப்பிரிக போயர் ஜனங்களை வென்று அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டும், கைப்பற்றிக்கொண்ட நாலைந்து வருஷங்களுக்குள் அந் நாட்டின் நிர்வாகத்தை அங்கே வசிக்கும் ஜனங்களிடமே ஆங்கிலேயர் ஒப்பிவித்துவிடச் சம்மதித்ததற்கும் அதே மனநிலைதான் காரணம். அதுதான் எந் நாட்டினின்றும் புரட்சி எண்ணங்களை ஓட்டிவிடும் மார்க்கம்.

இந்தியரும் மனிதர்தாமே

ஆனால், ரெதிங் பிரபு சொல்லுகிறார், "வெருவந்த செயல்கள் செய்துவரும் பயானகர்களுடைய (கொடியவர்களுடைய) கருத்து முற்றிலும் வேறாக இருக்கிறது என்பதை அவர்களே மறைந்து வைக்கவில்லை. அவர்களுடைய உத்தேசம் வன்செயல்களாலும் கொலைகளினாலும் அராஜகத்தினாலும் ஜன சமூகத்தையும் அரசாங்கத்தையும் தகர்த்து நாட்டில் பிரளயத்தை உண்டாக்கிவிடவேண்டும் என்பதே. இந்தக்

கொடிய நோயை ராஜீய ஔஷதம் எதனுலும் தீர்த்து விடலாம் என நினைப்பது பைத்தியமே." நமது பிரபுவின் உவமையையே எடுத்துக் கொண்டு யோசிக்கலாம்.

நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்,

என்பர் திருவள்ளுவனர். நோய் விஷயத்திலேயே தவருன அறிவு ஏற்பட்டுவிட்டால் மருத்துவன் எவ்வாறு வாய்ப்பச் செய்ய முடியும்? பயானகர்கள் என்றும் புரட்சிக்காரர்கள் என்றும் குரோதத்தோடும் அவமதிப்போடும் கூறித் தள்ளிவிடப்பட்டவர்களின் மனநிலையை நாமும் சற்று அறிந்திருக்கிறோம். வங்காளத்தில் ராஜீய உணர்ச்சி நிரம்பியவங்காளிகளின் தொகுதியான வங்காள மாகாண மகாநாடுகளும் கோபிநாதசாஹா செய்த கொலையைப்பற்றிச் செய்த தீர்மானத்தின் உட்பொருளையும் ராஜப்பிரதிநிதி நடுநிலைமையினின்று ஆராயவில்லை போலும். தேசத்தினிடம் அன்பு நிறைந்தவர்கள், கொலை, களவு அராஜகம் முதலிய கொடுமைகள் வளர்ந்தால் முதல் நஷ்டப்படவேண்டியவர்கள், அறிவிலிகள் என்று தள்ளிவிடமுடியாதவர்கள் ஆகிய இவர்கள், இக் கொடுஞ் செயல்களை நிச்சந்தேகமாக ஓர் பக்கம் கண்டித்துக்கொண்டு இன்னோர் புறம் அவைகளைச் செய்பவர்களைத் தேசபக்தர்கள் என்று ஸ்தோத்திரம் செய்கிருர்கள். இதாவது ராஜப்பிரதிநிதியின் கண்ணைத் திறந்து வைத்திருக்கவேண்டும். அது திறந்து வையாதது ஆச்சரியத்தையே தருகிறது. இவர்களைக் கலகத்தையே நாடுகிறவர்கள் என்றும், ஜனசமூகத்தையே அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர் என்றும் சொல்லுவது அறியாமையாகும். அவர்களுடைய உத்தேசம் சுதந்திரம்— சுயமரியாதையுள்ள ராஜீய வாழ்க்கை. ஜனசமூகத்தைப் பிடித்துள்ள அடிமை நோயை நீக்கவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். இத்தகைய நல்ல நோக்கத்தைக் கொலை முதலிய தீச்செயல்களால் நிறைவேற்றலாகும் என்று அவர்கள் நினைக்கும் நினைவுதான் தவறு— அறிவாளிகளாலும் தேசப் பிரியர்களாலும் தர்மப் பிரியர்களாலும் கண்டிக்கத்தக்கது. ஆகவே இவர்களுடைய பயானகமான செயல்களின் உள் மர்மத்தை உணரவேண்டியதே தற்பொழுது இந்திய அரசாங்கத்தை நடத்துவோரின் முதற் கடமை. அவ்வாறு அறிந்தார்களானல் எந்த ராஜீய ஔஷதமுந் இந்த நோயைத் தீர்க்காது என்று சொல்லிக்கொண்டிருக்க மாட்டார்கள். படிப்படியாக, பக்குவம் அறிந்து, பிரித்தானிய பார்லிமெந்தின் இச்சைப்படி சீர்திருத்தங்கள் விரிவாக்கப்படும் என்கிற ஆஷாடபூதி வார்த்தைகளெல்லாம் போய்விடவேண்டும். கானடாவில் எந்த முறை கலக்கங்களையும் குழப்பங்களையும் அடக்கினவோ, ஆஸ்திரேலியாவில் எந்த முறை ஜனங்களைத் திருப்தி செய்து இங்கிலாந்தினிடம் நட்பை மீண்டும் உண்டாக்கியதோ, தென் ஆபிரிக்காவில் எந்த முறை ஆக்ரோஷத்தோடு போர் செய்த இரண்டு ஜாதியினரை ஒன்றுபடுத்த முயலுகிறதோ, அந்த முறையை இந்த நாட்டிலும் கையாண்டாலொழியச் சமாதானம் இந்நாட்டில் நிலவுதல் அரிது. வெள்ளைத் தோலுள்ள குடியேற்ற நாட்டார்தாம் சுதந்திரம் பெற உரியவர்கள், மற்ற நாட்டினர் அடக்குமுறைச் சவுக்குப் பெறவேண்டியவர்களே என்ற நினைவை ஆங்கிலேயர் எத்துணை சீக்கிரம் தம் அறிவை விட்டு அகற்றுகிறார்களோ அத்துணைக்கு அவர்களுக்கு நன்மை உண்டாகும். இந்தியரும் மனிதரே. அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சி கொழுந்து விட்டெரியத் தவங்கிவிட்டது. சக்கரையான வார்த்தைகளால், ஆடம்பரமான தீர்மானங்களால், அரச குடும்பத்தினரைப் பொம்மைகாட்டுவது போலக் கொண்டுவந்து காட்டுவதால், அரச குடும்பத்திற் சேர்ந்த ஒருவரை ராஜப்பிரதிநிதி

யாக நியமித்துக் காட்டுவதால் இந்தியரின் கண்ணைத் துடைத்து ஏமாற்றும் நாள் என்ருவது இருந்திருந்தாலும் அந்த நாள் இனித் திரும்பாது. அமெரிக்கப் புரட்சியிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் வெள்ளை நிறத்தவர் சம்பந்தப்பட்ட மட்டில்தான் என்றும், பழுப்பு நிறத்தவரை அடக்கி யாண்டுவிடலாம் என்றும் இதுவரையில் நினைத்துவரும் நினைவை ஆங்கிலேயர் இனியேனும் மாற்றிக்கொண்டு இந்தியாவின் பூர்ணதிகாரத்தை இந்தியரிடமே ஒப்பிவித்துவிட, அதி வேகமாக முயலக்கடவர். அப்பொழுதுதான் இந்த நாட்டில் சமாதானமும் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் நட்பும் பரஸ்பர விசுவாசமும் பிறக்கும்.

கோஹத் அக்கிரமமும் அரசாங்கத்தார் பொறுப்பும்?

சென்ற ஆவணி மீ வடமேற்கு எல்லைப் புறத்திற்கருகேயுள்ள கோஹத் என்னும் இடத்தில் முகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் நிகழ்ந்த சச்சரவுகளைக் குறித்து நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அதுகாலை, அச்சச்சரவுகளின் காரணமாய் ஆங்குள்ள ஹிந்து ஜனங்கள் சகலரும் —கரு00 பேர்கள்— அவ்வூரையே விட்டு நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ராவல்பிண்டி என்னும் ஸ்தலத்தில் அடைக்கலம் தேடி ஓடும்படி நேர்ந்தது என்பதையும் நினைவு மூட்ட வேண்டியதில்லை. பின்னர் மகாத்மாஜீ தமது உபவாஸம் தீர்ந்தவுடன் இத்தகைய விபத்து ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு நேர்ந்ததைக் குறித்துத் தாமே நேரில் சென்று இருசமூகத்தினருக்கும் உள்ள மனக் கசப்புகளைப் பற்றி விசாரணை செய்து, முடிவு செய்து சமரஸம் ஏற்படுத்தக்கூடிய மார்க்கங்களைத் தேடி அவர்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் போக வேண்டுமென்று புறப்பட ஏற்பாடு செய்தபொழுது, ரெதிங் பிரபு, மகாத்மாஜீ செல்வதால் தீமைதான் விளைபுமேயல்லாது நன்மையொன்றும் உண்டாகப் போவதில்லை என்று முட்டுக்கட்டை போட்டு விட்டனர். அவ்விதம் மகாத்மாஜீயைத் தடை செய்ததைப்பற்றி கல்கத்தா "ஸ்தேத்ஸ்மன்" பத்திரிகைகூட, 'இந்திய அரசாங்கத்தாருக்கு ஒருபோதும்புத்தி வரப்போகிறதில்லை' யென்றும், 'இந்திய அதிகாரவர்க்கமே, இவ்வித சமூகச் சண்டைகளை வளர்ப்பதற்கு சாதகமாயிருந்து வருகிருர்கள்' என்ற விதமாகவும் எழுதும்படி நேர்ந்திருப்பின் ரெதிங் பிரபுவின் ராஜதந்திரத்தைப் புகழ்ந்து கூற யார் தான் உளரோ!

ரெதிங் பிரபு இவ்வாறு மகாத்மாவைத் தடுத்துவிட்டு, அரசாங்கச் சார்பாக விசாரணை செய்வதாக கேரோ என்ற ஒரு ஆங்கில உத்தியோகஸ்தரைக் கொண்டு கோஹத்தில் நடந்த துஷ்கிருத்தியங்களுக்குக் காரணமென்னவென்றும், உத்திரவாதிகள் யாவர் என்றும் கண்டறியும்படி செய்வித்தார். அன்னவர் தற்போதுதான் தமது முடிவுகளை இந்திய அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தார். பின்னவர் அவற்றை ஓர் தீர்மானவாயிலாக வெளியிட்டிருக்கின்றனர்.

கலகத்திற்கு மூலகாரணங்கள்.

ஈண்டு கோஹத்தில் நிகழ்ந்த பெருங் கொடுஞ்செயல்களின் மூல காரணங்களைப் பற்றியவளவில் ஓரிரண்டு வார்த்தைகள் கூறுதல் பொருத்தமாகுமென நினைக்கிறோம். ஹிந்து ஸ்திரீகள் ஸ்நானஞ் செய்யக்கூடிய ஒரு குளத்திற் கருகில் சில முஸ்லீம் வீடுகள் இருந்ததாகவும் அவற்றைக் குறித்து வெகு நாட்களாக இரு சமூகத்தினருக்கும் மனஸ்தாபங்கள் இருந்து வந்தன வென்றும் விளங்குகிறது. ஆகவே இவ் விஷயத்தைப் பஞ்சாயத்து மூலம் தீர்த்து ஏதாவது ஓர் வகை முடிவிற்கு வரலாமென்று தலைவர்கள் ஒருவாறு சிந்தித்துக்கொண்டிருக்கையிலேயே, ஒரு

முஸ்லீம் பத்திரிகையில் விஷமமாக ஹிந்துக்களை இழித்து எழுதியிருந்ததாகவும், இதற்கு அவ்வூர் சனாதன தர்ம சபையின் காரியதரிசியாகிய ஜீவன் தாஸ் என்பவர் முகம்மதியர்களை அவதூறு செய்து வசை மொழிகளால் தூற்றி ஓர் துண்டுப் பிரசுரம் வழங்கி அவர்களுடைய க்ஷாத்திரத்தைக் கிளப்பி விட்டதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு ஒருவருக்கொருவர் தூற்றிக்கொண்டு மனஸ்தாபங்களை அதிகரித்துக்கொண்டதன்மேல், முகம்மதியர் ஒருவர் தலைமையில் கூடிய பொதுக்கூட்டம் ஒன்றில் குளக்கரை ஸ்நான கட்டத்தைக் குறித்து ஹிந்துக்கள் பக்கமே சாதகமாகத் தீர்மானம் செய்யப் படவே, முகம்மதியர்களின் குரோதம் தங்களது மதத்திற்கு ஜீவன்தாஸின் துண்டுப் பிரசுரம் அவமானம் விளைவித்துவிட்டதாகக் கருதினர். ஹிந்துக்களோ முகமதியர்கள் முதலில் பத்திரிகை மூலம் செய்த தூஷணைகளுக்கு ஜீவன்தாஸ் தக்க பதில் அளித்ததாகக் குதூகலித்தனர்.

இங்ஙனம் விஷமம் இரண்டு சமூகத்தினிடமும் பரவவே, ஜீவன்தாஸின்மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென கோஹத் உதவி கமிஷனரையும், போலீஸ் உயர்தர அதிகாரியையும் கண்டு முகம்மதியர்கள் வற்புறுத்தினர். ஆமத்கான் என்னும் நியாயாசிபதி ஜீவன்தாஸ்மீது நடவடிக்கைகள் தொடங்கி, அவரைச் சிறையிட்டு வைத்திருந்து பதினாயிரம் ரூபாய் பெறுமான ஜாமீன்கள் வாங்கிக் கொண்டு விடுதலை செய்ததோடு, ஜீவன் தாஸின் துண்டுப் பிரசுரங்களையெல்லாம் மிகச் சிரத்தையுடன் தீ மூட்டினார். ஜீவன்தாஸை மேல் அதிகாரிகள் விடுதலை செய்தது முகம்மதியர்களுக்குக் கோபம் ஏற்றிற்று. பிரசுரங்களை அக்கினிக் கிரையாக்கியது முகம்மதியர்களுக்கு உற்சாகத்தையும் ஆவேசத்தையும் அதிகமாக வளர்த்தது. ஹிந்துக்களும் தங்கள் பிரசுரங்களுக்கு—அதில் ஸ்ரீகிருஷ்ண படம் அச்சிடப்பட்டிருந்ததாம்—அநியாயமாய் நேர்ந்த மானபங்கத்தைக் கண்டு ஆத்திரப்பட்டனர். இந்திய அரசாங்கத்தாரால் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கேரோ துரைகூட, துண்டுப் பிரசுரங்களை எரித்தது தவறெனக் கண்டித்திருக்கிறது குறிப்பிடத் தக்கது.

இச் சம்பவங்களினால் பகைக்குணம் எழுந்தோங்கவே, முகம்மதியர்கள் தங்கள் மசூதிகளில் கூடி, தங்களுடைய பெண்டு பிள்ளைகளை விட்டு நீங்க நேரிடினும், சிறை வாசமும், உயிருக்கே ஹானியும் நிகழ்ந்தாலும், இவ் விஷயத்தைப் பற்றி ஏதேனும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென சபதஞ் செய்தனர். ராஜீய விஷயங்களில் மிக மிகச் சாதாரணமாய் ஏற்படுகிற அற்ப விஷயங்களையெல்லாம் பெரிதெனக் கருதித் தங்களுடைய இரகசியப் போலீஸார் மூலம் தாக்கல் செய்து கொள்ளும் அரசாங்கத்துக்கு இவ்விதம் முஸ்லீம்கள் செய்துகொண்ட சபதத்தைப்பற்றி எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமே தோன்றவில்லை போலும். இவ்வளவிற்கும் ஓர் தலைமைப் போலீஸ் சேவகன் இந்த சந்தர்ப்பத்தைத் தெரிவித்தாலும் அதிகாரிகள் தடுக்க முயலவில்லை.

போலீஸாரும் அரசாங்கத்தாரும் கண்மூடித்தனமாய் தங்கள் வேலையைச் சரிவர முன் ஜாக்கிரதையும் கவலையும் கொண்டு செய்யாமல் இருக்கவே, ௩௫௦௦ முகமதியர்கள் அடங்கிய கலகக்காரக் கூட்ட மொன்று கோபாவேசம் பொங்கி கோஹத் கமிஷனரைக் கண்டு ஜீவன்தாஸை விடுதலை செய்ததைப் பற்றிய அபிப்ராயத்தை எடுத்துரைக்கத் திரண்டு சென்றது. அதிகாரிகளுக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. ஆமத்கான் மறுபடியும் விஜாரித்து ஜீவன்தாஸின் மேலுள்ள குற்றத்தைப்பற்றி நியாயமான நடவடிக்கைகள் எடுத்துத் தண்டனை வழங்குவதாகக் கூறியதின் மேல் கூட்டம் குதூகலத்துடன் திரும்பியது.

இதன் மேல் ஏற்பட்ட சம்பவங்களின் உண்மையான பூர்வம் அறிவது கடினமாயிருக்கிறது. இது வரையில் கடுஞ் செயல்கள் ஒரு திறத்தினரும் புரிய வில்லை. அதிக்கிரமங்கள் செய்யக் கிளம்ப வில்லை; கொலை களவுகள் ஏற்பட வில்லை. ஆனால் இதன் பிறகுதான் மேற் கூறிய சகல அநியாயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு வித்து ஊன்றியவர்கள் எவரென நாம் விஜாரிக்க வேண்டியதில்லை. வித்து ஊன்றியாய் விட்டதென்பதை சர்க்கார் அறிந்திருந்தனர். அதற்குத் தக்க ஜாக்கிரதைகள் அவர்கள் செய்து கொள்ளவில்லையென்பதையே ஈண்டு வற்புறுத்துவதோடு அவ்விதம் அவர்கள் பாராட்டிய அசிரத்தையினால் பொதுவாய் சகல ஜனங்களுக்கு சிறப்பாய் கோஹத் ஹிந்து ஜனங்களுக்கும் ஏற்பட்ட விபத்தை விஸ்தரித்து எழுதுவது எம் கடமையாகும். சிலர் முகம்மதியர்கள் உதவி கமிஷனரிடமிருந்து குதூகலித்துத் திரும்பியவாறே ஊருக்குள் நுழைந்து கொள்ளையடித்தனர் என்றும், வேறு சிலர் வீடுகளின் மேலிருந்து ஹிந்துக்கள் முகம்மதியர் மீது சுட்டனர் என்றும் கூறுகிறார்கள். இப்பொழுதுதான் ஏற்கெனவே ஊன்றிய வித்து முளைக் கிளம்பியது. இதை சர்க்கார் தங்களுடைய ராணுவ உதவியாலும் போலீஸ் சகாயத்தாலும் வளர வொட்டாமல் முளையிலேயே களைந்திருக்கக் கூடும். ஆனாலோ, என் அவர்கள் செய்ய வில்லை என்று யார் கேட்பது?

இந்துக்களின் துயர்

முடிவில் இக்கொடூர சம்பவங்களினால் ஏற்பட்டது என்னவென்றால் ஹிந்துக்களுடைய உயிர்களுக்கே ஹானி நேர்ந்து விடுமென அரசாங்கத்தார் பயந்து ஹிந்துக்கள் மாண்டவர்கள்போக மிகுந்த ௩௫௦௦ பேர்களடங்கிய அனைவரையும் தனிப் புகைவண்டியிலேற்றி நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ராவல்பிண்டிக்கு அனுப்பிவிட்டனர். அதுதான் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் சச்சரவுகள் நேராமல் காப்பதின் பொருட்டே பெரிய ராணுவத்தையும், போலீஸ் படையையும் தாங்கள் வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்திய அரசாங்கத்தார் தம் குடிகளைப் பாதுகாக்கும் முறை போலும்! கலகம் ஏற்படாமலே தடுத்திராமல், இவ்வித சமூக உணர்ச்சிகள் வளர்ந்து பலப்படுகிற வரையில் தாங்களறிந்திருந்தும் சும்மாயிருந்து விட்டு, பின்னர் ஒரு சமூகத்தினரை ஊரை விட்டே தங்கள் வீடு வாசல்கள் சொத்துக்களை போட்டவை போட்டவாறே விட்டுவிட்டு ஓடும்படி செய்தல்தான் முறையோ!

ஹிந்துக்களின் நிலைமை

இப்பொழுது ஹிந்துக்களின் நிலைமைதான் பரிதபிக்கத் தக்கதாயிருக்கின்றதென்பதை முஸ்லீம் தலைவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஹிந்துக்களே முதலில் வீடுகள் மேலிருந்து சுட்டார்களென்று வைத்துக்கொள்வோம். நாம் சுட்டார்களென்பதை ஒப்புக் கொள்வதாக ஒருவரும் நினைக்கக் கூடாது. அப்படி வைத்துக் கொண்டாலும் அதற்கு இதுதானா அவர்களுக்கு நேர வேண்டிய விதி! தங்களுடைய ஊருக்கும் வீடுவாசல்களுக்கும் திரும்பி வரக்கூட அவருக்கு தைரியம் வரும்படி இந்த அரசாங்கம் செய்ய முடியவில்லையே! தங்கள் ஊரில் கோடீசுரனாய்ச் சிறப்பாய், மாடமாளிகையில் வாழ்ந்து வந்தவர்களெல்லாம் குடிக்கக் கஞ்சியின்றி உடுத்தக் கந்தையின்றி ராவல்பிண்டித் தெருக்களில் சீரழியவா வேண்டும்? ௩௫௦௦ ஹிந்துக்

கள் தாங்கள் பாரம்பரையாய், பூர்வீகமாயிருந்து வந்த இடத்தை விட்டு முன்பின் அறியாத ஓரிடத்தில் சென்று அனாதைகளாய் தீவாந்திர சிட்சை விதிக்கப் பெற்றவர்கள்போல் தவிக்க விடுதல் தர்மமாகுமா?

சுருங்க உரைக்கின், கோஹத்கலகங்களினால் ஏற்பட்டிருக்கும் கொடுமைகள் என்னவெனில்

௧. கலகம் உறுமிக்கொண்டிருந்ததை அதிகாரிகள் அறிந்திருந்தும், கண்மூடித்தனமாய் இருந்து, அதைத் தடுக்க ஒன்றுஞ் செய்யாமலிருந்துவிட்டனர்.

௨. ராணுவப் போலீஸை சரியான சமயத்தில் வருவித்து கலகத்தைத் தேக்கவோ, தடுக்கவோ செய்யவில்லை.

௩. கோடிக் கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பெற்றும், பாழாக்கப்பட்டும் போய், சொத்துக் குரித்தானவர்களெல்லாம் ஏழைகளாக நேர்ந்திருப்பதோடு, குழந்தைகளும் ஸ்திரீகளும் தெருவில் நின்று திகைக்கும்படி நேர்ந்திருக்கிறது.

௪. ௩௫00 ஹிந்துக்கள் அரசாங்கத்தாரால் பாதுகாக்க முடியாமல் ரயிலேற்றப்பட்டு, நூற்றுக்கணக்கான மைல்களுக் கப்பால் ராவல் பிண்டியில் தெருக்களில் அடைக்கலம் புக்குத், திண்டாடுகின்றனர்.

அடிக்கடி ஒற்றுமைக் கூட்டங்களும் மகாநாடுகளும் கூடுவதிலும் ஒன்றும் ஏற்படாது. அதிகார வர்க்கம் செய்யும் அநீதிகளைக் கண்டிப்பதற்காக நாம் கூறுவதினாலும் பயனில்லை. நம்மவர்கள் செய்யும் அக்கிரமங்களைக் கண்டித்து, ஒருவருக் கொருவர் உண்மையான அன்பும் சகோதர வாஞ்சையும் ஒற்றுமையும் வளர்ப்பதற்கான மார்க்கங்களையே தேடி நடைமுறையில் கொண்டுவருதல் எல்லாத் தலைவர்களுடைய கடமையாகும். இதற்கு ஈசன் அருள் புரிவாராக!

மிஸர (எகிப்து) பிரச்னை

எகிப்திய ஸைன்யத்தின் ஸர்தாரும் ஸூதான் நாட்டின் மகா மாத்தியனும் (கவர்னர்ஜெனரலும்) ஆன ஸர் லீஸ்தாக் என்னும் ஆங்கிலேயனைக் கைரோவில் சென்ற மாதம் ௧௯ உ சுட்டுக் கொன்று விட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் மிகவும் விசனிக்கப்படத் தக்கன. அந்நாளில் எகிப்திய மந்திரியா யிருந்தவரும் மகாதேச பக்தனுமான ஜக்லுல்பாஷா அக் கொலை மிஸாத்துக்கே (எகிப்துக்கே) கேடு விளைவிக்கக் கூடியது என்றும், அக் கொலைபுரிந்தவரைக் கண்டுபிடித்து அரசாங்கத்தினிடம் ஒப்புவித்து விடுவதுதான் தேசத்தின் மானத்தையும் தர்மத்தையும் பாதுகாத்துத்தரும் வழியென்றும் பிரகடனம் செய்தார். அரசனாகிய புவாதும் அக் கொலையினால் தனக்குப்பிறந்த துக்கத்தைப் பகிரங்கப் படுத்தியுள்ளார்.

இக் கொலை இங்கிலாந்துக்குப் பெரிய கோபத்தை உண்டாக்குவது இயற்கை. தனது பிரஜை ஒருவன் அன்னிய நாட்டாரால் கொலை செய்யப்படும்போது கோபிக்காத ஓர் அரசாங்கம் மிகவும் இழிவான அரசாங்கமாகும். ஆகையால் ஆங்கில அரசாங்கம் அக் கொலைக்காக மிஸர அரசாங்கத்தார் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும், கொலையுண்டவன் குடும்பத்திற்கு ஏற்றதொரு தண்டம் தரவேண்டுமென்றும் கொலைக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும் கேட்பது நியாயமேயாகும். ஆனால் ஆங்கில அரசாங்கம் இவ்வளவோடுநிற்கவில்லை. மிஸரத்தின்கழுத்திலேயுள்ள சுருக்கை நன்றாக நெருக்குவதற்காகவே இந்த லீஸ்தாக்கின் கொலையை இங்கிலாந்து உபயோகித்தது! இந்தக் கொலைக்காக மிஸரம் ௫ லக்ஷம் பவுன் தண்டம் கொடுக்கவேண்டுமாம். ஸூதானில் நீலநதி ஜலத்தை ஸூதானுடைய அவசியத்துக் கேற்றபடி இஷ்டப்படி அணை

கட்டித் தேக்கிக் கொள்ளுவதற்கு மிஸரம் சம்மதித்து விடவேண்டும். மிஸரத்திலுள்ள அன்னிய நாட்டாரின் காவல் விஷயமாகத்தகுந்த ஏற்பாடுகள் செய்து கொள்ள இங்கிலாந்தின் பிரதிநிதிகளுக்கு மிஸரத்தில்சர்வாதிகாரம்கொடுக்கப்பட்டு விடவேண்டுமாம். இதற்கு ஜகலூல் பாஷா லீஸ்தாக்கின் கொலை சம்பந்தமான நிபந்தனைகளைத் தான் ஒப்புக்கொள்வதாகவும் மற்ற விஷயங்களைத்தான் ஒப்புக்கொள்வது அசாத்தியம் என்றும் தெரிவித்தார். தன் நாட்டின் தன்மதிப்பைக் காக்க எண்ணும் ஒரு மந்திரி இவ்வளவுக்கு மேல் வணங்குவார் என்று எதிர்பார்க்க முடியாது.

மிஸரம் பணிந்து விட்டது

ஆனால் இங்கிலீஷ் அரசாங்கம் க்ஷத்திரியன் மாதிரி ஒரே பிடிவாதமாகத் தான் முதலில் கேட்டபடியே சம்மதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி, ஸூதானிலுள்ள மிஸரத்துருப்புகளை எகிப்துக்குத் திரும்பி வந்து விடும்படி கட்டளையிட்டுவிட்டது. அலெக்ஸாந்திரியாவிலுள்ள கடற்சுங்கச் சாவடியைப் பட்டாளங்களைக் கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. நீலநதியின் ஜலத்தை தன் இஷ்டப்படி தேக்கிக் கொள்ள ஸூதான் அதிகாரிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது என்று இங்கிலாந்தின் பிரதிநிதியான ஆலன்பி பிரபு மிஸர அரசாங்கத்துக்குத் தெரிவித்துவிட்டார். இதற்கெல்லாம் உட்படாமற் போனால் பலாத்காரம் செய்ய எங்களிடம் பலம் இருக்கிறது என்று அறிவிப்பதற்காக இங்கிலீஷ் தளங்களும் கப்பல்களும் தங்கள் தங்கள் ஸ்தானத்தை விட்டு மிஸரத்தை நோக்கி அனுப்பப்பட்டு விட்டன. இங்கிலாந்துடன் போர் செய்ய இன்று எகிப்துக்குச் சக்தியில்லை என்பது வாஸ்தவம். ஆனால் மானத்தையும் உரிமைகளையும் கொடுத்துவிடுவது முறையன்று என்று யோஜித்து ஜகலூல் பாஷாவை பிரதிநிதி சபையும் அரசனும் தன்னைப் பூரணமாகத் தாங்குகின்றனரா என்று பார்ப்பதற்காகத் தான் மந்திரி ஸ்தானத்தை ராஜீனாமா செய்து ஓர் கடிதம் அனுப்பினார். அவருக்கிருந்த பக்தியும் மான உணர்ச்சியும் அரசனுக்கும் மற்ற ராஜதந்திரிகளுக்கும் இருந்திருக்கும் பக்ஷத்தில் அரசன் அவருடைய ராஜினாமாவை அங்கீகரிக்க மறுத்து விட்டிருப்பார்; எந்த மிஸரத்தானும் ஜகலூல் சாலிசெய்யும் மந்திரி பதவியை அடைய எண்ணியிருக்கமாட்டான். ஆனால் வீரயுகம் செத்து விட்டது. அரசன் ஜகலூலின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு விட்டான். புது மந்திரியும் ஆங்கில அரசாங்கத்தின் அக்கிரமமான நிபந்தனைகளையெல்லாம் அங்கீகரித்துக் கொண்டு கொடியைத் தாழ்த்திவிட்டார்.

வலுத்தவன் கைமேல்

சர்வ தேச சங்கத்தைப் பற்றியும் சிறு ஜாதியாரின் உரிமைகளைப் பற்றியும் பெரிய ராஜ தந்திரிகள் பேசும் பேச்சுக்களைக் கேட்டு நம் காதும் புளித்துப் போய்விட்டது. ஆனால் இத் தகைய சம்பவங்கள் உலகில் நிகழும்போது சர்வ தேச சங்கம் நிஷ்டைக்குச் சென்றுவிடுகின்றது. பலஹீனன் கை இன்னும் கீழாகத்தானிருக்கிறது. மகா யுத்தத்துக்கு முன் இச் சம்பவம் நிகழ்ந்திருந்தால் பிரான்ஸூ சும்மா பார்த்துக்கொண்டிருந்திராது. ஆனால் இங்கிலாந்துக்கும் பிரான்ஸூக்கும் உள்ள சம்பந்தம் மிகவும் அபாயமான நிலைமைக்கு வந்து விட்டிருக்கும். ஒரு வேளை போர் கூட நிகழ்ந்திருக்கலாம்.

ஆனால் இன்றைக்கு ஓர் பலஹீனமான அரசாங்கம் பணிந்து விட்டது என்று மிஸர விவகாரம் தீர்ந்துவிட்டது என இங்கிலாந்து நினைத்துக்கொண்டால் அது மனப்பால் குடிப்பதேயாகும். மிஸர விவகாரத்தின் கடைசி அத்தியாயம் இனித்தான் எழுதப் படவேண்டும்.

600 008
160280

புஸ்தக விமரிசனம்

—(*)—

(பண்டிதை அசலாம்பிகையம்மாளால் எழுதப்பெற்றது)

பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் அருளிய காந்தி புராணத்திற்கு நல் வரவு கூறுகிறோம். ஆத்ம சக்தியின் வெற்றி முரசு மிருக பலத்தைத் திடுக்கிடச் செய்யும் இந்த நவ யுகத்திற்கு நாயகனான மஹாத்மா காந்தியடிகளின் சரிதையைப் புராண வாயிலாக சாசுவதப் படுத்திய அம்மையாருக்குத் தமிழ் நாடு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

இக் காவியத்தின் நடையழகும் விருத்தம் அமைந்திருக்கும் பொருத்தமும், ஆங்கில மொழிகளையும், தமிழுக்கு அன்னியமான சொற்களையும் வெகு நயமாகக் கவிகளில் அமைத்திருக்கும் அழகும், மஹாத்மாவின் உயர் வாழ்வில் நடந்தவற்றை விடாது உரைக்கப் பட்டிருக்கும் நுட்பமும் ஆராயுமிடத்தில் இந் நூல் தமிழ் நாட்டிற்கு ஒரு நன்கொடை என்றே எண்ணுகிறோம். தமிழ் வளர்ச்சிக்கு இத்தகைய முதல் நூல்கள் இன்றியமையாதன. இதைப் பாடியருளிய அம்மையாருக்கு நாம் வந்தனம் செலுத்துகிறோம்.

இந்த மூன்றாங் காண்டத்தில் காந்தியடிகள் சிறைக் கோட்டம் நண்ணிய நாள் முதல்—பிறகு வெளிவந்து—நாட்டின் ஒற்றுமைக்காக உண்ணாவிரதம்பூண்ட நாள் முடிய நடந்த வரலாறுகள் அடங்கி யிருக்கின்றன. தமிழை வளர்க்கும் இத்தகைய புத்துணர்ச்சி பெற்ற சிறந்த முயற்சிகளைத் தமிழர் தக்கபடி போற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜல வைத்தியம்:— புதுக்கோட்டை ஸ்ரீ:லக்ஷ்மண சர்மாவினால் எழுதப் பட்டது. புதுச்சேரி நந்திப் பிரசுர ஆலயத்தில் கிடைக்கப் பெறும். (விலை அணா ஐந்து.) கிரௌன் க/௱உ அளவில் ௬0 பக்கம் விஷய பாகம் உள்ளது.

வைத்திய முறைகள் பல மல்கி யிருக்கும் இந் நாளில், கேவலம் இயற்கையை அனுசரித்த, பிரகிருதி நம் தேகத்தைப் பேணிப் போற்றும் முறையை அறிந்து அவ்வழியே போக ஆவலுற்று மேனாட்டு அறிஞர்கள் பலர் அனுஷ்டானத்திற் கண்டிருக்கும் அரும் பெரும் போஷணை முறைகளையும் சிகித்ஸா முறைகளையும் நம் தமிழ்ச் சகோதரர்கள் தம் தாய்ப் பாஷையில் அறிந்து கொள்ள முடியாதிருந்த குறையை இச் சிறு நூல் ஒருவாறு தீர்க்க முற்பட்டுள்ளது. விஷயங்கள் சுருக்கமாகவே குறிக்கப் பட்டிருப்பினும் தெளிவாய் வரையப் பட்டிருக்கின்றன. இம் முறையில் தேர்ந்த வித்துவான் ஒருவனுடைய ஆவசிய மின்றியே, இச் சிறு நூலை வைத்துக் கொண்டு சிகித்ஸா முறைகளை இலேசாகக் கையாடலாம் என்பதே இந் நூலின் பெருமை.

திருக்குறட் குமரேச வெண்பா

ஆசிரியர்:- ஜெகவீர பாண்டியன்

இவ்வருமையான நூலின் மூன்று பாகங்கள் வரப் பெற்றோம். தேவர் குறளை ஈற்றிரண்டடிகளாகக் கொண்டு அவ் வடிகளுக் கேற்ற புராணக் கதைகளை முதலிரண்டடிகளாகக் கொண் [illegible] வெண்பாக்களால் முடிந்த இந் நூல் இரங்கேச வெண்பா, குமரேச வெண்பா, முதலியவற்றைப் போன்றிருக்கிறது. திருக்குறளின் பயனை எல்லோரும் இன்புறப் பெறுவதற்கு இந் நூல் பெரிய துணையாகும். இதிலுள்ள வெண்பாக்கள் அடிதோறும் சுவை சொட்டி, வள்ளுவரின் வாக்கொடு இணையத் தக்கனவாகவே யுள்ளன. இந் நூல் விரிந்த விளக்கவுரையுடன் பாகம் பாகமாய் அச்சிடப்பட்டு வருகிறது. குறள் நீதிகளை இனிய கதைகள் வழியாகத் தெளிவாய்க் காட்டும் இவ் வரிய நூல் தமிழ் மக்களுக்கு ஒரு அரிய விருந்தாக அளிக்கப் பட்டது. இந் நூலுக்கு நாம் மனமுவந்து நல் வரவு கூறுவதோடு, இந் நூலாசிரியரான பெரியாருக்கும் எமது நன்றியைச் செலுத்துகிறோம்.

THE KURAL

OR

The Maxims of Tiruvalluvar

Translated by

Acharya V. V. Subrahmanya Aiyar.

Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.

—(o)—

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition will be ready by the 15th of December, 1924, and will be beautifully bound in cloth.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

The Bala Bharati Bookshop,

Sheramadevi.

தமிழ்க் குருகுல வித்யாலயம்

சேரமாதேவி

—(௦)—

புதிய கல்வி வருஷம், தைமீ ௫உ ஆரம்பிக்கிறது.

—(*)—

ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறைகளில் இலக்கிய ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப் படுகின்றனர்,

கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி, முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கும்

நெசவும் தச்சும் தைமீ முதலே கற்பிக்கப்படும். பயிர்த் தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக!

விவரங்களுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுக.

ஆசாரியன்.

சேரமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, ரா. அனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப் பெற்றது.